Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 331 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 07, வியாழன் 24.10.2013

## வடக்கில் சட்டம், ஒழுங்குக்கு முதல்வரே முழுப் பொறுப்பு

### இப்படிக் கூறுகிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

கொழும்பு, ஒக்.24
"வடக்கில் சட்டம், ஒழுங்கை முதலமைச்சர்தான் நிலைநாட்ட வேண்டும். அதற்கான பொறுப்பு முதலமைச்சருக்குத் தான் உண்டு. விழிப்புக்குழுக்கள், சிவில் பாதுகாப்புக்குழுக்களை அமைத்துப் பொலிஸாருக்கு உதவுவதன் மூலம் வடக்கில் இடம்பெறும் களவு மற்றும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கமுடியும்"
இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று நடைபெற்ற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்தார்.
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் பழைய விடயங்களையே கூறி வீண் குழப்பங்களை ஏற்படுத்தாது வடக்கில் தற்பொழுது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்க

21

## சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### ஆராய்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24
நாவற்குழியில், அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றம் தொடர்பிலும் அங்குள்ள தமிழ் மக்களுக்குக் காணிகள் இதுவரை பகிர்ந்தளிக்கப் படாமை குறித்தும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளப் போவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.
இது சட்ட ரீதியான விடயம் என்பதால் அதனைத் தாம் சட்ட ரீதியாகவே அணுகவுள்ளார் என முதலமைச்சர் மேலும் கூறினார்.
நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக்

21

அல்–குவைதா தாக்கக்கூடும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் எச்சரிக்கை 06

குற்றம் புரிகின்றது அமெரிக்கா 07

இராமநாதன் மகளிர், யாழ். இந்து இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன 22

4ஆவது இடம் எனக்குத் தான் 23

# தமிழ் பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை

### கிளிநொச்சியில் அரச அதிகாரிகள் மேற்கொண்டனர் என நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர்24
வன்னியில் 3 கிராமங்களில் தமிழ் பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை திட்டமிட்ட முறையில் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தைச் சேர்ந்த நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு அறிக்கையிட்டுள்ளது.

> "கிளிநொச்சி மாவட்டத்தின் வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி ஆகிய கிராமங்களிலேயே இந்த செயல் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை வத்திக்கானின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி ஜோசப் ஸ்பிறிற்றேரி ஆண்டகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் பலருக்குப் பலவந்தமாகக் கருத் தடை செய்யப்பட்டதாகக் கூறப் பட்டுள்ளது.
"கடந்த ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கிளிநொச்சியில் இருந்து வந்த 20 தாதியர்கள், குடும்ப நல மாதுக்கள் ஆகியோர் இந்தக் கிராமங்களில் உள்ள ஒவ்

21

## பதவியிலிருந்து விலகினார் வலி.தென்மேற்கு தவிசாளர்

யாழ்ப்பாணம், ஒக். 24
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான பிரச்சினை காரணமாகச் சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.
இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.
வலி.தென்மேற்குப் பிரதேச சபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வந்த காலத்தில் இருந்து தவிசாளர் மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையே முரண் நிலை காணப்பட்டு வருகின்றது.
"நீண்ட காலமாகத் தொடர்கின்ற இந்தப் பிரச்சினை தீர்க்கப் பட்டவில்லை. அதனால் மக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளை திறம்பட முன்னெடுக்க முடியவில்லை. கட்சித் தலைமைக்கு இந்தப் பிரச்சினை தொடர்பில் அறிவித்தும், அவர்களாலும் இது தீர்க்கப்படவில்லை. எனவேதான் சபையின் தவிசாளர் பதவியில் இருந்து விலகுவதாகக் கட்சியின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன்" என்று தவிசாளர் ஜெபநேசன் கூறினார்.
இது தொடர்பில் தமிழ்த்

21

## உள்ளூர் ஏற்றுமதியாளர்களுக்கு இலகு கடன் திட்டங்கள் விரைவில்

### யாழில் உறுதியளித்தார் மத்திய வங்கி ஆளுநர்

யாழ்ப்பாணம், ஒக்.24
ஏற்றுமதி நோக்கம் கொண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் முயற்சியாளர்களுக்கு இலகு கடன்களை அறிமுகப்படுத்த இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கும் என்று ஆளுநர் அஜித் நிவான்ட் கப்ரால் யாழ்ப்பாணத்தில் உறுதிமொழி வழங்கியுள்ளார்.
உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கான செயலமர்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் உரையாற்றுவதற்காக மத்திய வங்கி ஆளுநர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன் போது இலங்கை மத்

21

## பொது நலவாய மாநாட்டில் உரையாற்றும் செய்தி பொய்

### மறுக்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக். 24
கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறும் பொது நலவாய மாநாட்டில், நான் உரையாற்றப்போவதாக வெளியான தகவலில்எதுவிதஉண்மையுமில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் வடக்கு மாகாண முதலமைச்

21

## தண்ணீர்முறிப்புக் குளத்தில் 3 படகுகளுக்குத் தீ வைப்பு

### இனந்தெரியாதோர் அடாவடி

முல்லைத்தீவு, ஒக். 24
முல்லைத்தீவு தண்ணீர் முறிப்புக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று படகுகள் (குல்லா) இனந்தெரியாதோரால் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி எரிக்கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்களுக்குப் பல லட்சம் ரூபா சொத்தழிவு ஏற்பட்டுள்ளதுடன் அந்தப் பகுதியில் பதற்ற நிலை தோற்றியுள்ளதாகவும் தெரிய வருகிறது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணீர் முறிப்புக் குளத்தில் இரண்டு பதிவு செய்யப்பட்ட உள்ளூர் தொழிலாளர் சங்கங்கள் மீன்பிடி நடவடிக்கையில்

21

## துயிலும் இல்லங்களை மீளமைக்க முடியாது

### யாழ். மாவட்டத் தளபதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.24
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் துயிலும் இல்லங்கள் அமைப்பதற்கு இலங்கை அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்று யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரி

21

## ஆட்கொணர்வு மனு விசாரணை ஒத்திவைப்பு

வவுனியா, ஒக்.24
இறுதிப்போரின் போது முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளுடன், இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் உட் பட்டவர்கள் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 7 ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு வவுனியா மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது
பொது மன்னிப்பளிக்கப்படும் என்ற அரசின் உத்தரவாதத்தையடுத்து, இறுதிப்போர் முடிவின்போது, வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்

21

## வடக்கின் கல்வியை மேம்படுத்த ஆலோசனை கேட்கிறது அமைச்சு

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாணக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கல்வி சார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிகைளயும் அனுப்பி வைக்குமாறு பொது மக்கள், ஆசிரியர்கள், கல்வி மான்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.
வடக்கு மாகாணக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பான மீளாய்வு மாநாடு மாகாணக் கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இதன்போதே

21

# பொதுநலவாய மாநாடு குறித்து பொய்ப் பரப்புரை செய்யவில்லை

## மறுக்கிறது கென்ய அரசு

கொழும்பு. ஒக்.24
எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டைப் புறக்கணிக்குமாறு ஆபிரிக்க நாடுகளிடம் கென்யா பரப்புரை செய்வதாக வெளிவந்த செய்தியை கென்ய அரசு மறுத்துள்ளது.
மேலும் இந்த மாநாட்டில் பங்கேற்க கென்யா தயாராகி வருவதாகவும் தாம் மிக உயர்மட்டத்தில் பங்கேற்பது உறுதி எனவும் கென்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுநலவாயத்தில் தனது அங்கத்துவத்தைக் கென்யா பெரிதும் மதிக்கின்றது எனவும் இந்த உறவைப் பாதிக்கும் எவ்வித நடவடிக்கையிலும் அது ஈடுபடாதெனவும் கென்ய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.
கென்ய ஜனாதிபதி உகுறு கென்யாட்டா மற்றும் உப ஜனாதிபதி வில்லியம் றுட்டோ ஆகியோரைச் சர்வதேச குற்ற விசாரணை நீதிமன்றில் நிறுத்தியமைக்கு எதிராகத் தீர்க்கமான நிலைப்பாட்டை எட்டப் பொதுநலவாயம் தவறியுள்ளதையிட்டுப் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்குமாறு ஆபிரிக்க நாடுகளிடையே கென்யா பரப்புரை செய்வதாக அந்த நாட்டு பத்திரிகையான 'ஸ்ரார்' செய்தி வெளியிட்டிருந்தது.
இதை மறுத்தே கென்ய அரசு விசேட அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.
(த)

# இலங்கையில் சூதாட்டத்தை ஊக்குவிக்க உதவவேண்டாம்

## மைக்கல் கிளார்க்கிடம் கோரிக்கை



கொழும்பு.ஒக் 24
இலங்கையில் கசினோ சூதாட்டத்தை ஊக்குவிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி வீரர் மைக்கல் கிளார்க்கிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் கசினோ திட்டத் தூதுவராகச் செயற்பட எடுத்துள்ள முடிவை மைக்கல் கிளார்க் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என இலங்கை அகதிகள் சார்பான குழுவொன்று கோரியுள்ளது.
இலங்கையில் 400 மில்லியன் டொலர் முதலீட்டில் கசினோ திட்டத்தைச் செயற்படுத்த அவுஸ்திரேலியக் கோடீஸ்வரர் ஜேம்ஸ் பாக்கர் தீர்மானித்துள்ள நிலையில் அதன் விளம்பர ஊக்குவிப்புத் தூதுவராகச் செயற்பட மைக்கல் கிளார்க் உடன்பட்டுள்ளார். அது தொடர்பிலான உடன் படிக்கையிலும் அவர் கைச்சாத்திட்டுள்ளார்.
இந்த நிலையில் மைக்கல் கிளார்க் கசினோவுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என அவுஸ்திரேலியத் தமிழ் அகதிகளுக்கான சபையின் பேச்சாளர் ட்ரேவர் கிரான்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.
இலங்கையில் போரில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டதாகச் சுட்டிக்காட்டியுள்ள கிரான்ட், இவ்வாறான நடவடிக்கையில் மைக்கல் கிளார்க் ஈடுபட்டால் இது இலங்கை ஜனாதிபதியின் இரத்தம் தோய்ந்த தோற்றத்தைக் கழுவுவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.
(த)

# பொதுநலவாய சட்டச் சங்கத்தின் விண்ணப்பம் நேற்று நிராகரிப்பு

கொழும்பு. ஒக். 24
பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்குகளின் சட்டம் தொடர்பான விடயங்களில் பொதுநலவாயச் சட்டச் சங்கம் மற்றும் இங்கிலாந்து வேல்ஸ் சட்டத்தரணிகள் குழாம் ஆகியன இடைவருவதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.
குறித்த விண்ணப்பம் ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் நேற்றுப் புதன்கிழமை நிராகரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றுக்கு உதவி புரிபவராகச் சட்டமா அதிபரும் இடைவருவதற்கு விண்ணப்பித்தோர் சார்பில் கலாநிதி சுனில் குரேயும் முன்னிலையினார்கள்.
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானத்தை வறிதாக்கி அதைச் செல்லுபடியற்றதாக்கிய மேல் முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராகச் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பில் நீதிமன்றுக்கு உதவவென இந்த இடைவரவு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
எம்.ஏ.சுமந்திரன் ஜே.சி.வெலியமுன மற்றும் பல சட்டத்தரணிகள் பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(த)

# ஐ.தே.கவின் உறுப்பினர் பதவி நீக்கம்

கொழும்பு.ஒக்
தெவிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் துஷார விஜயசூரிய தன்னைப் பதவி நீக்கம் செய்யும் கடிதத்தை நேற்றுப் புதன்கிழமை பெற்றுக் கொண்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி மாத்தறையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இவர் பங்குபற்றியிருந்ததாகக் கூறப்படுகிறது.
'ஆம், நான் இந்தக் கூட்டத்தில் முக்கிய பங்காற்றினேன். இதனால் தான் அவர்கள் என்னைப் பதவி நீக்கம் செய்தனர். மக்கள் என்னுடன் உள்ளனர். நான் இப்போதும் பிரதேச சபை உறுப்பினர் தான். மக்களுக்குச் சேவை செய்ய எனக்குப் பதவி அவசியமானதல்ல' என அவர் கூறினார்.
(த)

# 2013 வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதை உறுதி செய்க

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.24
2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியலில், பெயர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தங்களது பெயர்கள் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை பற்றிச் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு சகலரையும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கேட்டுக்கொண்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்புப் பணிகளின் இறுதிக் கட்டம் தற்போது இடம்பெற்று வருகின்றது. வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தமது பெயர்களை சேர்த்துக் கொள்ள முடியாமல் போனவர்கள், தமது பெயர்களை சேர்த்துக் கொள்ளுமாறு உரிமை கோர இந்த மாதம் 2 ஆம் திகதியிலிருந்து இந்த மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
இந்தக் காலப்பகுதிக்குள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் மற்றும் ஒவ்வொரு கிராம அலுவலகங்கள் ஆகியவற்றில் 'ஏ' பட்டியல் மற்றும் 'பி' பட்டியல் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நீக்கப்படுபவர்கள் உரிமைக் கோரிக்கைப் படிவத்தைச் சமர்ப்பிக்க முடியும்.
இந்த நடவடிக்கைகளுக்கான இறுதித் திகதி எதிர்வரும் 30 ஆம்திகதியாகும்.எனவே அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு உரிமைக் கோரிக்கைப் படிவங்கள் மாவட்ட தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
2014 ஆம் ஆண்டில் நடத்தப்படும் எந்தவொரு தேர்தலுக்கும் தயாரிக்கப்படும் 2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்களார் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும்.
தேர்தலின்போது வாக்காளர் பெயர்பட்டியலில், பெயர் சேர்க்கப்படவில்லையென்று முறைப்பாடு செய்யப்பட்டாலும், வாக்காளர் பெயர்ப் பட்டியல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் எந்தவொரு பெயரையும் சேர்க்க முடியாது.
2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயரைச் சேர்த்துக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுள்ளது.
(த-5)

# ஆளும் கட்சி உறுப்பினரின் பிரேரணையால் சிக்கல் நிலை

## பிரதேச சபைச் செயற்பாடுகள் முடங்கும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஒக்.24
"தவிசாளர் ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளையும், செயற்றிட்டங்களையும் சபையின் அனுமதியின்றிச் செயற்படுத்த முடியாது" என்ற பிரேரணை வலி.தென்மேற்கு பிரதேச சபையில் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்டது. இதனால் சபை நடவடிக்கைகள் முடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
"எரிபொருள் கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, மின்சாரக் கொடுப்பனவு, மக்களின் அத்தியாவசியத் தேவைகளான குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல் நிலை ஏற்படும். சபையின் அனுமதியைப் பெறுவதாயின் ஏழு நாள்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு கூட்டம் கூட்டப்பட வேண்டும். எனவே இந்தப் பிரேரணை சபையின் செயற்பாடுகளை முடக்கும்' என்று சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் கூறினார்.
இதுவரை காலமும் 20 ஆயிரம் ரூபாவாக இருந்த இந்தத் தொகையைத் தற்போது குறைப்பது பொருத்தமற்றதாகவே இருக்கும் என்று அவர் கூறினார்.
இந்த நிலையில் இந்தப் பிரேரணை முன்மொழிவு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
(த-5)



கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படவுள்ளது. இந்த நிலையில் பொதுமக்களின் பாவனைக்காக தற்போது இந்த வீதி திறந்து விடப்பட்டுள்ளது.
(த)

# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.24
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராக என்.மகேந்திரராஜா மாகாண கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் தற்பொழுது சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றி வருகிறார். இந்து ஆரம்பப்பாடசாலையின் பிரதி அதிபராக உள்ள எஸ்.தர்மசீலன் தொடர்ந்தும் அங்கு பணியாற்றுவார். சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செவிப்புல பரிசோதனை இயந்திரம் பழுதடைந்ததால் சிகிச்சை இல்லை

## யாழ்.போதனா வைத்தியசாலையில்


யாழ்ப்பாணம், ஒக்.24
யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள செவிப்புலன் பரிசோதனை இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் நோயாளர்களுக்கு செவிப்புலச் சிகிச்சையை வழங்க முடியவில்லை. அவர்களை திருப்பி அனுப்ப வேண்டியுள்ளது. இயந்திரத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்கு அறிவித்தும் இதுவரை திருத்தப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.
கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்ட நோயாளி ஒருவரை குறித்த பிரிவினர் இயந்திரம் பழுதடைந்து விட்டதாகத் தெரிவித்து திருப்பி அனுப்பியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கேட்ட போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அந்த இயந்திரத்தைத் திருத்தித் தருமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளோம். சுகாதார அமைச்சே திருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதே சிகிச்சையை வவுனியா வைத்தியசாலைக்கும் சென்று பெறமுடியும் - என்றார்.
கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை சின்னத்தங்கம் (வயது - 62) என்பவரே யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.
கடந்த 8 ஆம் திகதி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறக் கூடியதாக ஏற்பாடுகளுடன் செல்லுமாறு கிளிநொச்சியில் வைத்தியசாலை வைத்தியர் கூறியதற்கேற்ப அவர் தனது மகளான ஆசிரியை ஒருவரையும் விடுமுறையில் அழைத்து வந்திருந்தார்.
யாழ்.போதனா வைத்திய சாலையில் குறித்த சிகிச்சைப்பிரிவில் சுமார் 45 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் அன்று இருந்துள்ளனர். அவர்களில் 30 ஆவது நபராக இவர் இருந்துள்ளார் முற்பகலிருந்து மதியம் வரை காத்திருந்த போதும் ஏனைய நோயாளர்களைப் பார்வையிட்ட வைத்தியர்கள், எனது மருத்துவக் குறிப்புப் புத்தகத்தைக் கூட பார்வையிடவில்லை. செவிப்புலன் பரிசோதனை இயந்திரம் பழுதடைந்துள்ளது. அதனைத் திருத்தியமைக்க இரண்டு மாதங்களுக்கு மேலாகலாம் என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பி விட்டனர் என பாதிக்கப்பட்ட நோயாளி தெரிவித்தார்.
(ஐ-4-6)

# அம்புலன்ஸ் சாரதிக்கு இரவில் கத்திக் குத்து

## நேற்றுமுன்தினம் அக்கராயனில் சம்பவம்

அக்கராயன், ஒக்.24
அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் சாரதி ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரின் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவத்தில் ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த சி. சுதர்சன் (வயது -38) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் வீட்டில் இருந்து பணிக்காக மருத்தவமனைக்கு சென்று கொண்டிருந்த சமயம் ஈச்சங்குளம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த 4 பேர் இவர் மீது போத்தல்களால் தாக்கி கத்தியால் குத்தியுள்ளனர்.
காயமடைந்தவர் கூக்குரல் இட அயலவர்கள் கூடியதால் இனந்தெரியாதவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.
உடனடியாக அவர் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு கிளிநொச்சிப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (ஐ-18)

## அபராதம்




தென்மராட்சி, ஒக்.24
அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)


வடமாகாண விளையாட்டுத்துறை தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது விளையாட்டுத்துறை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (வ-7)

## காலாவதியான குடிதண்ணீர் போத்தல்கள் அழிக்கப்பட்டன

தென்மராட்சி, ஒக்.24
சுகாதார அமைச்சின் பதிவு காலம் காலாவதியான நிலையில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்ட 19 லீற்றர் கொள்ளளவு கொண்ட 63 குடிதண்ணீர் போத்தல்கள் அழிக்கப்பட்டன.
உணவுப் பாதுகாப்பு வாரத்தையொட்டி கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் ஏ.ஜே.றொனால்ட் தலைமையிலான குழுவினர் கொடிகாமம் நகர்ப் பகுதியில் உணவு கையாளும் நிலையங் களை பரிசோதனை மேற்கொண்ட வேளையில் இவை வாகனத்தில் கொண்டு வரப்பட்டு கடைகளுக்கு விற்பனைக்காக விநியோகிக்கப்பட்டன.



இதன்போதே பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் குடிதண்ணீர்ப் போத்தல்கள் பரிசோதிக்கப்பட்டன.
போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த 'லேபல்'களில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட பதிவு காலம் காலாவதியான நிலையில் காணப்பட்டதால் அவற்றை விற்பனை செய்ய அனுமதி மறுத்த பொது சுகாதாரப் பரிசோதகர் விநியோகத்தரின் ஒப்புதலுடன் அவற்றை நிலத்தில் ஊற்றி அழிக்குமாறு கூறியதையடுத்து 63 போத்தல்களின் தண்ணீரும் நிலத்தில் ஊற்றப்பட்டது. (வ-9)

## சட்ட விரோதமாக மதுபானம் விற்றவர்கள் மாட்டினர்

மன்னார், ஒக்.24
மன்னார் மது வரித்திணைக்களம் மன்னார் பகுதியில் கடந்த சில தினங்களாக மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் சட்ட விரோதமாக மனுபானம் விற்ற 4 பேர் மாட்டிக்கொண்டனர்.
மன்னார் மது வரித்திணைக்கள பொறுப்பதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தலைமையிலான குழுவினர் பேசாலை, பனங்கட்டுக்கொட்டு மற்றும் கீரி ஆகிய மூன்று கிராமப் பகுதிகளிலும் மேற்கொண்ட திடீர் சோதனையில் கள், பியர் ரக மதுபானங்களை சட்ட விரோதமாக விற்ற நான்கு பேர் அகப்பட்டுக் கொண்டனர்.
அவர்களை நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனரட்னம் முன்னிலையில் முற்படுத்திய போது 4 பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.
இதன் போது சட்டவிரோதமாக கள் விற்ற இருவருக்கு தலா 1,500 ரூபாவும், பியர் விற்றவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், கள் விற்ற மற்றும் ஒருவர் ஏற்கெனவே இதே குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டிருந்ததால் அவருக்கு 2, 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-12)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் சேவைக்கு அனுமதியில்லை

## மன்னார் தனியார் பஸ்களுக்கு

மன்னார், ஒக்.24
மன்னார் மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சேவைகளில் ஈடுபடுவதற்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டு வருவதாக அந்தச் சங்கத்தின் தலைவரான ரி.ரமேஸ் தெரிவித்தார்.
வடமாகாண சபை அமைச்சர் ப.டெனீஸ்வரனுக்கும் மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஏனைய மாவட்டங்களில் இருந்து நந்திக்கடல், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குத் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.
ஆனால் மன்னாரில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நாம் பஸ் சேவைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.
முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எமக்கு அனுமதியை வழங்கியுள்ள போதிலும் அந்த மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சேவையினரால் எமக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.
குறித்த சேவை தொடர்பில் நாம் முல்லைத்தீவு மாவட்ட சங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் எந்த வித பயனும் ஏற்படவில்லை.
இது மட்டுமல்ல மன்னாரில் இருந்து கிளிநொச்சிக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது. மன்னாரில் இருந்து முழங்காவில், ஜெயபுரம், ஸ்கந்தபுரம் ஊடாக கிளிநொச்சி செல்லும் சேவைகள் நீண்டகாலமாகவே பாதிப்படைந்த நிலையில் உள்ளன.
தற்போது மன்னாரில் இருந்து பயணிகள் வவுனியா சென்று அங்கிருந்தே கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
எனவே மன்னார் மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு உடனடியாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் பஸ்கள் சேவையில் அனுமதி அளிக்கப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். (க-12)

> முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எமக்கு அனுமதியை வழங்கியுள்ள போதிலும் அந்த மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சேவையினரால் எமக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.



## வீட்டை எரித்தவர் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஒக்.24
தனது வீட்டுக்கு தீ வைத்துச் சேதத்தை ஏற்படுத்திய பாலாவி தெற்கு வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று உத்தரவிடப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.
இதே வேளை மனைவி மற்றும்பிள்ளையை தாக்கிய வெள்ளாம் போக்கட்டி வாசியை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.
இவரது மனைவியும், பிள்ளைகளும் குறித்த நபர் தம்மைத் தாக்கினார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேக நபரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினார்.
வழக்கை விசாரித்த நீதிவான் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணை யில் செல்ல அனுமதித்தார். (வ-9)

## எப்போது கிடைக்கும் விடிவு?



தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக முற்றவெளியில் அமைக்கப்பட்ட நினைவாலயம் தற்போது பெய்து வரும் மழையால் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது. தற்போது பெய்யும் மழையால் வெள்ளம் வழிந்தோடி இந்த நினைவாலயத்தை முற்றுகையிடுவதால் வெள்ளத்தில் நீந்திய நிலையிலேயே நினைவாலயம் காணப்படுகிறது. எனவே நினைவாலயத்தில் வெள்ளம் தேங்காதவாறு அதை சீர்செய்ய தற்போதைய வடமாகாண சபை அரசு முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## வைத்தீஸ்வரா நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது நேற்று

யாழ்ப்பாணம், ஒக்.24
யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தின் நாகமுத்து அரங்கில் அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
கல்லூரி முன்னாள் அதிபர்களின் உருவப்படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரி ஆலயக் குரு பிரம்மஸ்ரீ ம.முருகானந்தசர்மா, வணபிதா பி.எவ்.இராசசிங்கம், மௌலவி எம்.ஆர்.எம்.முபாரக் ஆகியோரின் ஆசியுரைக ளும் தலைமையுரையும் இடம்பெற்றன.
பிரதம விருந்தினர், பிரதி அதிபர் செல்வி ச.சின்னத்துரை, நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.
காலை அமர்வில் நினைவுரையை முன்னாள் பிரதி அதிபர் திருமதி செ.பொன்னுச்சாமி நிகழ்த்தினார். பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான பரிசில்களையும் நிறுவுநர் நினைவுக் கேடயத்தையும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கல்லூரி முதல்வர் மு.மகேந்திரன் ஆகியோர் வழங்கினர். (வ-7)





### உணவகங்களின் உரிமையாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.24
யாழ். மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆசீர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள 'கிறீன் கிறாஸ்' ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் உணவுப் பாதுகாப்பு உணவுச் சட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதுடன் உணவு தயாரிப்புச் சம்பந்தமான செய்முறைப் பயிற்சியும் இடம் பெறவுள்ளது.
எனவே யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்கள், ஹோட்டல்கள், தேநீர்ச் சாலைகள், வெதுப்பகங்கள், குளிர்பான விற்பனை நிலையங்கள் மற்றும் தங்குமிட விடுதிகளுக்குரிய உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (த-400)

வேளாண்மையை அதிகரிக்க வேண்டுமானால்

# இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் மீட்கப்படல் அவசியம்

வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.24
விவசாய நிலங்கள், திணைக்களங்களுக்குச் சொந்தமான பண்ணைகள் என்பன இராணுவத்தினர் வசம் உள்ளன. விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் அவற்றை நாம் மீட்க வேண்டும். அதற்கான முயற்சிகளில் நிச்சயமாக நாம் ஈடுபடுவோம் என விவசாயிகளுடனான சந்திப்பின்போது கருத்து வெளியிட்டார் விவசாய, கால்நடை, நீர்ப் பாசன அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
யாழ்.மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமாரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் விவசாயிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சருக்கு தெரியப்படுத்தினர்.
இதன்போது அமைச்சர் ஐங்கரநேசன் மேலும் தெரிவித்ததாவது:-
எமது பொருளாதாரத்தின் முக்கிய அம்சம் விவசாயம் தான். பெரிய தொழிற்சாலைகள் இயங்கக்கூடிய தகுந்த நில அமைப்பைக் கொண்ட தல்ல எங்களது பொருளா தாரம். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை மூன்று தசாப்தப் போர் பல்வேறு வழிகளிலும் அழித்துள்ளது என்பது உண்மை.
எங்களது விவசாய நிலங்கள் இராணுவத்தின் வசம் உள்ளன. திணைக்களங்களுக்கு சொந்தமான பண்ணைகள் கூட பெருமளவில் இராணுவத்தினர் வசம் இருக்கின்றன. விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கம் இருந்தால் அந்த நிலங்கள் மீட்கப்பட்டு விவசாயிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளில் கண்டிப்பாக நாம் ஈடுபடுவோம்.
கூடுதலான அறுவடையைப் பெறுவதற்கான முயற்சிகளும் அதிகமாக இரசாயனங்களைப் பயன்படுத்துவதும், நிலத்தடி நீர்வளத்தை மாசு படுத்தும். இதனால் சூழலியல் ரீதியாக எமக்குப் பாதிப்புக்கள் ஏற்படவுள்ளது.
ஆய்வு ரீதியாக இதனை நாம் மேற்கொண்ட போது எங்கெல்லாம் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறதோ அந்தக் பகுதிகளில் கிணறுகளின் தண்ணீரில் நைதரசன் அளவு கூடுதலாக இருக்கின்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் தண்ணீரில் நைதரசன், பொஸ்பரஸ் அளவுகள் குறித்தளவுதான் இருக்கலாம் என நிர்ணயித்துள்ளது.
அந்த அளவையும் தாண்டித்தான் விவசாயக் கிணறுகள் பலவற்றில் இத்தகைய இரசாயன அளவு அதிகரித்து இருப்பதை அவதானிக்க முடிகிறது.
இதனால்தான் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே இவற்றை ஒப்பிட்டுப் பார்த்து விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டியுள் ளது.
எனவே விவசாயத் திணைக்களம் இவற்றுக்கான தொடர்புகளை ஆராய்ந்து உறுதியான முடிவை எடுக்க வேண்டியுள்ளது. இதற்காக உங்களிடமிருந்து நாம் ஒத்துழைப்பை எதிர் பார்க்கிறோம். அதிகரித்த கிருமிநாசினிகளின் பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை நீங்கள் கண்டறிய வேண்டும். அளவுக்கதிகமாக இந்தப் பீடைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் போது அவற் றின் தாக்கம் அதிகரித்துக் கொண்டு போகிறதே தவிர குறைவதாக இல்லை.
மருந்து விற்பனை நிலையங்களுக்கான கட்டுப்பாட்டை ஏற்படுத்த எமது திணைக்கள அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.
எங்களுடன் கலந்தாலோசித்து எந்த மருந்து என்ன அளவு தேவை என் பதற்கான பரிந்துரைகளைப் பெற்று சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய கடப்பாடு உங்கள் அனைவருக்கும் உண்டு-என்றார். (வ-7)

## கன்னி அமர்வு ஒத்திகை இன்று

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான ஒத்திகை இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
25 வருடங்களின் பின்னர் முதன் முதலாக வடக்கு மாகாண சபைக்கான கன்னி அமர்வு நாளை வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு கைதடியிலுள்ள வட மாகாண சபைக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.
இதற்கான ஒத்திகை நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு வடக்கு மாகாண சபையின் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது. (து-5)

# கிருமி நாசினி விற்பனையாளருக்கு விவசாய திணைக்களத்தால் பயிற்சி

அச்சுவேலி, ஒக்.24
விவசாயப் பயன்பாட்டுக்கான கிருமிநாசினி மற்றும் பீடை நாசினி விற்பனை நிலையங்களில் விற்பனையாளர்களாகப் பணிபுரிவோருக்கு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் பயிற்சி வழங்கி வருகிறது. முதற்கட்டமாக 38 பேர் பயிற்சி பெறுகின்றனர். இரண்டாம் கட்டமாக ஏனைய 37 பேருக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் 75 கிருமிநாசினி விற்பனை நிலையங்கள் உள்ளன.
கிருமிநாசினி மற்றும் பீடை நாசினி விற்பனை நிலையங்களுக்கு செயற்பாட்டுக்கான அனுமதிப்பத்திரம், விற்பனை நிலையங்களில் பணிபுரிவோர் தொழில் சார் நிலை யில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட வுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விவசாயிகளுக்கு விற்பனை நிலையங்களில் பணிபுரிவோர் தவறான முறையில் வழிப்படுத்தல்களை மேற்கொள்கின்றனர். விவசாயிகளும் அவர்களின் வழிப்படுத்தலுக்கு அமைய பொருத்தமில்லாத மருந்துவகைகளை கொள்வனவு செய்து தமது விருப்பத்துக்கு ஏற்ப மிகக் கூடிய அளவு பயன்படுத்துகின்றனர். இதனால் ஏற்படும் பக்கவிளைவுகளை மரக்கறி பாவனையாளர் அதிகமாக எதிர்கொள்கின்றனர்.
மண் ணில் தாக்கம் ஏற்படுகின்றது. நிலக்கீழ் நீர் இரசாயனத் தாக்கத்துக்கும் பாதிப்புக்கும் உள்ளாகின்றது. அத்துடன் விவசாயிகள் நட்டம் அடைவதால் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு ஒழுங்கு படுத்தப்பட்ட சில நடைமுறைகள் பின் பற்றப்படவுள்ளன.

முதற்கட்டமாக 38 பேர் பயிற்சி பெறு கின்றனர். இரண்டாம் கட்டமாக ஏனைய 37 பேருக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

- விற்பனை நிலையங்களுக்கு வருடம் தோறும் விற்பனைக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்.
- திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட மருந்து வகைகளை மட்டும் விற்பனை செய்ய அனுமதித்தல்.
- பயிற்சி பெற்ற விற்பனையாளர்களை பணியாளர்களாக பயன்படுத்துல்.
- விவசாயிகள் மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்றமுறையில் திணைக்கள அதிகாரிகள் ஊடாக பரிந்துரை செய்யப்படும் மருந்து தொடர்பான பரிந்துரைப் பத்திரத்தை வழங்குதல்.

குறித்த விடயங்கள் அடுத்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும். அவற்றை மீறும் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (வ-11)

## நீதிமன்றத்தில் கைபேசி ஒலித்ததால் தண்டம்

மன்னார் நீதிமன்றத்தில் கைத் தொலைபேசியை ஒலிக்கச் செய்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த போது அங்கு சமுகமளித்திருந்த ஒருவரின் கைத்தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. உடனடியாக அந்த நபரைக் கைது செய்த நீதிமன்றப் பொலிஸார் அவரை நீதிபதி முன்னிலையில் முன்னிலைப் படுத்தினர்.
குறித்த நபர் தாம் புரிந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவரை எச்சரித்த நீதிபதி ஆயிரம் ரூபாவை தண்டமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார். மேலும் நீதிமன்றத்துக்குள் வரும்போது கையடக்கத் தொலைபேசிகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்ற அறிவித்தலைக் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் நீதிபதி தெரிவித்தார். (க-12)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை விவேகானந்தன்

(ஆனந்தன் கராஜ் உரிமையாளர்)



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட அப்புத்துரை விவேகானந்தன் நேற்று (23.10.20013) புதன்கிழமை காலமானார்.
அன்னார் அப்புத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், இராசையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சூரியகுமாரன், ஜீவகலா, உதயகுமாரன், சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை பி.ப.2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச் சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கத்தானை, சாவகச்சேரி. (33260) (17.14)
தகவல்: பிள்ளைகள், 0777 548738, 0777 838202

## மரண அறிவித்தல்

விஸ்வப் பிரம்மஸ்ரீ

### வடிவேலு சண்முகலிங்கம் ஆச்சாரியார்



திருநெல்வேலி பத்திரகாளி கோயி லடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சண்முகலிங்கம் ஆச்சாரியார் நேற்று (23.10.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார்ரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். (33258) (10,14)
தகவல்: மகள்- மா.இராஜபவானி, மருமகன்- சி.மாணிக்கவாசகர்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் ஆனந்தராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ இணுவில் இந்துக் கல்லூரி)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஆனந்தராசா நேற்று (23.10.2013) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியவேணியின் அன்புக் கணவரும், புவ னேஸ்வரியின் சகோதரரும், சிவசக்தி, ஜெயமோகன்ராஜ் (சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில் வடமத்தி), தயானி (கலைப்பீட மாணவி, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான க.குலேந்திரா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் கோப்பாய்), க. சத்தியமூர்த்தி (தபாலதிபர், தெல்லிப் பழை), ஜெ. அருட்சோதி, மற்றும் யோ. கமலவேணி, க.சுந்தர மூர்த்தி (இளைப்பாறிய வைத்திய ஆய்வுகூட நுண்ணாய்வாளர்), க. இரவீந்திரன் (கிராம அலுவலர், இணுவில் மேற்கு), சி. விஜய வேணி, க. கலாவதி (ஆசிரியை யா/ இணுவில் இந்துக்கல்லூரி), க. சண்முகேந்திரன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), கு. இராசரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை நண்பகல்12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 5671111

## மரண அறிவித்தல்

### திருமதி காந்திமதி துரைச்சாமி (பேபி)



கோயில் குடியிருப்பு சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைச் சாமியின் (இளைப்பாறிய தபாலக அலுவலர் (m.s.o-சாவகச்சேரி) அன்பு மனைவி திருமதி காந்திமதி துரைச்சாமி நேற்று (23.10. 2013) புதன்கிழமை காலமானார்
அன்னார் காலஞ்சென்ற செல்லையா-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், லம்போதரன் (Teacher , Gurutalawa Muslim Cental College), திருமதி தபோதினி சிவதாஸ் (கனடா) ஆகி யோரின் அன்புத் தாயும், காலஞ்சென் ற திரவியம் பரமசாமி, பவளராணி பரமசாமி (இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), இராமச்சந்திரன் (கனடா), மகேஸ்வரி குலேந்திரன், காலஞ்சென்ற செல்வராசா (இளைப்பாறிய MPCS ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதாஸ் (கனடா), ஜெயந்திலம்போதரன் (Urban Council, Happutala) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான அ.பரமசாமி, க. பரமசாமி மற்றும் சந்திரபூபதி (ராணி-கனடா), குலேந் திரன், காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ் சென்ற கந்தையா, துரைச்சாமியின் ஒன்றுவிட்ட சகோதரியும், நாகராசா (இளைப்பாறிய CTB சாரதி), குணராசா (குணம் - கொழும்பு) ஆகியோரின் சிறிய தாயும், வர்ஜன், வர்டஜா, (Welimada International School), பானுஜா, திவ்ஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை பி.ப. 2.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனத்துக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி, சாவகச்சேரி. 077 6161880
தகவல்: து. லம்போதரன் (மகன்), ப. பரணிதரன் ( HNB கைதடி), ப. பாலேந்திரா (midland vedeo)

## வெடி வைத்தவர் காயமடைந்தார் கைகளில்

பாறைக் கற்களுக்கு வெடி வைத்துத் தகர்க்க முயன்றவர் உரிய நேரத்தின் முன்னரே குறித்த வெடி வெடித்தமையால் கைகளில் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் ஈவினை மத்தாள் ஓடையைச் சேர்ந்த குடும்பஸ்தரான செ.அன்புகரன் (வயது-38) என்பவரே காயமடைந்தவராவார்.

ஈவினை சந்தியில் உள்ள தனியார் காணிகளில் உள்ள கற்பாறைகளை வெடி வைத்துத் தகர்க்கும் நடவடிக்கையில் குறித்த நபர் ஈடுபட்ட வேளையில் தவறுதலாக இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளில் பரவலாக தனியார் காணிகளில் உள்ளகற்களை அகற்றும்பணிகள் கடந்த பல மாதங்களாக இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் அரச அலுவலர்கள் எவரும் நடவடிக்கை எடுப்பதில்லை .

இதேவேளை பாறைக்கற்கள் அகழ்வதாக இருந்தால் கிராம அலுவலர்கள்மூலம்கனியவள அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்பது கட்டாயமாகும். அவ்விதம் அனுமதி பெறாமலேயே இவ்வாறு கற்பாறைகள் அகழப்படு கின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)

## செயற்குழு கூட்டம்

நெல்லியடி, ஒக்.24

கரவெட்டி பிரதேச செயலகம் நடத்தும் சமுர்த்தி, சமூக அபிவிருத்தி மன்றச் செயற்குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-35)

## மீளாய்வுக் கூட்டம்

நெல்லியடி, ஒக்.24

மாவட்ட உலக உணவுத் திட்ட மீளாய்வுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-35)

# பரவைக்குளம் பகுதியில் அதிகரிக்கும் மயிர்க்கொட்டியின் தாக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.24

திருநெல்வேலி, பரவைக்குளம் பகுதியில் மயிர் கொட்டிப் புழுக்கள் அதிகரித்துள்ளன.

அந்தப் பகுதியிலுள்ள கைவிடப்பட்ட தனியார் காணிகளில் ஆமணக்கு உட்பட பற்றைகள் அதிகரித்து ஏற்கனவே டெங்கு நுளம்பு உற்பத்தி நிலையங்களாக இருந்த இலைகளில் தற்போது மயிர் கொட்டிப் புழுக்கள் நிறைந்துள்ளன.

சுற்றாடலில் உள்ள குடியிருப்புக்களில் இவை கூட்டமாக நுழைவதால் குடியிருப்பாளர்கள் தமது பணிகளின் மத்தியில் மயிர்க் கொட்டிப் புழுக்களை அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை வீடுகளில் சமைக்க முடியாத நிலை உள்ளதாகவும் உணவுக்குள் கூட அவை விழுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கும் இந்த வளவுகளில் விஷப் பிராணிகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதால் அச்சமடைந்துள்ள மக்கள் மயிர்கொட்டிப் புழுவின் அதிகரிப்பால் மேலும் விசனமடைந்த நிலையில் உள்ளனர்.



குடியிருப்புக்கள் இல்லாத வெற்றுக் காணிகளை தமது உடைமையாக்கித் துப்புரவு செய்வது எனவும் உரிமையாளர்கள் வந்ததும் அவர்களிடம் அதற்கான செலவீனங்களை அறவிடுவது எனவும் உள்ளூராட்சி மன்றங்கள் அறிவித்திருந்தன. எனினும் அது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-7)

### ஊழியர் சேமலாப நிதி

# விவரங்களை கணினிமயமாக்க உறுப்பினர்கள் ஒத்துழைக்குக

### *தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் வேண்டுகோள்*

அச்சுவேலி, ஒக்.24

"ஊழியர் சேமலாப நிதி உறுப்பினர் களின் விவரங்கள் கணினி மயப் படுத்தப்பட்டு சுயவிவரக் கோவைகளைச் சீர்செய்ய உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமது விவரங்கள் மற்றும் கைவிரல் அடையாளங்களை அலுவலக நேரத்தில் பண்ணையில் உள்ள காரியாலயத்தில் வழங்கி தமது தகவல்களை கணினி மயப்படுத்துவதற்கு உதவ வேண்டும்".

இவ்வாறு தொழிற் திணைக்களத்தின் வடக்கு மாகாண பிரதி ஆணையாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதி பயனாளிகளின் கொடுப்பனவுகளை உரிமையாளர்களுக்கும் அவர்களின் உரிமையான வாரிசுகளுக்கும் தகுந்த முறையில் உரிய வேளையில் கிடைக்கச் செய்வதற்கு வசதியாக தொழிற் திணைக்களம் ஊழியர் சேமலாபநிதி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கணினி மயப்படுத்துவதோடு சம்பந்தப்பட்டவர்களின் கோவையையும் சீர்செய்து வருகின்றது.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களின் விவரங்களைக் கணினி மயப்படுத்துவது, உறுப்பினர்களின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்வது என்ற தீர்மானத்துக்கு அமைய ஊழியர்களுக்கு வசதியான முறையில் அவர்களின் விவரங்கள் பொருத்தமான அறிவித்தலுடன் பதிவு செய்யப்பட்டன.

குறித்த வேலைத்திட்டத்துக்கு உரியமுறையில் தகவல்களை வழங்காத நிலையில் மேலும் பலர் இருந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகதொழிற்திணைக்களத்தின் வடக்கு மாகாண பிரதி ஆணையாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் கருத்துத் தெரிவித்ததாவது:

ஊழியர் சேமலாப நிதியில் இணைந்துள்ள உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் உரிய வேளையில் வழங்கப்பட வேண்டும். அவர்கள் இல்லாத இடத்து அவர்களது சட்டரீதியான வாரிசுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் திணைக்களம் பொருத்தமான ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதிக்கு கொடுப்பனவைச் செலுத்தும் உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை, கைவிரல் அடையாளம் என்பன உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு கணினி மயப்படுத்துவதோடு அவர்களின்சுயவிவரக்கோவைகளும் சீர்செய்யப்பட்டு வருகின்றது. இதில் மேலும் பலர் தகவல் தராமல் இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் அலுவலக நேரத் தில் பண்ணையில்உள்ளதிணைக்களத்துக்கு நேரில் சமுகம் தந்து விவரங்களை வழங்கி உதவ வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

தென்மராட்சி, ஒக்.24

தென்மராட்சி கிழக்குப் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக எழுதுமட்டுவாழ் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், உசன் விடத்தற்பளை, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய பகுதிகளிலும் அதனைத் தொடர்ந்து கொடிகாமம் வடக்கு, மத்தி, தெற்கு கச்சாய், அல்லாரை வெள்ளாம்போக்கட்டி, பாலாவி, கெற்பேலி ஆகிய பகுதிகளிலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமெனவும் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (வ-9)


## தனங்களப்பு வீதிக்கு சாவகச்சேரி மீன் சந்தை

தென்மராட்சி, ஒக்.24

சாவகச்சேரி பொதுச்சந்தையுடன் இயங்கி வரும் மீன் சந்தை விரைவில் தனங்களப்பு வீதிக்கு மாற்றப்படவுள்ளது.

80 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மீன் சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இந்த வாரம் இடம் பெறவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை, பொது நூலக கட்டடத்தில் இயங்கிவரும் வருமானப்பகுதியைக்கணினி மயப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதால் விரைவில் நகர சபைக் கட்டடத்தில் வருமானப் பகுதி இயங்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (வ-9)



சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக வளாகத்தில் நடத்திய சிரமதானப் பணியில் நூலக ஆலோசனை அபிவிருத்திச் சபை, பிரதேச சபை உத்தியோகத்தர்கள், நூலக வாசகர் வட்டத்தினர், பொதுமக்கள் ஆகியோர் சிரமதானத்தில் ஈடுபடுகின்றனர். (வ-9)

## சாவகச்சேரி நகர சபையில் உள்ளூராட்சி வார நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.24

உள்ளூராட்சி வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வான மக்கள் பயன்பாட்டுத் தினமான இன்று சாவகச்சேரி நகரசபையினர் பல்வேறு வகையான போட்டிகளையும் நிகழ்வுகளையும் நடத்தவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான கட்டு ரைப் போட்டி, சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கிடையிலான உள்ளூராட்சி வாரம் தொடர்பான கட்டுரைப் போட்டி, முன்பள்ளிகளுக்கிடையில் உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகளை பிரதிபலிக்கக் கூடியதான வினோத உடைப் போட்டி ஆகியவையும்-

நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நகரசபையின் செயற்பாடுகள் சேவைகள் தொடர்பான கலந்துரையாடலும்- சிறந்த சன சமூக நிலையத்தைத் தெரிவு செய்தல், சிறந்த உணவகம், தேநீரகம், வெதுப்பகம் ஆகியவற்றைத் தெரிவு செய்தலும் இடம்பெறுமென நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

# இரு தினங்கள் நடைபெற்ற புத்தகப் பெருவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.24

இந்து சமயப் பேரவையின் அனுசரணையுடன் சர்வானந்தமய பீடம் நடத்திய புத்தகத் திருவிழா கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடை பெற்றது.



வாழ்நாள் பேராசிரியரும் இந்து சமயப் பேரவையின் தலை வருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடை பெற்ற முதல் நாள் நிகழ்வில் கோப்பாய் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சரசர்மா, நீர்வேலி சிவசிறி சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் ஆகியோரின் உருவப் படங்களை அவர் திரை நீக்கம் செய்து வைத்தார். விழாவில் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் உரை நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் உரையை யாழ். இந்திய தூதரக துணைத் தூதர் வி.மகாலிங்கம் நிகழ்த்தினர்.



ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 2 ஆம் நாள் நிகழ்வுகள் முதுபெரும் எழுத்தாளரும் இந்து சாசனம் ஆசிரியருமான பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்றன.

இருநாள் நிகழ்வுகளிலும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், யாழ்.பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.விசாகரூபன், சின்மயாமிஷன் தலைவர் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், மேலதிக பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர், யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், யாழ். இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் ஆகியோரின் உரைகள் இடம்பெற் றன. நிகழ்வில் கோப்பாய் சிவம் எழுதிய சைவ விரதங்களும் விழாக்களும், நலம் நல்கும் நாராயணா ஆகிய நூல்களின் வெளியீடும் புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றன.

முன்னதாக இந்துமத சிவாசாரியார்களால் மங்கல விளக்கேற்றும் நிகழ்வும் இடம்பெற்றது. நூலாசிரியர் கோப்பாய் சிவம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (வ-7)

# கைச்சாத்தானது எல்லை ஒப்பந்தம்



புதுடில்லி, ஒக்.24
பல ஆண்டுகளாக இழுபறியில் இருந்து வந்த இந்திய - சீன எல்லை ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட பின்னர் கருத்து வெளி யிட்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்,
"இருதரப்புப் பேச்சுக்களின் போது இரு நாடுகளிடையேயான நல்லுறவு மற்றும் ஒத்துழைப்புக் குறித்து உறுதி செய்யப்பட்டது. இந்தியா-சீனா இடையே நிறுவன ரீதியிலான இராணுவ பரிமாற்றங்கள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சீன பிரதமர் லீ இந்தியா வந்திருந்தபோது சீன தொழிற் பூங்கா அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அந்த திட்டத்தை நிறைவேற்ற பரஸ்பர ஒத்துழைப்பு மேற்கொள்ளப்படும்.
இந்தியா வரும் சீனப் பயணிகளின் விசா நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும் என்ற தகவலை பிரதமர் லீக்கு கூறியிருக்கின்றேன். அதே போன்ற நடவடிக்கையை சீனாவும் மேற்கொள்ளும் என நம்புகிறேன். இந்தியாவும், சீனாவும் நண்பர்களாக கைகோர்க்கும் வேளையில் உலகம் பாது காப்பாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.
சீனா சென்றுள்ள இந்தியப் பிரதமர் அந்நாட்டுப் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் எல்லை ஒப்பந்தம் உட்பட 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று இந்தியப் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

**எல்லை ஒப்பந்தம் உட்பட 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட் டுள்ளன என்று இந்தியப் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

## ஆந்திராவில் கனமழை

ஹைதராபாத், ஒக்.24
ஆந்திராவின் கடலோரப் பகுதிகள் மற்றும் ராயலசீமா மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ளது. அத்துடன் அண்மையில் பைலின் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளும் தொய்வடைந்துள்ளன.
தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் மீண்டும் வெள்ள அபாயம் தோன்றக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## தக்க பதிலடி கொடுக்கப்படும் ஷிண்டே கூறுகிறார்

புதுடில்லி, ஒக்.24
இந்திய எல்லைப் பகுதியில் அத்துமீறல் தொடர்ந்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் இராணுவத்துக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே எச்சரிக்கை விடுத்துள்ளார்.
"இந்திய எல்லையில் கூடுதல் வீரர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 100க்கும் அதிகமான முறை இந்திய நிலைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் தாக்குதலுக்கு கடந்த பத்து தினங்களில் மட்டும் 2 இந்திய ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இது தொடர்ந்தால் இந்தியா தக்க பதிலடி வழங்கும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# அல்-குவைதா தாக்கக்கூடும்

## பாதுகாப்பு ஆய்வாளர்கள் எச்சரிக்கை


புதுடில்லி, ஒக்.24
புதுடில்லி மற்றும் மும்பை உட்பட இந்தியாவின் முக்கிய நகரங்களில் அல்-குவைதா அமைப்பினர் தாக்குதல் நடத்தக் கூடும் என்று பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.
"அமெரிக்காவின் தொடர் தாக்குதல்களால் முன்னணி தளபதிகளை இழந்து அல்-குவைதா பயங்கரவாத இயக்கம் பலவீனமடைந்து விட்டது. அதற்கு ஆதாரமாக ஒவ்வொரு நாட்டிலும் உள்ளூர் தலைவர்களை முக்கிய பதவிகளில் அல்-குவைதா அமர்த்தி வருகின்றது.
பாகிஸ்தானில் தங்களது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிக்கின்றது அல்-குவைதா. அதன்மூலம் பாகிஸ்தானில் நிலையற்ற தன்மையை அந்த அமைப்பு ஏற்படுத்துகின்றது.
அமெரிக்காவில் தாக்குதல்களால் பலத்தை இழந்துவிட்ட அல்-குவைதா தமது கவனத்தை இந்தியா மீது திருப்புவதற்கு முயலக்கூடும். இந்தியாவின் முக்கிய நகர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கலாம். புதுடில்லி, மும்பை போன்ற முக்கிய நகரங்களில் பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட வேண்டும்" என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (ற)



## வி.கே.சிங்கின் கருத்துக்கு நீதிமன்றம் கண்டனம்

புதுடில்லி, ஒக்.24
உயர்நீதிமன்ற தீர்ப்பு குறித்து அவதூறாக பேசியமைக்காக இராணுவமுன்னாள்தலைமை தளபதி வி.கே. சிங்கிற்கு உயர் நீதிமன்றம் கண்டனம் தெரி வித்துள்ளது.
இராணுவமுன்னாள்தலைமை தளபதி வி.கே. சிங் பிறந்த திகதி குறித்த வழக்கில் அவர் அளித்த சான்றிதழை ஏற்க முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. உயர்நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு சரியானதல்ல என்று வி.கே. சிங் கருத்து தெரிவித்திருந்தார்.
அதுகுறித்துக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள உயர் நீதிமன்றம், "தீர்ப்பு குறித்து அவ்வாறான அவதூறான கருத்துக்களை கூறுவதற்கு யாரையும் அனுமதிக்க முடியாது" என்று கூறியுள்ளது.
தீர்ப்பு குறித்த விமர்சனங்களை ஏற்கத் தயார் என்று தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், ஆனால் உள்நோக்கத்துடன் அவதூறு பரப்பும் விதமான கருத்துக்களை கூறுவதை ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், வி.கே. சிங் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கவும் உத்தரவிட்டுள்ளது. (ற)





செவ்வாய் கிரகத்துக்கு இந்தியாவால் அனுப்படவுள்ள 'மங்கல்யான்' செயற்கைகோள் அடுத்த மாதம் 5ஆம் தேதி விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. குறித்த செயற்கைக் கோள் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்தப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்து இருந்தது. ஆனால் பசிபிக் பெருங்கடலில் நிலவிய, மோசமான வானிலை கார ணமாக எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி பிற்பகல், 3:28 மணிக்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது. (ற)


## பிரதமரின் பயணங்களால் வீணாகின்றது அரச பணம்

### பா.ஜ.க. துணை தலைவர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக்.24
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அடிக்கடி வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளும் பயணங்களால் அரச பணமே வீணடிக்கப்படுகிறது. இது கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. துணைத் தலைவர் முக்தார் அப்பாஸ்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"பிரதமர் மன்மோகன் சிங் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு வருவதால் அரச பணம் வீணடிக்கப்படுகிறது. இது கண்டனத்துக்குரியது. அமெரிக்காவுக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்வது அந்த நாட்டின் மீது அவருக்கு பிரியம் உள்ளதை காண்பிக்கிறது.
பெற்றோலியத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி சிக்கன நடவடிக்கையாக ரயிலில் பயணிக்கின்றார். அவரைத் தவிர வேறு எந்த அமைச்சர்களும் சிக்கனத்தைப் பின்பற்றவில்லை
சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அறிவுறுத்தி வரும் வேளையில், பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு வருவது வியப்பாக உள்ளது.
தற்போது பிரதமர் மன்மோகன் சிங் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளதால் இந்த விவகாரம் குறித்து மேலும் கருத்து தெரிவிப்பது சரியாக இருக்காது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஒலியை விடவும் 7 மடங்கு வேகமான ஏவுகணை: தயாரிக்கின்றது இந்தியா

புதுடில்லி, ஒக்.24
ஒலியைவிடவும் ஏழு மடங்கு வேகம் கொண்டதும், அதிகபட்சம் 7 ஆயிரத்து 200 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கும் திறன் கொண்டதுமான அதிவேக 'ஹைப்பர் சோனிக்' ஏவுகணையை இந்தியா 2017 ஆம் ஆண்டளவில் தயாரிக்கவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
வழக்கமாக ஏவுகணைகள் தரை, கடல், வான் வழியில் ஓர் இலக்கில் இருந்து மற்றொரு இடத்தில் உள்ள இலக்கைக் குறி வைத்துத் தாக்கும் வகையில் ஏவுகணைகள் தயாரிக்கப்படும்.
அதை மேம்படுத்தி மலைப் பகுதிகளில் மலைக்குப் பின்னால் தரையில் உள்ள இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டது தான் 'சுப்பர்சோனிக்' ரக ஏவுகணையாகும்.
அண்மையில் இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக அமைந்தது. மொத்தம் 300 கிலோ எடையுடன், அதிகபட்சம் 290 கிலோ மீற்றர் தொலைவு, ஒலியைவிட 2.8 மடங்கு வேகமாகப் பறந்து இலக்கைத் தாக்கும் திறன் என்பற்றை 'சுப்பர்சோனிக்' ஏவுகணை பெற்றுள்ளது.
இதுவரை பிரம்மோஸ் வகைகளில் ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் சோதனைகள் வெற்றிபெற்றுள்ளன. அதையடுத்து, சுப்பர்சோனிக் ஏவுகணையின் மேம்படுத்தப்பட்ட 'ஹைப்பர் சோனிக்' ஏவுகணையை 2017ஆம் ஆண்டில் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே இந்த அளவுக்குச் செயற்பாட்டுத் திறன் கொண்ட ஏவுகணை வேறு எந்த நாட்டிலும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# குற்றம் புரிகின்றது அமெரிக்கா

## கடுமையாகச் சாடுகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

நியூயோர்க், ஒக்.24
பாகிஸ்தான் மற்றும் யேமனில் அமெரிக்கா நடத்திவரும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் போர்க்குற்றங்களுக்கு ஒப்பானவை என்று கடுமையாகச் சாடியுள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

குறித்த பகுதிகளில் அமெரிக்க அண்மையில் நடத்திய 9 தாக்குதல்களை ஆய்வு செய்துள்ள அந்த அமைப்பு, அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களில் பெரும்பாலானவை ஏன் நடத்தப்படுகின்றன என்பது குறித்துத் தெரியாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில்,

"பாகிஸ்தான் மற்றும் யேமனில் அமெரிக்கா நடத்திவரும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் போர்க்குற்றங்களுக்கு ஒப்பானவை. பாகிஸ்தானில் நடத்தும் ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கான காரணங்களை அமெரிக்கா தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறான தாக்குதல்களில் அல்-குவைதா மற்றும் தலிபான் அமைப்பினர் உயிரிழந்திருந்தாலும், அப்பாவி மக்களும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் வெளிப்படைத்தன்மை நிலவும் என்று அமெரிக்க ஜனாதிபதி அளித்திருந்த உறுதி மொழி கடைப்பிடிக்கப்படவில்லை. குறித்த தாக்குதல்களில் தவறு செய்தமைக்காக எந்த ஒரு அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை" என்று கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை அமெரிக்க அரசு முற்றாக மறுத்துள்ளது. குறித்த தாக்குதல்கள் தீவிரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர சாதாரணபொதுமக்களின் மீது அல்ல என்று அமெரிக்கா விளக்கமளித்துள்ளது. (ற)

சர்வதேச மன்னிப்புச் சபையானது ஐக்கிய இராச்சியத்தில் 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த அமைப்பு உலகளாவிய ரீதியில் நடைமுறையில் இருக்கும் மனித உரிமைகளையும், உலகில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளையும் ஒப்பிட்டு அவ்வாறு மனித உரிமைகள் மதிக்கப்படாத இடங்களில் அதை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தும் ஓர் அமைப்பாகும்.

## விமானங்களை வீழ்த்தியது வெனிசுவேலா

கராக்கஸ், ஒக்.24
வெனிசுவேலா நாட்டு எல்லைக்குள் அனுமதியின்றிப் பறப்பை மேற்கொண்ட இரு இலகு ரக விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்று அந்நாட்டு இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

குறித்த விமானங்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட வேளையே சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

"அனுமதியின்றிப் பறப்பை மேற்கொண்டிருந்த விமானங்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டன. விமானங்களைத் தரையிறக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவை பலனளிக்காத காரணத்தால் அவற்றைச் சுட்டு வீழ்த்த நேரிட்டது" என்று இராணுவத் தளபதி ஜெனரல் விளாடிமிர் பாட்ரினோ லோபெஸ் தெரிவித்துள்ளார். (ற)

## புருனேயில் இனிமேல் இஸ்லாமிய சட்டங்கள்


பெக்வான், ஒக்.24
தமது நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக்கப்படவுள்ளன என்று புருனே அறிவித்துள்ளது. சீனாவுக்கும்மலேஷியாவுக்கும்இடையே போர்னியா தீவில் அமைந்துள்ளது புருனே. பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த அந்த நாடு, 1984 ஆம் ஆண்டு தான் விடுதலை பெற்றுத் தனி நாடானது.

அங்கு வாழ்வோரில் 70 சதவீதமானவர்கள் முஸ்லிம்கள். எண்ணெய் வளம் மிக்க அந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின்னர் படிப்படியாக இஸ்லாமியச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

1996ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய சட்டங்கள் முழுமையாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தற்போது இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக்கப்படவுள்ளன என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அதன்படி கள்ளக்காதலில் ஈடுபடுவோருக்கு கல்லால் அடித்து கொல்லும் தண்டனை வழங்கப்படும். திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுவோரின் கைகள் துண்டிக்கப்படும்.

கருக்கலைப்பு மற்றும் மது அருந்துதல் போன்ற குற்றங்களுக்கு பிரம்படித் தண்டனை வழங்கப்பட உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையில் விலாங்கு மீன் போன்ற தோற்றத்தைக் கொண்ட ஓர்பிஷ் என்ற மிகப்பெரிய மீனொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. ஒரு வாரத்துக்கும் குறைவான காலப்பகுதியில் கரையொதுங்கியுள்ள இரண்டாவது மிகப் பெரிய மீன் இதுவாகும். கடந்த வாரம் 18 அடி நீளமான ஓர்பிஷ் மீன் சாண்டா கட்டலினா தீவில் கரையொதுங்கி இருந்தது. இதற்கு முன்னர் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று அமெரிக்க தேசிய கடற்சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற)

## அமெரிக்காவுக்கு எதிராக ஐ.நாவில் கண்டனம்

ஹவானா, ஒக்.24
"தமது நாடு மீது அமெரிக்க தொடர்ச்சியாக வர்த்தகத் தடைகளை விதித்து வருகின்றது. அமெரிக்காவின் அத்தகைய நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்" என்று ஐ.நா.சபையில் வலியுறுத்தவுள்ளோம் என்று தெரிவித்துள்ளது கியூபா.

1962ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட்டுள்ள குறித்த வர்த்தகத் தடையால் கியூபாவின் ஏற்றுமதி வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஐ.நா. சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் கியூபா மீதான வர்த்தகத் தடைக்குக் கண்டனம் தெரிவித்து 188 நாடுகள் வாக்களித்திருந்தன.

எனினும் இந்த வாக்கெடுப்பால் கியூபா மீதான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை. (ற)

## எதையும் சமாளிக்குமாம் சீனா

பீஜிங், ஒக்.24
எந்தவொரு வெளிநாட்டினதும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் சீனா உறுதியாகச் சமாளிக்கும் என்று தெரிவித்துள்ளார் சீன வெளியுறவு அமைச்சின் செய்தித்தொடர்பாளர் குவா சுன் யிங்.

கடந்த சில நாள்களாக சீனாவின் தியாவ்யூ தீவு பகுதியில் ஜப்பான் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி வருகின்றது என்று கூறப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது,

"சர்ச்சைக்குரிய தியாவ்யூ தீவு சீனாவுக்குரிய பிரதேசம். நாட்டின் உரிமை, பிரதேச இறையாண்மையைப் பாதுகாப்பதில்சீனாமனவுறுதியையும்திறமையையும் பெற்றுள்ளது" என்றார். (ற)

# பரிசுப் பொருள் வடிவில் ஆபத்து வந்து சேரும்

## ஆப்கன் ஜனாதிபதி வேட்பாளர்களை எச்சரிக்கின்றது அந்நாட்டு உளவு அமைப்பு

காபூல், ஒக்.24
பரிசுப் பொருள் வடிவில் ஆபத்து வரக்கூடும். எனவே ஆப்கன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமக்கு வரும் பரிசுப் பொருள்கள் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளது அந்நாட்டு உளவுப் பிரிவு.

கைத்தொலைபேசி, கணினி மற்றும் கமரா போன்ற பொருள்களில் வெடிகுண்டுகள்மறைத்து வைக்கப்படலாம். அவை போன்ற பொருள்கள் பரிசுப் பொருள்களாக வந்தால் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளுங்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஆப்கன் ஜனாதிபதித் தேர்தலில் 20க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனினும் குறித்த தேர்தலுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அந்நாட்டு பாதுகாப்புத் தரப்பினருக்கு மிகப் பெரும் சவாலாக அமையும் என்று கூறப்படுகின்றது. (ற)

## பொலிஸார், மாணவர்கள் துருக்கியில் மோதல்

அங்காரா, ஒக்.24
துருக்கியின் மத்திய கிழக்கு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை மறு கட்டமைப்புச் செய்யும் அரசின் திட்டத்தை எதிர்த்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறுகட்டமைப்பு பணிகளுக்காக அந்தப் பகுதியில் உள்ள மரங்களும் கட்டடங்களும் அகற்றப்படவுள்ளன. அது குறித்தே மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை விரட்ட முயன்றபொலிஸாருக்கும்மாணவர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. (ற)

# பயங்கரவாதத்தின் மையமல்ல பாக்.

## அந்நாட்டுப் பிரதமர் கூறுகிறார்

இஸ்லாமாபாத், ஒக்.24
பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகள் இருக்கலாம். ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் மையம் அல்ல என்று கூறியுள்ளார் அந்நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப்.



அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நவாஸ், அங்கு பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"காஷ்மீர் பிரச்சினை உட்பட இந்தியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாக அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. பாகிஸ்தானில் கடந்த 10 ஆண்டுகளாக பயங்கரவாதம் அதிகரித்து வருகின்றதுஎன்பதுஉண்மை. ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதிகளை ஊக்குவிக்கவில்லை.

பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகள் இருக்கலாம். ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் மையம் அல்ல" என்று தெரிவித்துள்ளார். (ற)

கடந்த 10 ஆண்டுகளாக பயங்கரவாதம் அதிகரித்து வருகின்றது என்பது உண்மை. ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதிகளை ஊக்குவிக்கவில்லை.

# நவ. 9 மாலைதீவில் ஜனாதிபதித் தேர்தல்

மாலே, ஒக்.24
மாலைதீவில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி நஷீட் முன்னிலை பெற்றிருந்தார். அதில் எந்த வேட்பாளரும் 50 சதவீத வாக்குகளைப் பெறாத நிலையில் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுகள் நடைபெற இருந்தன. எனினும் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றன என்று நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் முதற்கட்ட வாக்குப் பதிவுகளை இரத்துச் செய்து மீண்டும் வாக்குப் பதிவு நடத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. அதையடுத்து கடந்த வாரம் வாக்குப் பதிவுகள் நடைபெற இருந்த போதும், பொலிஸாரின் தலையீடு காரணமாக இறுதி நேரத்தில் வாக்குப் பதிவு தடைப்பட்டது. இந்தநிலையிலேயே அந்நாட்டு தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான திகதியை அறிவித்துள்ளது. (ற)

# துஷ்பிரயோக அதிகரிப்புகளால் உயிரை மாய்க்கும் சிறுவர்கள்

## சிறுவர் உளநல மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.24

இன்று சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோக சம்பவங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று மாவட்ட போதனா வைத்தியசாலை சிறுவர் உளநல மருத்துவ நிபுணர் சித்ரா கலமநாதன் தெரிவித்தார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உளவியல் செயலமர்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

> சிறுவர்களின் உரிமைகளை பெற்றோர்கள் அறிந்து அவர்களை சமூகத்தில் நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டும்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் முயற்சிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக 12 வயது சிறுவர்களிடையே உயிரை மாய்த்துக்கொள்ளும் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தமது பிள்ளைகளை நல்ல குணமுள்ளவர்களாக உருவாக்குவதற்கான முழுமையான பொறுப்பு பெற்றோரிடமே தங்கியுள்ளது. 17 வயதில் சிறுமிகள் கர்ப்பம் தரித்தவர்களாக மாறுகின்றனர்.

பெற்றோர்கள் சிறுவர்களின் உரிமைகளை அறிந்து அவர் களை சமூகத்தில் நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டும். -என்றார். (ச)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை.ஒக்.24

அம்பாறை, தெஹியத்தகண்டிய, வில்கமுக பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றதாக தெஹியத்தகண்டிய பொலிஸார் தெரிவித்தனர். எம்.ப ந்துல (வயது-25) என்ற இளைஞனே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த தினத்தில் மூன்று பேர் வில்கமுக தேசிய பூங்காவுக்குச் சென்றனர். அவர்கள் மீது யுதகனாபிட்டிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

அதன்போது குறித்த இளைஞன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

ஏனைய இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தெஹியத்த கண்டிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ஓய்வு பெற்ற காலநிலை அவதானிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம்

கொழும்பு, ஒக்.24

காலநிலை அவதான ஆய்வுகள் திணைக்களத்தில் நில வும் கடும் உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிரப்புவதற்கான தற்காலிக நடவடிக்கையாக ஓய்வு பெற்றுள்ள காலநிலை அவதான விஞ்ஞானிகள் மற்றும் சிரேஷ்ட காலநிலை அவ தான அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளுமாறு அமைச்சரவை உபகுழு அமைச்சரவைக்குப் பரிந்துரைத்துள்ளது.

காலநிலை அவதான ஆய்வுகள் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள கடும் உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிரப்புவது தொடர்பான இலங்கை விஞ்ஞான சேவையில் புதிதாக உத்தியோகத்தர்களைச் சேர்த்துப் பயிற்சிகளை வழங்கி அவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் வரையில் செல்லும் என்பதால் குறுகிய கால நடவடிக்கையாக அமைச்சரவை உபகுழு இப்பரிந்துரையை வழங்கியுள்ளது.

மேற்படி திணைக்களம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள செயற்குழுவினரின் எண்ணிக்கை 460 பேராக உள்ள போதிலும், 136 வெற்றிடங்கள் நிலவுவதன் காரணமாக திணைக்களத்தின் கருமங்களை முறைப்படியாக மேற்கொள்வதில் கடுமையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சரான மஹிந்த சமரவீர அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அதைஅடுத்தே ஓய்வுபெற்ற காலநிலை அவதானிகள் மற்றும் சிரேஷ்ட காலநிலை அவதான அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஓராண்டு காலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதனிடையே, விஞ்ஞான ஆய்வுகள் சேவையின் பதவிகள் தொடர்பாக ஆள்களைச் சேர்த்துக் கொள்ளும் பரீட்சையை விரைவில் நடத்துவதற்கு சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு அமைச்சரவை உபகுழு பரிந்துரை செய்துள்ளது. (ஒ-22)

**கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

தரமான ஊர்க் கோழிக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 077 041 7844 (39676) (7.6.3)

**விற்பனைக்கு**

* நல்ல நிலையில் சிவப்பு நிற CD 200 (ROAD MASTER) மோட்டார் சைக்கிளும்,
* பெண் ஆசிரியை ஒருவரின் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள Super Cup 90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம்:
காலை: 6-8 மாலை: 4-6 மணி
40/3, மைமன் றோட்,(சென்றல் கிளினிக் ஒழுங்கை), நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 706 9696 (33210) (6.3.4)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சந்திரச் சந்திக்கு அண்மையில்) (1266)(5.6.3)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## தார் விநியோகம் செய்வதற்கான கேள்வி கோரல்

எமது சபைக்குத் தேவையான 180L கொள்ளளவைக் கொண்ட தார் பரலினை சபைக்கு விநியோகிப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

குறிப்பு:- ஏற்றியிறக்கல் கூலி, வற் உட்பட 180L கொள்ளளவைக் கொண்ட தார் பரலிற்கான விநியோக விலையைக் குறிப்பிட வேண்டும். தேவையான தார் பரல்களின் எண்ணிக்கை 200.

தார் பரல்களினை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் (சுழிபுரம்) களஞ்சியத்திற்குக் கொண்டு வந்து வழங்குதல் வேண்டும்.

தார் பரல் விநியோகிப்பதற்கான கூறுவிலையினைத் தங்கள் கடிதத் தலைப்பில் தங்கள் இறப்பர் முத்திரையுடன் **''தவிசாளர் /செயலாளர்'' வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ **06.11.2013 ஆம் திகதி 12 மணிக்கு** முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **''தார் விநியோகிப்பதற்கான கூறுவிலை''** என எழுதப்படவேண்டும். மேலதிக விவரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் (சுழிபுரம்) தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி திறத்தல் :- 06.11.2013 - பி. ப.2.30 மணி**

திருமதி நா.ஐங்கரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
(C/13174)(6.3.4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கைதடி
முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்
2013 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.
Congratulation



த. ட்னுசியா (164) — வி. பமிஷா (161)

## சேவை நிறைவு பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்துக்களும்

**M.S.சிவதாசன்**

வடக்கு, கிழக்கு மாகாணத் தகவல் திணைக்களம்-
ஓவியர் 1987-1997
ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி-ஆசிரியர் 1997-2001
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி -ஆசிரியர் 2001-23.10.2013
எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.
Happy birthday



**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகம்.**
(03205)(4.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கு.லக்ஷன் 167 புள்ளி



வி.ஜெனிஷன் 164 புள்ளி



யோ.சங்கோதயன் 162 புள்ளி



வே.சதுர்ஷன் 156 புள்ளி

140 இற்கு மேல் புள்ளிகள் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| ஜீ.வேணுஜன் | 153 | ச.சர்மிலன் | 149 |
| சி.அபிஷாலினி | 148 | ஜெ.ராஜீவ் | 141 |

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம்
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
(33246)(7-6.3)

## மகிமை பெறும் மணிவிழா நாயகன்

Best Wishes



அகவை 60 காணும்
எமது பொற்கால முன்னாள் அதிபர்
உயர்திரு
**சு. புண்ணியசீலன்**

15.10.1996 தொடக்கம் 09.09.2002 வரை புலம் பெயர்ந்து இயங்கிய காலப்பகுதியிலும் 10.09.2002 தொடக்கம் 24.10.2011 வரை (சேவைக்காலம்) தனது சொந்த இடத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இயங்கிய காலப்பகுதியிலும் யூனியன் கல்லூரியை வரலாற்று பொற்காலமாக்கி இன்று (24.10.2013) அறுபதாவது அகவையைக் காணும் எமது முன்னாள் வரலாற்று பொற்கால அதிபர் உயர்திரு. சு. புண்ணியசிலன் அவர்களை மேலும் சிறப்புடன் வாழ நீண்ட ஆயுள் வேண்டி வாழ்த்தி வணங்குகிறோம்.

யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. — கல்வி பயின்ற பழைய மாணவர்கள்,

# இந்திய வீட்டுத்திட்ட மீளாய்வுக் கூட்டம்

மன்னார், ஒக்.24

மன்னாரில் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் மேலதிக அரச அதிபர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள், வீட்டுத்திட்டப் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்திய அரசின் பங்களிப்புடன் மன்னார் மாவட்டத்தில் சுமார் 7,500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. மூன்று கட்டங்களாக இடம்பெற்று வரும் வீட்டுத்திட்டப் பணிகளில் சுமார் 5,000 வீடுகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# சீரில்லாத போக்குவரத்தால் இடருறும் அம்பகாமம் மக்கள்

முல்லைத்தீவு, ஒக்.24

அம்பகாமம் மக்கள் போக்குவரத்து வசதிகள் சீரில்லாததால் பெரும் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். முல்லை வீதியிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அம்பகாமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த போதிலும் இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் சீரான வகையில் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

அங்கு முன்னர் பஸ் ஒன்று சேவையில் ஈடுபட்ட போதிலும் அது அதிகாலை 5 மணிக்கு வந்து, திரும்பி விடுவதால் அதனால் தமக்கு எவ்வித பயனுமில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். அந்தச் சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இங்குள்ள பாடசாலை மாணவர்கள் ஒலுமடு மற்றும் மாங்குளம் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கே கற்கச் செல்கின்றனர். சீரற்ற போக்குவரத்தால் மாணவர்களே அதிக பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இதேவேளை-



*ஒலுமடு மற்றும் மாங்குளம் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கே கற்கச் செல்கின்றனர். சீரற்ற போக்கு வரத்தால் மாணவர்களே அதிக பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.*

அம்பகாமம் காடுசார் பகுதியாக அமைந்துள்ளதால் மின்சாரமும் இதுவரை வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# மாந்தை கிழக்குப் பிரதேச சிறுவர், முதியோர் நிகழ்வு



துணுக்காய், ஒக்.24

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் மற்றும் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.தனிநாயகம், பிரதேச சபை உறுப்பினர் பொ.பிருந்தாபன், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.யோகதாசன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோட்ட மட்டத்திலே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. முதியோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-415)

## மாவீரர் துயிலும் இல்லத்தில் புதிதாக இராணுவக் காவலரண்

துணுக்காய், ஒக்.24

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வன்னி விளாங்குளத்தில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவத்தினர் புதிதாகக் காவலரண்களை அமைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இங்குவந்த இராணுவத்தினர் துயிலும் இல்லம் அமைந்த பகுதியைத் துப்புரவு செய்ததுடன் அதனைச் சுற்றிவர முட்கம்பி வேலிகளையும் அமைத்தனர். பின்னர் அங்கு புதிதாக இராணுவக் காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடு தமக்கு மிகுந்த மன வேதனையையும், அச்சத்தையும் அளித்துள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-415)



## பூர்த்தியடைந்த நிலையில் விடுதிக் கட்டடப் பணிகள்

கிளிநொச்சி, ஒக்.24

கிளிநொச்சி மகாதேவா இல்லப் பெண்கள் விடுதியின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன.


யாழ்.வணிகர் க்ழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டில் புதிய விடுதியின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

விரைவில் புதிய கட்டடம் திறந்து வைக்கப்படும் என மகாதேவா இல்லத் தலைவர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்கள் தங்குவதற்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லாத குறையை யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். இதன்போது 23 மில்லியன் ரூபா செலவில் குடாநாட்டு வணிகர்களின் ஒத்துழைப்புடன் புதிய கட்டடம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு முன்வந்தார்.

தற்போது கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. விரைவில் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதும் பெண்கள் நெருக்கடியின்றிக் கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்- என்றார். (ஜ-50)



## இயங்காத நிலையில் கற்சிலைமடு சனசமூக நிலையம்

முல்லைத்தீவு, ஒக்.24

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையம் இயங்காத நிலையில் உள்ளமை தொடர்பாக இந்தப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் முன்பே தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நிதியுதவிகளும் கிடைக்கின்றன.

ஆனால் அதற்குரிய கட்டடம் இல்லாததால் இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது. மேலும், நிர்வாகத்தினரும் அதற்கான கூட்டங்களை நடத்துவதில்லை. வருடாவருடம் தெரிவு செய்யப்படவேண்டிய நிர்வாகமும் தெரிவு செய்யப்படுவதில்லை.

மேலும் சன சமூக நிலையத்தின் கணக்கறிக்கைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெறுமனே பெயருக்கு மட்டும் இந்த நிலையம் இருக்கக்கூடாது. இது சீராக செயற்படுமேயானால் பத்திரிகைகள் போடுவதற்குப் பலர் ஆயத் தமாக உள்ளனர்.

இதன்மூலம் பலர் பல நன்மைகளைப் பெறுவர். எனவே மக்கள் பயன்படும் வகையில் சனசமூக நிலையம் இயங்க வேண்டுமெனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-500)





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த 14,15 ஆம் திகதிகளில் சிறாட்டிகுளம், விநாயகபுரம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் நூலக நடமாடும் சேவைகள் இடம்பெற்றன. (க-415)

*கிளிநொச்சி – யாழ்.*

# ‘இபாட்’ நிதியுதவியுடன் நீர் வழங்கல் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.24

கிளிநொச்சி- யாழ். நீர்வழங்கல் திட்டத்தின் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

‘இபாட்’ நிதி உதவியுடன் இரணைமடுவின் கீழான கால்வாய்கள் புனரமைப்பு ஜெய்க்கா நிதி உதவியின் கீழ் கிளி நொச்சி நகர் மற்றும் புறநகர் குடி தண்ணீர் விநியோகம், ஜெபார் நிதி உதவியின் கீழ் கிராமிய நீர் வழங்கல் திட்டம் போன்ற திட்டங்களே இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் குடமுருட்டிமாளாப்பு திட்டத்துக்கான திட்ட முன் ஆய்வு வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் -இபாட் நிதியுதவியு டன் முழுமையான நீர்ப்பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு, கழிவு வாய்க்கால் புனரமைப்பு, விவசாய வீதிகள் புனரமைப்பு, நீர் மற்றும் நிலத்தினது உற்பத்தித் திறன் அதிகரிப்பு, விவசாய அமைப்புக்களை வலுப்படுத்தல், இளைஞர் மற்றும் பெண்கள் குழுக்களை வலுப்படுத்துதல், நீரைப் பெறும் வழியை உறுதிப்படுத்துதல், நெல் மற்றும் நெல் சாரா பண்ணைகளது வருமானத்தை அதிகரித்தல் ஆகிய வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கென 164.04 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-50)

# விடத்தல்தீவுக்கு குடிதண்ணீர் திட்டப் பணி பூர்த்தியடைந்தது

மன்னார், ஒக்.24

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விடத்தல்தீவு பகுதிக்கான குடிதண்ணீர் திட்டம் பூர்த்தியடைந்துள்ளது.

இதன் மூலம் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக நிலவி வந்த விடத்தல்தீவு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருப்பதாக பிரதேச வாசிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

மாந்தை மேற்கில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் ஐந்து தசாப்த காலமாக குடிதண்ணீருக்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவு சென்றே தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பெற்று வந்த இந்த நிலையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சுமார் 205 மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர்த் திட்டத்தை பூர்த்தி செய்துள்ளது.

ஏ-32 பிரதான வீதியில் அமைந்திருக்கும் பள்ளமடு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான நீர்த்தாங்கியில் இருந்து தற்போது விடத்தல் தீவுப் பகுதிக்கு குழாய் மூலமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக விடத்தல் தீவு வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஆர்.றஞ்சித் டிலிப்குமார் தெரிவித்ததாவது:-

சுமார் 50 வருடங்களாக ஏக்கத்துடன் நாங்கள் எதிர்பார்த்திருந்த விடத்தல் தீவுக்கான குடிதண்ணீர்த் திட்டம் இப்போது தான் நிறைவேறியிருக்கின்றது. முதற்கட்டமாக அருட் சகோதரிகளின் இல்லத்துக்கு வழங்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் விரிவாக்கப்பட்டு விரைவில் ஏனையோருக்கும் வழங்கப்படவுள்ளது- என்றார். (க)

## சதுப்பு நிலங்களை மீண்டும் நெற்காணிகளாக்க திட்டம்

### சம்புக்களப்பு வடிச்சல் முறை மூலம்



மட்டக்களப்பு, ஒக்.24

கல்லோயாத் திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தின் நெல் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கப்பட்ட போதிலும், மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள நெற்காணிகள் சதுப்பு நிலங்களாக மாறியுள்ளன.

இவ்வாறு அம்பாறை மாவட்ட பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களங்களின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை அட்டாளைச்சேனையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நீர்ப்பாசன வார ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்லோயாத் திட்டத்தின் மூலம் சதுப்பு நிலங்களாக மாறியி ருக்கும் 8,500 ஏக்கர் விவசாய நிலங்களை மீண்டும் நெல் உற்பத்திக்கு பயன்படுத்தும் வகையில் சம்புக்களப்பு வடிச்சல் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுமார் 300 மில்லியன் ரூபா உத்தேச மதிப்பீட்டுத் தொகை தேவை என்று கோரப்பட்டுள்ளது.

இதற்கான முழு நிதியையும் ஒரே தடவையில் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதனால் கட்டம் கட்டமாக வடிச்சல் திட்டத்தினை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

முதற் கட்டமாக நாம் மேற்கொண்டுவரும் நடவடிக்கையின் மூலம் வடிச்சலுக்குரிய சாத்திய வளக்கூறுகளை அறிய முடியும். அதன் மூலம் சில பாதிப்புகள் ஏற்படலாம்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை இந்த வேலைத் திட்டத் தின் மூலம் பல தனிப்பட்டவர்களின் எதிர்ப்புக்களுக்கு உள்ளாகியுள்ளார்.

# பதவியில் இருந்து உடனே விலகுக

## கல்முனை முதல்வருக்கு ஹக்கீம் உத்தரவு

மட்டக்களப்பு, ஒக்.24

சுழற்சிமுறை இணக்கப்பாட்டின் பிரகாரம் கல்முனை மாநகர முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று சிராஸ் மீராசாஹிப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப்புக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை நீதி அமைச்சில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே முதல்வர் பதவியைத் துறக்குமாறு அவர் பணித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் அதி கூடிய விருப்பு வாக்குகளை சாய்ந்தமருதைச் சேர்ந்த சிராஸ் மீராசாஹிப்பும், இரண்டாவது அதி கூடிய விருப்பு வாக் குகளை கல்முனைக்குடியைச் சேர்ந்த கட்சியின் பிரதிச் செய லர் நிசாம் காரியப்பரும் பெற்றிருந்தனர்.

அதனையடுத்து முதல்வரை நியமிக்கும் விடயத்தில் சிராஸ் மீராசாஹிப் முதல்வராகப் பதவியேற்று கடந்த 10ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த நிலையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும், கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப்புக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்



பின்போது முதல்வர் பதவியை உடனே துறக்குமாறு தலைவர் ஹக்கீம் உத்தரவிட்டுள்ளார்.

எனினும் தானே அடுத்த இரு வருடங்களுக்கும் முதல்வராக பதவி வகிக்க விரும்புவதாகவும், அதனையே சாய்ந்தமருது மக்கள் விரும்புவதாகவும் முதல்வர் சிராஸ் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.



"அது முடியாது. உங்களுக்கு பதவி தரப்படும்போது இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் நீங்கள் பதவியிலிருந்து விலகியேயாக வேண்டும்; சுழற்சி முறை இணக்கப்பாட்டை மீற முடி யாது; கட்சி, மற்ற தரப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது" என்று ஹக்கீம் கூறியுள்ளார்.

## பதவியைப் பொறுப்பேற்க எப்போதுமே நான் தயார்

### பிரதி முதல்வர் நிசாம் காரியப்பர் தெரிவிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் தீர்மானத்தின் படி நான் கல்முனை மாநகர முதல்வர் பதவியை பொறுப்பேற்கத் தயார் என கல்முனை மாநகர பிரதி மேயர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.



"எதிர்வரும் நவம்பர் மாதம் கல்முனை மாநகர அமர்வுகள் என் தலைமையில் நடைபெறும் என நம்புகிறேன். கல்முனை மாநகர முதல்வராக பதவி வகித்த சிராஸ் மீராசாஹிப் தனது பதவியிலிருந்து விலகுவார் எனவும் எதிர்பார்க்கின்றோம். இந்த நிலையில் சிக்கலின்றி முதல்வர் பதவி எனக்குக் கிட்டும்" என்றார். (ச-10)

## விசமாக மாறியது உணவு 12 பேர் வைத்தியசாலையில்

ஏறாவூர், ஒக்.24

ஹோட்டலில் வாங்கி உட்கொண்ட உணவு விசமாகியதால் பாதிக்கப்பட்ட 12 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கிரான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ். இளங்கோ தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட 12 பேரும் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை காலை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்சமயம் சுகமடைந்து வருகின்றனர் என்று அவர் கூறினார்.

சந்திவெளிப் பிரதேசத்திலுள்ள சிறிய ஹோட்டல் ஒன்றிலிருந்து அவர்கள்வாங்கிச் சாப்பிட்ட உணவே விசமானதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் ஹோட்டலில் தனிப்பட்ட முறையில் வெவ்வேறு

> ஹோட்டலில் விற்கப்பட்ட உணவு நஞ்சானமை குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

சந்தர்ப்பங்களில் உணவை வாங்கி உட்கொண்டவர்களே இவ்வாறு ஒவ்வாமைக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஹோட்டலில் விற்கப்பட்ட உணவு நஞ்சானமை குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)



திருகோணமலை நகராட்சி மன்ற உள்ளூராட்சி வாரமும் பரிசளிப்பு விழாவும் நகரசபை மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண பிரதம செய லர் சரத் அபயகுணவர்த்தன, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.உதயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கடவையில் கடமை தவறிய பொலிஸார் இடைநிறுத்தம்

ஏறாவூர், ஒக்.24

ஏறாவூர் பிரதேசத்தில் பாதசாரி கடவையில் கடமை மேற்கொள்ள தவறிய பொலிஸ் உத்தியோகத்தர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஏறாவூர் நகரின் பிரதான வீதியிலுள்ள பாதசாரி கடவையில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த பாதசாரிக் கடவையில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் விபத்து இடம்பெற்ற சமயம் சம்பவ இடத்தில் கடமையில் இருந்திருக்கவில்லை.

அதனாலேயே அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் கடமையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன கொடகும்பர தெரிவித்தார். (ச)

## தலைமைத்துவத்தை வளர்க்க மாணவர் நாடாளுமன்றம்

### அந்நூர் வித்தி.தேர்தலில் 130 வேட்பாளர்கள் போட்டி



மட்டக்களப்பு, ஒக்.24

மாணவர்களின் ஆளுமையையும், தலைமைத்துவப் பண்புகளையும் வெளிக்கொணரும் நோக்குடன் கல்வி அமைச்சால் மாணவர் நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.இத்ரஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பாடசாலையில் 95 மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 130 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

பாடசாலை மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு தமது வாக்குகளை வழங்கமுடியும்.

இந்தத் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு 10 அமைச்சுப் பதவிகளும், 10 பிரதி அமைச்சுப் பதவிகளும், சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தேர்தல் கடமையில் பாடசாலை பிரதி அதிபர் எம்.எச். அப்தல் ஹை, வலயத் தலைவர் வை.எல்.எம்.நஸீர் உட்பட பல ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ச)

# மக்களுக்குத் தெரியாமல் கசினோவை சட்டமாக்க மஹிந்த அரசு கடும் முயற்சி

## ஐ.தே.க. பகிரங்கக் குற்றச்சாட்டு



எதிர்ப்புகள் காரணமாக அரசு நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரவிருந்த கசினோ சூதாட்ட சட்டமூலத்தை தாம தப்படுத்தியுள்ளதுடன் மக்களுக்கு மறைத்து, அதனைக் கட்டாயம் சட்ட மாக்கும் என்று ஐக்கிய தேசியக்கட்சி யின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மக்களுக்கு மறைத்து அரசாங்கம் கசினோ சூதாட்டத்தை சட்டத்திற்குள் கொண்டு வந்தாலும் எதிர்க்கட்சியிடம் அதனை மறைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கசினோ சூதாட்டத்தை நாட்டில் இருந்து இல்லா தொழிக்கும் வரை ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்கும்.

கசினோ சூதாட்டத்தை சட்டமாக்கி, அதற்கு நாட்டில் அனுமதி வழங்கி முன்னெடுத்துச்சென்றாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாட்சிபொறுப் பேற்கும் நாளில் கசினோ சூதாட்டம் நாட்டில் இருந்து விரட்டியடிக்கப்படும்.

கசினோ சூதாட்டத்தை சட்ட மாக்கும் வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்றத்தில் சம்பிப்பதை தாம திக்க போவதாக அரசு கூறியுள்ளது. எனினும், முறைமுகமாக அரசு சூதாட்டத்தை சட்டமாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது - என்றார்.

# விபத்தில் முதியவர் மரணம்

தலாவ - கெக்கிராவ வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தலாவையிலிருந்து எப்பாவல நோக்கிப் பயணித்த சைக்கிளை அதன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின்போது படுகாயமடைந்த சைக்கிளில் சென்ற நபர், அநுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 80 வயதான முதியவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்கலை பாடவிதானங்கள் அடுத்த வருடம் மீளாய்வு

## உயர் கல்வியமைச்சு தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் பட்டப்படிப்புக்கான பாடவிதானங்கள் அடுத்த வருடம் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென உயர் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கலை, வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளுக்கான பாட விதானங்கள் மீளாய்வு செய் யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அத்துறைகளுக்கான பிரயோகப் பயிற்சி முறையொன்றும் அறிமுகப் படுத்தப்படும் எனவும் உயர் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

பிரயோகப் பயிற்சி, தலைமைத்துவ ஆற்றல், தன்னம்பிக்கை, படைப் புத்திறன், தீர்மானிக்கும் ஆற்றல் ஆகிய வற்றை அபிவிருத்திசெய்யும் வகையில் இப்பாட விதானங்களில் மாற்றங்கள் ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் புதிய மாற்றத்தின் மூலம் தற்போது கல்வி முறையில் நிலவிவரும் ஆசிரியர் மாணவ தொடர்பாடல் நிலை மாறி மாணவர்கள் சுயமாக சிந்திக்கவும் செயற்படவும் முடியுமெனவும் இந்தப் புதிய அணுகு முறை வெளிவாரிப் பட்டப்படிப்பிலும் பின்பற்றப்படும் எனவும் அவர் கூறினார்.

புதிய பாட விதானங்கள் வகுக்கப் பட்டதும் பரீட்சைகள் நடைபெறும் விதம் பற்றியும் புள்ளிகள் வழங்கும் முறை பற்றியும் ஆராயப்படுமெனவும் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்தார்.



அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் புளிச் சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயத்தில் 5 மாணவர்கள் சித்தியடைந்துள் ளனர். சித்தியடைந்த மாணவர்களான செல்வி.எஸ்.ஏ.பாத்திமா சஹ்லா(168), செல்வன்.எம்.என்.எம்.நசீக்(152), பி.எம்.எம்.மிப்ரான்(153), எம்.என்.எம். மிதாத் (159), எவ்.எம்.பைஹரான்(160) ஆகியோர் பாடசாலை அதிபர் எம்.டி. எம்.பாரி, ஆசிரியர்களான கே.பி.நியாஸ், எம்.எம்.எஸ்.பரீதா, எச்.எம்.எச். ஹசீனா ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (உடப்பு நிருபர்)

# முதலீட்டு வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேயே குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

6.8 மில்லியன் ரூபா அரச பணத்தை மோசடி செய்தாரென குற்றம் சாட்டப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முன்னாள் பொது முகாமையாளருக்கே மேற்கண்டவாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் குற்றப் புலன் விசாரணைப் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப்புலன் விசாரணைப் பிரிவானது பொது முகாமையாளருக்கு எதிராக அறிக்கையொன்றை கொழும்பு கோட்டை நீதிமன்றில் தாக்கல் செய்தது.

அத்துடன், இவரை நாட்டை விட்டு வெளியேறவிடாமல் தடுக்கும்படியும் குற்றப்புலன் விசாரணைப் பிரிவு நீதிமன்றில் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கார் விவகார வழக்கிலிருந்து அரச உறுப்பினர் விடுதலை

மத்திய மாகாண சபை உறுப்பினரான அஸாத் ஸாலி தாக்கல் செய்த வழக்கிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரான அஜ்மல் மவ்யூட் என்பவர் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவானாலேயே அவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார்.

2.3 மில்லியன் பெறுமதியான தனது காரை விற்றுத் தரும்படி அஜ்மல் மவ்யூட்டிடம் 2005 ஆம் ஆண்டு கொடுத்ததாகவும் ஆனால் காரை விற்று பணம் பெற்ற மவ்யூட் தனக்கு அப்பணத்தைத் தரவில்லை என அஸாத் ஸாலி முறைப்பாடு செய்திருந்தார்.

ஆனால் சந்தேகத்துக்கு இடமின்றி இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என கூறிய நீதவான் அஜ்மல் மவ்யூட்டை வழக்கிலிருந்து விடுவித்தார்.

# கூரை மீது ஏறி சத்தியாக்கிரகம் செய்த ஆசிரியைக்கு 3 மாத சம்பளம் வெட்டு

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு றோயல் கல்லூரியின் கூரை மீது ஏறி சத்தியாக்கிரகம் செய்த அக்கல்லூரியின் ஆசிரியைக்கும் மேலும் இரு ஆசிரியர்களுக்கும் மூன்று மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லையென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது பாடசாலை அதிபருக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டைப் பாரபட்சமின்றி விசாரிக்கவேண்டுமென வும் தங்களுக்கு வழங்கப்பட்ட அநீதியான இடமாற்றங்களை இரத்துச்செய்ய வேண்டும் என்றும் கோரி இவர்கள் சத்தியாக்கிரகம் செய்ததாலேயே பெரும் சர்ச்சை ஏற்பட்டது தெரிந்ததே.

இந்த சர்ச்சையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மூன்று ஆசிரியர்களும் கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் காரியாலயத்தில் பணியில் அமர்த்தப்பட்டார்கள்.

அன்றுமுதல் தமக்குத் தரப்பட்ட பணியை சரியாக அவர்கள் நிறைவேற்றி வந்துள்ள போதும் மூன்று மாதங் களாக அவர்களுக்குச் சம்பளம் கொடுபடவில்லை எனவும் இதில் கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் தலையீடு இருப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த மூன்று ஆசிரியர்களுக்கும் அவர்களது சம்பளங்களை வழங்கு மாறு கல்வியமைச்சு பணிப்புரை விடுத்திருந்தபோதும் வலயக்கல்விப் பணிப்பாளர் அந்தப் பணிப்புரையை உதாசீனம் செய்துள்ளார் எனவும் இந்தச் சம்பவத்தில் றோயல் கல்லூரி அதிபரும் கல்விப்பணிப்பாளருக்கு உடந்தையாக இருக்கிறார் என்றும் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

# வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்துக!

## மேல்மாகாணத் தமிழ் வாக்காளர்களிடம் வேலுகுமார் வேண்டுகோள்

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் வாழும் மேல்மாகாண தமிழர்கள் ஜனநாயக மக்கள் முன்னணியை பெரு வெற்றி பெற செய்து கட்சியின் தலைவர் மனோ கணேசனின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். நூறு விகித வாக்குரிமையை நமது இலக்காக கொண்டு இந்த மூன்று மேல் மாகாண மாவட்டங்களிலும் வாக்குரிமையுள்ள ஒவ்வொரு தமிழ் வாக்காளரும் தமது வாக்குரிமையை பயன்படுத்த இப்போதே தயாராக வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல்மாகாணத்தில் வாழும் மக்களிடம் வாக்கு கோர நமது கட்சிக்கு முழுமையான உரிமையும், முன்னுரிமையும் இருக்கின்றது. மக்கள் நொந்து போயிருக்கும் பொழுது எவர் அந்த மக்களுக்கு துணை இருக்கிறாரோ அவருக்கு உரிய நேரம் வரும் பொழுது துணை வருவது அந்த மக்களின் கடமை.

நமது கட்சியின் தலைவர் கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு இருந்தால் அவர் பெரும் வெற்றியைப் பெற்று நாடாளுமன்றம் சென்றிருப்பார். ஆனால், அவர் கண்டி மாவட்ட தமிழ் மக்களுக்கு இல்லாத நாடாளுமன்ற பிரதிநிதித்து வத்தை பெற்றுத் தருவதற்காக கண்டியில் போட்டியிட்டார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக கண்டியில் ஏற்பட்ட தேர்தல் வன்முறை அவரை வெற்றிபெற விடவில்லை. இந்த நிகழ்வு இன்று கண்டி மாவட்ட மக்களைத் தட்டி எழுப்பியுள்ளது. இதையடுத்து நமது கட்சியின் எதிர்கால கண்டி மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்து வத்துக்கு கடைசியாக நடைபெற்ற மத்திய மாகாணசபைத் தேர்தலில் இன்று நாம் உறுதியான அடித்தளம் இட்டுள்ளோம்.

இந்நிலையில் எதிர்வரும் மேல் மாகாணசபை தேர்தலில் நமது கட்சி கொழும்பு, கம்பஹா, களுத்தறை மாவட்டங்களில் வெற்றி பெறுவது காலத்தின் கட்டாயம். துன்பத்தில் துணையிருந்த மனோ கணேசனுக்கும், அவரின் தலைமையிலான கட்சிக்கும் மேல்மாகாண தமிழர்கள் துணையிருப்பார்கள் என்பது திண்ணம். ஆனால், இந்த வெற்றி பெரு வெற்றியாக இருக்க வேண்டும். வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் தமது வாக்குரிமையை முழுமையாக பயன்படுத்த வேண்டும் - என்றார்.



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்குத் தேர்தல் வெளிச்சம் போட்டுள்ள சிவில், அரசியல் உரிமைத் தடைகள்

★ வட பகுதியை இராணுவ மயப்படுத்தும் அரசின் திட்டத்துக்கு அங்கு வாழும் மக்கள் அடிபணிய மாட்டார்கள். வட மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தலில் மொத்த வாக்களிப்பு வீதமும் அதன் முடிவுகளும் அதனை மிகத் துலக்கமாக, துல்லியமாக தெளிவுபடுத்தி உள்ளன; வெளிப்படுத்தி உள்ளன.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம்- 'பவ்ரல்' (Paffrel) தனது அறிக்கையில் மேற் சொன்ன கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

அமைப்பின் அறிக்கை நேற்று முன்தினம் (22-10-2013) யாழ்ப்பாணத்தில் வைத்து அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவினால் வெளியிடப்பட்டது.

பவ்ரலின் அறிக்கை ஊன்றித் தொட்டுக் காட்டும் பின்வரும் பிரதான தகவல்கள், கருத்துக்கள் வடக்கில் அரச நிர்வாகத்தின் தன்மையையும், மக்களுக்கு உள்ள சிவில் மற்றும் பொருளாதார உரிமைகளை அவர்கள் பெறுவதற்கும் அனுபவிப்பதற்கும் உள்ள தடைகளையும் மிக அப்பட்டமாகவும் விஸ்தாரமாகவும் வெளிப்படுத்தி உள்ளன.

★ அது மட்டுமன்றி, வடக்கை இராணுவ மயமாக்கும் செயற்பாடுகள் முடிவு ஏதும் இன்றித் தொடர்ந்து கொண்டு இருக்கப் போகின்றன எனக் கருத வைக்கிறது.

★ போருக்குப் பின்னரான நல்லிணக்கச் செயல்முறையில் முரண்பாட்டுக்கான மூலங்கள் நீடிக்கப்படலாகாது.

★ அதன்பால் வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும்.

★ பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையில், இராணுவ மயப்படுத்தலின் அளவு, அவர்கள் ஆற்றுகின்ற அரசியல் ரீதியான நோக்கங்களுக்கு, தேர்தல் பரப்புரைகள் மற்றும் வாக்களிப்பு நடைபெற்ற சூழமைவில் ஊடுருவி நிலைநாட்டப்பட்டமை வெளிப்படையாகப் புலப்படுகிறது.

★ தேர்தல் செயல்முறைகளுக்கு இராணுவ மயப்படுத்தல் குந்தகம் ஏற்படுத்தியமை தெளிவாகவே உள்ளது. எனினும், மொத்த வாக்களிப்பு வீதமும் அதன் பெறுபேறும், இராணுவ மயமாக்கலுக்கு மக்கள் பணிய மறுத்தமையை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி உள்ள 'பவ்ரல்' அமைப்பின் அறிக்கை, வடக்கில் ஊடகங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், தாக்குதல்கள் குறித்தும் துல்லியமாக எடுத்துச் சொல்கிறது.

★ வடக்கு மாகாண சபைத் தேர்தல் பரப்புரைகளில் ஆளுநர் குறிப்பிடத்தக்க அளவில் தொடர்புபட்டிருந்தமை, அவரது பதவிக்குரிய வகிபாகம் மற்றும் அதிகாரங்கள் குறித்த ஒரு சர்ச்சையையும், வடக்கு மாகாணத்துக்குரிய அதிகாரப் பகிர்வுகள் மீது தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. அது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் அவதானிப்புகளையும், கண்டனங்களையும்-

அரசும் அதன் தலைவர்களும், அதன் அதிஉயர் அதிகாரிகளும் வடக்கில் கோலோச்சும் அதிகாரிகளும் கருத்தில் கொள்வார்களா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஜனநாயகக் கட்டமைப்பின் தாரதம்மியங்களை கடாசி எறியும் போக்கிற்குள் மூழ்கி ருசி கண்டவர்கள், 'பவ்ரலி'ன் முடிவுகளை (Findings) ஏறெடுத்தும் பார்ப்பார்களா என்பது பெரும் சந்தேகமே.

அரச பொதுச் சேவை, பொலிஸ் சேவை, தேர்தல் ஆணைக் குழு ஆகியன சுயாதீனமாகச் செயற்பட வகை செய்த அரசமைப்புக்கான பதினேழாவது திருத்தம் புதைக்கப்பட்டு, ஜனாதிபதிக்கு முழு அதிகாரங்களையும் வழங்கும் பதினெட்டாவது திருத்தம் விதைத்து வளர்க்கப்பட்டது.

அதன் கீழ், தேர்தலின் போது அரச வளங்கள் அப்பட்டமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்குத் தங்கு தடையின்றி "உள்ளார்ந்த வசதி" கிடைக்கிறது. "பவ்ரல்" அமைப்பு இதனை மிக மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளது.

இத்தகைய சூழமைவும், வசதியும் தொடரும் வரை, அரச வளங்கள் ஆட்சியில் உள்ளவர்களுக்கு, மற்றும் வேண்டப்படுபவர்களுக்கு ஜனநாயக விழுமியத்தை ஏப்பம் விடுவதற்கு தொடர்ந்து வகை செய்யும் என்பதனை "பவ்ரலின்" அறிக்கை மிக துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

மொத்தத்தில், ஜனநாயக நாடு என்று கொள்ளப்படும் (இல்லை இல்லை சொல்லப்படும்) இலங்கையில், அதன் வடபுலத்தில் மக்களின் சிவில், அரசியல் உரிமைகளுக்கு தடையாக, படையினர் செயற்படுகின்றனர் என்பது பென்னம் பெரும் விவகாரமாகும். ஆனால் அது அரசின் காதில் விழுமா என்பது உயர்ந்து, வளைந்து நிற்கும் வினாவாகவே தொடரும்.....!

# இலங்கையில் தோல்விகண்ட ஐ.நா.வின் செயற்பாடுகள்

பீ.ஏ.அந்தோனிமார்க்

*(இன்று (ஒக்ரோபர் 24) ஐக்கிய நாடுகள் தினமாகும் அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது)*

உலகத்தின் சமாதானத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் அளப்பரிய சேவையை யாராலும் மறக்க முடியாது. 1945 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டது. 1939 ஆம் ஆண்டு ஆரம்பமான முதலாவது உலகப் போர் மற்றும் 1941 ஆம் ஆண்டில் ஜப்பானால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் உலகப் போர் என்பவை காரணமாக உலகில் கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். 1945 ஆம் ஆண்டு வரையும் போர் நடைபெற்றது. இறுதியில் பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தில் இப்படியான போர் மூலம் அழிவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஒரு ஸ்தாபனம் வேண்டுமென தீர்மானமெடுத்தன.

1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடினர். இவர்களுடன் தென்அமெரிக்காவும் இணைந்து கொண்டது. அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை உருவாகியது. 1945 ஜூன் 26 ஆம் திகதி ஐ.நா. சாசனம் 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டது. போலந்து இந்த மாநாட்டில் பங்குபற்றாத போதும் பிறிதொரு தினத்தில் கைச்சாத்திட்டு ஐ.நா.வின் 51 ஆரம்பகால அங்கத்துவ நாடுகளுடன் ஒன்றிணைந்தது.

ஐ.நா. ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை 1955 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐ.நா.வில் அங்கத்துவம் பெற்றது. இதன் பின்னர் ஒரு வருடம் கழிந்து 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானும், 1973 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் ஜேர்மனியும் அங்கத்துவம் பெற்றன. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின்படி ஆரம்ப அத்திபாரமிட்ட ஐந்து நாடுகளும் நிரந்தர பாதுகாப்புக்குரிய அங்கத்துவ நாடுகளாகும். ஆனால் இன்று 193 நாடுகள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. ஐக்கி நாடுகள் சபை பல சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களை உருவாக்கியுள்ளது. அதில் முக்கிய மானவைகள் சிறுவர்களைப் பராமரிக்கும் யுனிசெப் ஸ்தாபனம், அகதிகளைப் பராமரிக்கும் யூ.என்.எச்.சி.ஆர்.ஸ்தாபனம், ஐக்கியநாடுகளின் அபிவிருத்தித் திட்ட (UNDP) ஸ்தாபனம், மற்றும் இவைபோன்ற இன்னும் பல ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. உலக வங்கி, உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவு ஸ்தாபனம், உணவு விவசாய ஸ்தாபனம், உலக தொழில் ஸ்தாபனம், உலக வர்த்தக ஸ்தாபனம், ஐ.நா.கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனம், சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம், சர்வதேச கடற்றுறை தாபனம், ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார தாபனம் (UNESCO) இது போன்ற இன்னும் பல ஸ்தாபனங்கள் இதன் கீழ் இருந்து மக்களுக்கு பலவிதமான சேவைகளைச் செய்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் எட்டு பெரும் பிரிவுகள் உள்ளன.

1.பொதுச் சபை
2.பாதுகாப்புச் சபை
3.பொருளாதார சமூக நலச் சபை
4.நம்பிக்கைப் பொறுப்புச்சபை
5.சர்வதேச நீதிமன்றம்
6.செயலகம்
7.செயலாளர் நாயகம்
8.ஐ.நா. வரவு செலவுத் திட்டம்

### நோக்கங்களும் கோட்பாடுகளும்

சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல், மக்களின் சுயநிர்ணய மற்றும் சம உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பு கொடுக்கும் அடிப்படையில் நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்தல்.

சர்வதேச பொருளாதார சமூக கலாசார, மனிதாபிமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிப்பதிலும் ஒத்துழைப்பை மேற்கொள்ளல்.

இப் பொது நோக்கங்களை அடைவதில் நாடுகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் மத்திய நிலையமாக செயற்படுதல் போன்றனவாகும்.

### பணிகளும் அதிகாரங்களும்

♦ ஐ.நா.வின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.

♦ சர்வதேச நெருக்கடிக்கும் வழிகோலக் கூடிய ஏதேனும் பிணக்கை அல்லது பிரச்சினையை விசாரித்தல்.

♦ அத்தகைய பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகளை அல்லது தீர்வுகளை, நிபந்தனைகளை பரிந்துரை செய்தல்.

♦ ஆயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்குத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல்.

♦ சமாதானத்துக்கான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்பு செயல் ஏதாவது உள்ளதா என்பதை ஆராய்ந்து தீர்மானித்து அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் பரிந்துரை செய்தல்.

♦ ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்தல்.

♦ போர் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.

♦ செயலாளர் நாயகத்தை நியமிப்பதற்கு பொதுச் சபைக்கு பரிந்துரை செய்தல், மற்றும் பொதுச் சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமித்தல் என்பவையாகும்.

இதன் தலைமைச் செயலகம் நியூயோர்க்கில் உள்ளது. இதன் பணிமனைக் கட்டடம் யோண் டி.எரிக்கி பெல்லர் என்பவரின் நன்கொடையினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முதலில் பொதுச் செயலகமும் அதை அடுத்து ஐ.நா. செயலாளர் நாயகத்தின் செயலகமும் பின்பு 30 அடுக்கு மாளிகைகளும் கட்டி முடிக்கப்பட்டன. 1961 ஆம், 1962 ஆம் ஆண்டுகளில் பொதுச் சபை கூடலுக்காக பெரிய கட்டடம் அமைக்கப்பட்டது.

### ஐ.நா.செயற்பாடுகள் இலங்கையில் தோல்வி

ஆனாலும் ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள் இலங்கையில் தோல்வி அடைந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிப் போரில் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று நிபுணர் குழுக்களின் விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் அரச உத்தியோகத்தர்களினதும் உலக உணவுத் திட்ட(World food programme) தினதும் அறிக்கையின் படி ஒன்றரை லட்சம் பேரை காணவில்லை என்று கூறப்படுகிறது. இந்த அறிக்கை சரியென மன்னார் ஆயரும் கூறியுள்ளார். அத்துடன் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட வீடுகளும் தரைமட்ட மாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### இலங்கையில் இறுதிப்போர் குறித்த ஐ.நா.அறிக்கைகள்

ஏற்கெனவே இது சம்பந்தமாக 3 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை போர் சம்பந்தமாக விசாரணைகளைச் செய்யும்படி கேட்டுள்ளன. அவைகள்

1. ஐ.நா.சபை நிபுணர் குழு 2011 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12 ஆம் திகதி கையளித்த அறிக்கை.

2.சாள்ஸ் பெற்றியின் (Chartes petrie) தல்லமையில் விசாரணைகள் மேற்கொண்ட நிபுணர் குழு 2012 கார்த்திகை மாதம் கையளித்த அறிக்கை.

3.மைக்கல் கீற்றிங் என்ற முன்னாள் ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா.வின் முன்னாள் இணை விசேட பிரதிநிதி 2013 ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி கையளித்த அறிக்கை.

### மைக்கல் கீற்றிங்கின் அறிக்கையின் பரிந்துரைகள்

இந்த அறிக்கை ஐ.நா. சபை இலங்கை போர் நிலைப்பாட்டில் தோல்வி கண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது. அதில் முக்கியமாக ஐ.நா.சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தமது பொறுப்புக்களை முறையாக மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நல்ல செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தல் வேண்டும். இது சம்பந்தமாக ஐ.நா. சபைக்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும், மனித உரிமைகள் மீறும் போது அதை தடை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

### ஜோன் ஹோம்ஸ்ஸின் அறிக்கை

ஜோன் ஹோம்ஸ் தமது அறிக்கையில் ஐ.நா.சபை போரை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இரு பகுதியினரையும் போரை நிறுத்தும் படி கேட்கவில்லை எனவும் விடுதலைப் புலிகளை அழித்து விட்டார்கள் என்ற செய்தியை அறிய ஆவலாய் இருந்தார்கள் எனவும் கூறியுள்ளார்.

### ஐ.நா.சபை மேற்கொண்ட நடவடிக்கைகள்

ஆனால் ஐ.நா.சபை ஆனது கடந்த காலங்களில் உலகில் ஏற்பட்ட பல்வேறு போர்ப் பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளது. அந்த வகையில் சிம்பாப்வே சிறுபான்மை வெள்ளையரின் ஆதிக்க வெறிக்கு முடிவு கட்டி அந்த நாட்டை விடுதலை செய்துள்ளது. தென் ஆபிரிக்காவில் இன வெறியார்களின் கொடுமையை எதிர்த்து நெல்சன் மண்டேலாவை விடுவித்து அந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈராக் குவைத் மீது படையெடுத்த போது, குவைத்தை மீட்டுள்ளது. யூகோஸ்லேவியா பிரச்சினையில் கிழக்கு திமோருக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்துள்ளது. சேர்பியாவின் பிடியில் இருந்து கொசோ வாவை விடுவித்து அங்கீகரித்தது. பர்மாவில் அடக்குமுறைக்கு ஆளாகியிருந்த ஆங்சாங் சூகியை விடுவித்தமை போன்ற பல நல்ல காரியங்களைச் செய்துள்ளது.

### இலங்கையில் ஐ.நாவின் செயற்பாடுகள் போதுமானவை அல்ல

ஆனால் கடந்த 65 ஆண்டுகளுக்கு மேல் அடிமைகளாக பாதிக்கப்பட்டு துன்புறும் தமிழ் மக்களின் பிரச்சினையை இன்று வரையும் தீர்க்காமல் இருப்பது ஐ.நா. சபை உள்நோக்குடன் செயற்படுகிறதா? என்ற கேள்வியைப் பலர் மத்தியில் எழும்பி உள்ளது. கடந்த 65 ஆண்டுகளாக சிங்களவர்களினால் இனக் கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு 56 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். சகல சொத்துக்களும் அழிக்கப்பட்டு, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஐ.நா. சபையானது இனியாவது திருந்தி தமிழ் மக்களுக்கான சமஷ்டி ஆட்சியுடன் கூடியசுய ஆட்சியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கூட்டமைப்புக்குள் 'குருவிச்சைகள்'

கந்தவனம்
கோணேஸ்வரன்

எமது இலட்சியம் பெரிது. எல்லோரும் ஒன்றுபட்டு உழைத்தால்தான் அதனை வென்றெடுக்கலாம் என்ற உணர்வு சாதாரண தமிழ் மக்களுக்கே உண்டு. இந்நிலையில் தமிழர்களைக் காப்பாற்ற உழைக்கப் போகின்றோம் என்று பிதற்றிக் கொண்டு வடமாகாணசபைத் தேர்தலில் நின்று வெற்றிபெற்றவர்களுக்கு இந்த உணர்வு இல்லாமற் போனது எப்படி என்பது தான் தமிழ் மக்களிடையே இன்று எழுந்துள்ள கேள்வி.

மக்கள் ஒன்றுதிரண்டு வாக்களித்தது வீட்டுச் சின்னத்துக்கும், அச்சின்னம் தாங்கி நிற்பவர்களின் இலக்குத் தவறாத உழைப்புக் குமே. இது தவிர தனிப்பட்ட எவருக்கும் அல்ல என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாமற்போனது எப்படி?

தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்குப் புறம்பாக நடந்தால் தன்னையே மக்கள் தூக்கியெறிந்து விடுவார்கள். தனக்குத் தரும் மரியாதை, மாலை, அன்பு, ஆதரவு எல்லாம் அவர்களின் நோக்கத்துக்காக உழைக்கும் ஒரு மனிதனாகத் தான் நிற்பதாலேயே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே பல மேடைகளில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதற்குப் பின்னரும் கூட தமக்குள்ள சிறப்பால்தான் வாக்குகள் கிடைத்தன என்று இவர்கள் எப்படித்தான் நம்பினார்களோ தெரியவில்லை?

### தடுமாறாத தலைமை

வடமாகாணசபைத் தேர்தல் களத்தில் யார் முதலமைச்சர் ஆவார் என்பது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித தடுமாற்றத்தையும் கொண்டிருக்கவில்லை. இவர்தான் உங்கள் முதலமைச்சர். இவர் தான் வடமாகாணசபையை வழிநடத்திச் செல்லப்போகிறார் என்று விக்னேஸ்வரனைத் தெளிவாக முன்னிறுத்தியே தமது பரப்புரைகளைத் தொடங்கியிருந்தனர்.

இப்போது கட்சி பற்றியெல்லாம் பேசும் எந்த வேட்பாளரோ அல்லது எந்தத் தலைவரோ தமது தேர்தல் பரப்புரைகளின் போது நான் ஈழமக்கள் புரட்சிகர முன்னணி சார்பாகப் போட்டியிடுகின்றேன் என்றோ, தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பாகப் போட்டியிடுகின்றேன் என்றோ, தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பாகப் போட்டியிடுகின்றேன் என்றோ கூறவில்லை. எந்தத் துண்டுப் பிரசுரத்திலும் தம்மை அவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்ளவும் இல்லை.

### ஒரே சின்னம் வீடு அதற்கே மக்கள் ஆணை

எல்லோரது அடையாளமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே இருந்தது. அவர்களின் சின்னம் வீடாகவே இருந்தது. மக்கள் ஒருமித்து வாக்களித்தார்கள்: வேட்பாளர்கள் இருபத்தெட்டுப்பேர் அபரிமிதமாக வெற்றி பெற்றார்கள். தலைமை வேட்பாளருக்குத் தனியானதொரு விசேட ஆணையை மக்கள் வழங்கியிருந்தார்கள்.

அதேவேளை தலைமை வேட்பாளர் எந்த வீட்டுப்படியும் ஏறியிறங்கவில்லை. தனது திறமை, நேர்மை, கண்ணியம் என்பவற்றால் மக்களைக் கவர்ந்தார். அவர் நிதானமாகவும், துணிச்சலாகவும் செயற்பட்டுத் தம்மை வழிநடத்துவார் என மக்கள் நம்பி எவரும் நினைத்துப்பார்க்க முடியாத அதிகூடிய விருப்பு வாக்குகளை அவருக்கு அளித்திருந்தார்கள்.

### மக்கள் நம்பிக்கையை நிறைவேற்றுவாரா விக்கி?

இதன் அர்த்தம், வடமாகாண மக்களின் அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பையும் தேர்வான அனைத்துப் பிரதி நிதிகளை வழிநடத்தும் பொறுப்பையும் மக்கள் விக்னேஸ்வரனிடத்தில் ஒப் படைத்திருக்கிறார்கள் என்பதே. இதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. எனவே, மக்களின் நம்பிக்கையை முதல்வர் சிவிர நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல் தெரிவான மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் முதலமைச்சரின் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாகச் செயற்பட வேண்டும் என்பதுதான்.

### சந்திக்கு இழுத்திருக்கக் கூடாது

இந்த நிலையில் சட்டப்படியும் நியாயப்படியும் தனக்கு இசைவான அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு வடமாகாண முதல்வரிடமே இருக்கிறது. தெரிவான உறுப்பி னர்கள், இது தொடர்பான தங்கள் விருப்பங்களையும் அபிப்பிராயங்களையும் அவரிடம் முன்வைக்கலாம்.

அதில் தடையேதும் இல்லை. வேண்டுமானால் தமது எண்ணத்துக்கு இசைவான நியாயங்களை வலியுறுத்திப் போராடியும் இருக்கலாம். இதில் யாரும் தவறு காண முடியாது. இது ஜனநாயக உரிமையுங்கூட. ஆனால் இவற்றை அவர்கள் பூட்டிய அறைகளுக் குள்ளேயே பேசித்தீர்த்திருக்க வேண்டும். மக்கள் முன் வரும் போது முதலமைச்சரின் தெரிவை ஏற்றுக்கொண்டவர்களாகவே வந்திருக்க வேண்டும்.

ஒருவேளை முதலமைச்சர் பிழையான அமைச்சுத் தெரிவுகளை மேற்கொண்டுள்ளார் என்ற அபிப்பிராயம் இருப்பினுங்கூட அதனை பொது மக்களிடம் வெளிப்படுத்தாது இருக்கும் பண்பாளர்களாக மக்கள்முன் வர வேண்டும். தொடர்ந்தும் உள்ளுக்குள்ளேயே பேசித்தீர்க்க முயலும் தலைமைத்துவப்பண்பு நிறைந்தவர்களாக நடந்திருக்க வேண்டும்.

### குருவிச்சைகள்

ஆனால் மக்கள் பிரதிநிகள் சிலர் இவற்றுள் எந்தப் பண்பையும் கொண்டிருக்கவில்லை. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற பதவியேற்பு வைபவத்தை இவர்கள் சிறுபிள்ளைகள்போல் புறக்கணித் திருக்கிறார்கள். தாம் வாழ்வதற்குக் காரணமாக இருக்கும் தாய்மரத் துக்கே தீங்கு செய்யும் குருவிச்சைகளாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

### பதவி ஆசையா காரணம்?

எவ்வித பொருத்தமான காரணங்களுமின்றி பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளாமல் விட்டிருக்கிறார்கள். வெளியில் போட்டுடைக்க முடியாத சுயநலக் காரணங்களைத் தொண்டைக்குள்ளேயே வைத்துக்கொண்டு ஆளுக்கொரு காரணத்தை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். தன் தம்பிக்கு அமைச்சுப்பதவி தரவில்லை என்பதற்காக ஒருவர் முரண்பட்டிருக்கிறார்.

அமைச்சுப் பதவிகள் தமக்குத் தரப்படவில்லை என்பதால் ஒரு கட்சியின் தலைவரும் இன்னோர் கட்சியின் உறுப்பினர்கள் இருவரும் முரண்பட்டிருக்கிறார்கள். இந்த நால்வருமாகச் சேர்ந்து தங்கள் வார்த்தைகளை நம்பி ஏமாந்த உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டு பதவியேற்பு நிகழ்வுப் புறக்கணிப்பை நடத்தியிருக்கிறார்கள்.

முதலமைச்சருக்கு உறுதுணையாகச் செயற்படவேண்டும் என்றே மக்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். மாறாக அமைச்சுப்பதவிக்காக மோது வதற்காக மக்கள் வாக்களிக்க வில்லை.

பொது வேட்பாளராக விக்னேஸ்வரனை நிறுத்துவதற்கும் அவரையே முதலமைச்சர் ஆக்குவதற்குமான முடிவை தேர்தலுக்கு முன்னர் எல்லோரும் சேர்ந்துதான் மேற் கொண்டிருந்தார்கள். இந்த முடிவின் மூலம் முதலமைச்சராகத் தேர்வாகும் விக்னேஸ் வரனுக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்ற உறுதியையும் வெளிப்படுத்தி இருந்தார்கள்.

எனினும் தேர்தல் நிறைவுற்று கடமைகளைச் செய்ய ஆயத்தமாகும் போதே முதலமைச்சர் மேல் குறை கூறுபவர்களாக இவர்கள் செயற்படத் தொடங்கியுள்ளார்கள். முதலமைச்சரோ தகுதிப் பொருத்தம் பார்த்து தான் நான்கு அமைச்சர் களையும் தேர்வு செய்திருக்கிறார். கட்சி அடிப்படையில் பார்த்தாற்கூட இரண்டு பேர் தமிழரசுக் கட்சியிலிருந்தும் ஒருவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்தும் நான்காமவர் தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்தும் தெரிவாகியுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பான அமைச்சராக நியமனம் பெற்றவர் பொருத்த மானவர் என்பதை ஏற்று அவ்வியக்கத்தின் தலைவர் செல்லம் அடைக்கலநாதன் பதவியேற்பு நிகழ்வில் பங்குபற்றியிருந்தார். ஆனால் அதே அணியைச்சேர்ந்த சிவாஜிலிங்கமோ, வைத்தியர் குணசீலனோ தமக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதற்காகப் புறக்கணிப்புச் செய்திருக்கிறார்கள்.

### தம்பிக்காக அண்ணன்

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியைப் பொறுத்தமட்டில் ஒருவர் அமைச்சராக நியமனம் பெற்றிருக்கிறார். ஆனால் அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனோ தனது தம்பியாருக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதால் கொதித்தெழுந்து நிகழ்வைப் புறக்கணித்திருக்கிறார். அதுமட்டுமன்றி தனது கட்சி சார்ந்து அமைச்சுப்பதவி பெற்ற ஐங்கரநேசனுக்கும் தமது கட்சிக்கும் இனிமேல் ஒட்டோ, உறவோ இல்லை என்று அறிக்கைவேறு விட்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகத்துக்கும் இதனை கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார். தனக்குத் தெரியப்படுத்தாது ஐங்கரநேசன் பதவியைப் பெற்றுக்கொண்டார் என்று இவர் சொல்லும் வாதம் பொருத்தமானதாக இல்லை. அவ்வாதத்தை உண்மையென்று ஏற்றுக்கொண்டாற்கூட அது அவருடைய உட்கட்சிப் பிரச்சினையேயன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினையோ அல்லது முதலமைச்சரின் பிரச்சினையோ அல்ல.

### குழப்ப அணியில் சித்தரும் அமைதி பேணும் ஆனந்தியும்

கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் நிற்காத உறுப்பினருக்கும் கட்சி உறுப்பினரைக் கட்டுப்படுத்த முடியாமல் நிற்கும் செயலாளர் நாயகத்துக்குமான பிரச்சினை. புளொட் தலைவர் சித்தார்த்தன் சற்றுத் தெளிந்த மனதுடன் நடந்திருக்கலாம். தன்னைவிட அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற அனந்தி அமைதியாய் இருப்பதை முன்னுதாரணமாகக் கொண்டி ருக்கலாம்.

அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்ற வகையிலும் ஒரேயொரு பெண் என்ற வகையிலும் அமைச்சுப் பதவியைக் கேட்டுப் பெறுதற்கான நியாயங்கள் இருந்தும் முதலமைச்சரின் தெரிவுக்கு அவர் ஒத்துழைத்திருக்கிறார். ஆனால் சித்தார்த்தனோ குழப்ப அணியில் ஒருவராகி விட்டிருந்தார்.

ஊர் மக்களும் தமிழரசுக்கட்சியின் பழைய உறுப்பினர்களும் தர்மலிங்கம் என்ற உன்னத மனிதனின் மகனாகவே அவரைப் பார்க்கிறார்கள். தர்மலிங்கம் ஐயா மக்களுக்காக உழைத்ததை எண்ணி இன்றும் பெருமைப் படுகிறார்கள். சித்தார்த்தன் இவற்றை அனுசரித்து தனது அரசியல் நடவடிக்கைகளை அமைத்துக்கொண்டால் மக்கள் மத்தியில் மேலும் சிறப்புப் பெற வாய்ப்பிருக்கிறது.

### அரசியல் உழைக்கும் வழியல்ல

ஒன்பதுபேர் பதவிப்பிரமாண நிகழ்வைப் புறக்கணித்தமை தொடர்பாக முதல்வர் அன்றைய தமது உரையிலேயே கவலைத் தெரிவித்திருக்கிறார். அரசியல் உழைக்கும் வழியன்று: மக்களை நேரிய பாதையில் அர்ப்பணிப்புடன் அழைத்துச்செல்லும் பொறுப் புடையது என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார். தமது உறவுகளுக்கு அமைச்சுப்பதவிகள் கொடுக்கப்படவில்லை என்பதற்காக நிகழ்வைப் புறக்கணிப்பது சரியான செயலன்று என்றும் இடித்துரைத்திருந்தார்.

முதல்வரின் திறந்த பேச்சு, முன்வைத்த நியாயங்கள் ஆகியவை மக்களிடம் தெளிவை ஏற்படுத்தியதால் புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் அதில் தொடர்ந்தும் நிற்க முடியாமல் உள்நுழைவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டிய நெருக்கடிக்கு உள்ளானார்கள்.

### மாவையிடம் வேகாத பருப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசாவிடம் போயிருக்கிறார்கள். நாங்கள் முள்ளிவாய்க்காலில் சத்தியப் பிரமாணம் செய்யப்போகிறோம். அதற்கு நீங்கள்தான் தலைமை தாங்க வேண்டும் எனவும் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் அவரோ தந்தை செல்வாவின் சமாதியின் முன் பதவிப் பிரமாணம் எடுப்பதற்கான விருப்பைத் தலைவர் சம்பந்தன் வெளியிட்டவேளையில் பதவிப் பிரமாணத்தின் போது கூறப்படும் வாக்கியங்கள் தந்தை செல்வாவுக்கு ஏற்புடையனவல்ல. எனவே பொது இடத்தில் சத்தியப் பிரமாணம் செய்வதே சரியானது எனத் தான் தலைவரிடம் தெரிவித் ததை அவர்களிடம் எடுத்துரைத்திருக்கிறார்.

இந்த நிலையில் அவலப்பட்ட மனித ஜீவன்கள் அடங்கிய புனிதமான முள்ளிவாய்க் காலில் சத்தியப்பிரமாண வாக்கியங்களை உச்சரிப்பது அந்த ஆத்மாக்களுக்கு நாம் செய்யும் துரோகம் ஆகாதா என்றும் கேட்டிருக்கிறார். இத்தகைய ஒரு துரோகத்துக்குத் தலைமை தாங்க தன்னால் முடியாது என்றும் மறுத்து ரைத்திருக்கிறார்.

### ஆயரும் மடங்கவில்லை

மன்னார் ஆயரை இவர்கள் அணுகிய போதும் அவரும் அறிவுரைகள் கூறியிருக்கிறார். ஆனால் சிவாஜிலிங்கமோ எல்லாவற் றையும் உதறித்தள்ளிவிட்டு தனியாளாக முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இந்த நிலையில் தமிழர்களின் புனித மண்ணான முள்ளிவாய்க் காலை அவர் தனது அரசியலுக்காகப் பயன்படுத்திய மையை முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு நிகழ்ந்த மாபெரும் துயரநிகழ்வு என்றே கூறவேண்டும். இப்படியெல்லாம் நடந் துகொள்வது அரசியற் புரட்சி என்று சிலர் கருதலாம். ஆனால் மக்கள் இதனை அரசியல் வறட்சியாகவே பார்க்கிறார்கள். எவ்வாறெனினும் ஒருவர் தவிர்ந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் ஆங்காங்கே தமது பதவிப் பிரமாணங்களை நிறைவு செய்திருக்கிறார்கள். இந்த ஒன்பது பேரும் ஓரணியில் நின்று இதனைச் செய்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

> "கூட்டமைப்பின் ஒன்பது மக்கள் பிரதிநிதிகள் தலைமைத்துவப் பண்பு உட்பட எந்தப் பண்பையும் கொண்டிருக்க வில்லை. தான் வாழ்வதற்குக் காரணமாக இருக்கும் தாய்மரத்துக்கே தீங்கு செய்யும் குருவிச்சைகளாகச் செயற்பட்டிருக் கிறார்கள்"

### தனித்தனி நோக்கங்களால் ஓரணி திரள முடியாத 9 பேர்

ஒன்பது பேரும் தனித்தனி நோக்கங்களுக்காக முனையும்போது ஓரணியில் திரள்வது என்பது முடியாத காரியமாகி விட்டது. மூத்த அரசியல்வாதியான சம்பந்தரின் ஆலோசனைப் படிதான் நாங்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளோம் என்று இப் போது அறிக்கைவிடும் சிவசக்தி ஆனந்தன், வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற பதவியேற்பு நிகழ்வுக்கு இவர்களையும் உட்படுத்தி இருப்பாரேயானால் அவரது அறிக்கை பெறுமதியுடையதாக இருந்திருக்கும்.

### அரசியல் தெளிவானோர் தமிழ் மக்கள்

ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. அரசியல்வாதிகளைக் காட்டிலும் தமிழ் மக்கள் அரசியல் தெளிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். புறக்கணித்துச் சென்ற ஒன்பது பேரின் நியாயங்களையும் புரிந்து வைத்திருக்கிறார்கள். எந்தந்த மாவட்டத்திலிருந்து யார், யார் அமைச்சுப் பதவிக்காகத் துடித்தார்கள் என்பதை அந்தந்த மாவட்ட மக்கள் துல்லியமாகக் கணித்து வைத்திருக்கிறார்கள். தாம் பிள்ளையார் பிடிக்க முயலும் வேளையில் சிலர் குரங்குகளாகிக் கொண்டிருக்கிறார்களே என்ற கவலை தமிழ் மக்களை வதைத் துக்கொண்டிருக்கிறது.

### நெறிதவறிச் செயற்படுவோரை தூக்கியெறிவர் தமிழ் மக்கள்

மாகாண அமைச்சுப் பதவிகள், உறுப்பினர் பதவிகள் ஆகியவை தமிழ் மக்களின் போராட்டப் பாதைக்குப் பயன்படும் படிக் கற்களே தவிர, ஒருசிலர் மாகாண அமைச்சர்களாக வேண்டும் அல்லது உறுப்பினர்களாக வேண்டும் என்பதற்காகத் தமிழ் மக்கள் போராடவில்லை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசை மகிழ்ச்சிப்படுத்துமாற்போல் அல்லது அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு இசைந்தாற்போல் யார் செயல்பட முற்பட்டாலும் தமிழ் மக்கள் அவர்களைத் தூக்கி எறிவார்கள் என்பது சர்வ நிச்சயம். பொருந்தாக் காரணங்களுடன் பொது நிகழ்வைப் புறக்கணித்த உறுப்பினர்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



வல்வெட்டித்துறை சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய 'என் பேனாவின் நிதர்சனம்' நூல் வெளியீடு அண்மையில் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையில் இடம்பெற்றது. அ.அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை கவிஞரும், பருத்தித்துறை பிரதேச செயலருமான த.ஜெயசீலனும், ஆய்வுரையை கவிஞர்கள் சு.குணேஸ்வரன், எஸ்.வேல்நந்தன் ஆகியோரும் நிகழ்த்தினர். நூலை பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் வெளியிட முதல் பிரதியை மருத்துவர் மா.பிரபாகரன் பெற்றுக் கொண்டார். (வ-9)

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்குக் கௌரவிப்பு

## *வலி.கிழக்கு பிரதேச சபை தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஒக்.24

தேசிய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேசத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விசேட நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி வாரம் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று பிரதேச சபை மண்டபத்தில் சபைத் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி சிரமதானம், மரநடுகை மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் போன்றவற்றை முன்னெடுப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாணவர்களிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் விழாவின் போது வழங்கவும் இதில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பரிசளிப்பு விழாவில் வலி.கிழக்கில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் நினைவுச் சின்னம், பரிசில்கள் வழங்குவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலி.கிழக்கு பிரதேசத்தில் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்கில் ஆயிரம் பனம் நாற்றுக்கள் நடுகை செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனை விட வாதரவத்தைப் பிரதேசத்தில் மலைவேம்பு, மரமுந்திரிகை போன்றவற்றை அதிகளவில் நடுகை செய்யவும் சபை தீர்மானித்துள்ளது. (வ-17)

# மோ.சைக்கிளுடன் மோதியது மாடு பயணித்தவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.24

துரத்திச் செல்லப்பட்ட மாடு வீதியின் குறுக்கே ஓடி மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் உயிரிழந்தது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்.கோயில் வீதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் ஸ்ரனி (வயது-21) என்பவரே காயமடைந்தார்.

வீதியின் அருகிலிருந்த காணியினுள். மாடொன்று நின்றுள்ளது. காணிக் குரியவர் அந்த மாட்டைத் துரத்திச் சென்ற போதே மாடு திடீரென வீதிக்குக் குறுக்கே ஓடியதால் வீதியால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிய மாடு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. (வ-4)

# உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு

தென்மராட்சி, ஒக்.24

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள், சமையலாளர்களுக்கான சுகாதார விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் நெஸ்லே பால்மா நிறுவனப் பிரதிநிதிகள் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (வ-9)

# பூநகரிப் பிரதேச கலாசார பேரவையின் கலாசார விழா

பூநகரி, ஒக்.24

பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா இன்று காலை 9 மணிக்கு பூநகரி வாடியடியில் இடம் பெறும்.

பிரதேச செயலரும், கலாசார பேரவைத் தலைவருமான கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் விழா நடைபெறும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.சிறிதேவி ஆகியோரும் கலந்து கொள்வர்.

விழாவில் பேரவையின் 'பூந்துணர்' சஞ்சிகையும், யோசப் பிரான்சிஸ் எழுதிய கவிதைத் தொகுப்பும், பொன்.தில்லைநாதன் எழுதிய 'உண்மைகள் ஊமையாவதில்லை' சிறுகதைத் தொகுப்பும் வெளியிடப்படவுள்ளன. (வ-9)

# ஓய்வு பெற்ற அரச ஊழியருக்கு 'பான்ஏசியா' வங்கி மூலம் கடன்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பான் ஏசியா வங்கி அறிமுகப்படுத்தியுள்ள ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான "சம்மான" கடன் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 82 ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் கடன் பெற்றுள்ளனர்.

குறித்த வங்கியின் நெல்லியடிக்கிளை கடந்த இரு மாதத்தில் இந்தக் கடனை வழங்கியுள்ளது. கடன் பெற்ற 82 பேரும் 2 இலட்சம் ரூபா தொடக்கம் 5 இலட்சம் வரை அவர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. அவர்களில் அதிகமானோர் 2 இலட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாத்திரமே குறித்த வங்கியின் நெல்லியடிக்கிளை கடன்களை வழங்குகிறது. (வ-8)

## கைதடி - நுணாவில் பரிசளிப்பு விழா

கைதடி- நுணாவில் அ.த.க.பாடசாலை பரிசில் நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராகப் பாடசாலையின் முன்னாள் அதிபர் நா.அருட்சோதியும் , சிறப்பு விருந்தினர்களாகப் பாடசாலை பழைய மாணவர் களான வே.சுபாஸ்கரன், மு.அகிலகுமாரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

# மோட்டார் சைக்கிள் விபத்து

தென்மராட்சி, ஒக். 24

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்துடன் மோதி வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளம் பெண்ணின் கை முறிந்தது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நுணாவில் சந்திக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த யேசுதாசன் தமிழ்ச்செல்வி (வயது-21) என்பவர் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புக்கள் தேடி வரும்.



**இடபம்:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**மிதுனம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். எதிர்மறை எண்ணங்கள் ஏற்படும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.



**கடகம்** : எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகளை வழங்குவீர்கள்



**சிங்கம்:** உங்கள் பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள்.



**கன்னி:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். நேர்மறை சிந்தனைகள் தோன்றும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

நாளை

ஐப்பசி-08 வெள்ளிக்கிழமை 25.10.2013
திதி: ஷஷ்டி பி.ப.12.49 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப.01.28 வரை
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்: 10.32 - 12.02 வரை



**துலாம்:** வெளுத்ததெல்லாம் பாலென நினைத்து சிலரிடம் பேசிச் சிக்கிக்கொள்ளாதீர்கள். மற்றவர்களுக்காக உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.



**விருச்சிகம்:** மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் புதிய யுக்திகளால் பழைய பொருள்களை விற்றுத் தீர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.



**தனுசு:** கனிவாகப்பேசிச் காரியம் சாதிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் கடினமான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**மகரம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை மூத்த அதிகாரி உங்களிடம் பகிர்ந்து கொள்வார்.



**கும்பம்:** நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் தள்ளிப் போன வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.



**மீனம்:** சொத்துப் பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மத்தியில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | | | 7 | | 3 | 1 | |
| 5 | | 9 | | | | 6 | | |
| | | 8 | 5 | | | | | 2 |
| | 8 | 3 | 1 | | 9 | 4 | 2 | |
| | | | 7 | | 6 | | | |
| | 4 | 6 | 8 | | 3 | 5 | 7 | |
| 9 | | | | | 1 | 2 | | |
| | | 7 | | | | 9 | | 1 |
| | 3 | 1 | | 9 | | | 5 | 4 |

## *நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 9 | 7 | 1 | 5 | 8 | 2 | 3 |
| 2 | 7 | 8 | 9 | 3 | 6 | 5 | 1 | 4 |
| 1 | 5 | 3 | 2 | 8 | 4 | 7 | 9 | 6 |
| 8 | 4 | 1 | 6 | 5 | 2 | 3 | 7 | 9 |
| 6 | 3 | 7 | 4 | 9 | 8 | 2 | 5 | 1 |
| 9 | 2 | 5 | 3 | 7 | 1 | 4 | 6 | 8 |
| 7 | 9 | 2 | 1 | 4 | 3 | 6 | 8 | 5 |
| 5 | 1 | 4 | 8 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 1 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே

கொலை, கொள்ளை, சண்டை, சச்சரவு என குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதற்கெல்லாம் துணிச்சலுடன் போராடி வெற்றி காண்பது ஆண்களே.


21 ஆம் நூற்றாண்டின் நவீன காலப்பகுதியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை என்கிறார்களே. ஆனால் அரசியலில் ஆண்கள்தான் திடகாத்திரமானவர்கள் என்பதைப் புரிய வைக்கத் தமது திறமை, ஆதிக்கம் என்பவற்றை வெளிக்காட்டுகின்றார்கள்.

பெண்கள் தமது திறமைகளை நவநாகரிகத்தில் மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள். அரசியலில் ஈடுபட அவர்களுக்கு நேரங்கிடைப்பதில்லை.

"நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வடியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்று ஔவையார் பாடினார். இதை அரசியலில் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆண்கள்தான் அரசியலில் அதிகம் பிரவேசிக்கின்றனர். வாய்க்கால் வழியோடி வளர்ந்த புற்கள் தான் பெண்கள். அரசியல் ஒரு சாக்கடை என்பார்கள் எமது மூத்தோர்கள். சாக்கடையை வெட்கம் பாராது சுத்தப்படுத்தும் தொழிலைச் செய்பவர்கள் ஆண்களேதான்.

இப்பொழுது அரசியலில் மேலிருந்து யாரையாவது கீழே தள்ளிவிட்டுத்தான் மேலே ஏறிச் செல்ல முடியும் என்ற நிலைமை காணப்படுகிறது. இதனை ஓர் ஆணால் மட்டுமே சாதித்துக் காட்ட முடியும். யார் யாருக்கு வாக்குப் போடுவது என்ற குழப்பம் காணப்படுகிறது. இதனால் கொலை, கொள்ளை, சண்டை, சச்சரவு என குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதற்கெல்லாம் துணிச்சலுடன் போராடி வெற்றி காண்பது ஆண்களே. எனவே அரசியல் பிரவேசத்தில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே.

*கே.இராதா,*
*இணுவையூர்.*





## என்றும் உன் நினைவுகளுடன்....

அன்பே
கறைபடியாத
உன் புகைப்படத்தை
மனதோடு தழுவுகிறேன்
உதிரத்தோடு
உன் முகம்
கலந்திருக்க...!

நெஞ்சோடு கலந்த
உன் முகத்தை
நினைவோடு ஒரு நிமிடம்
நிறுத்தி
தலைசாய்க்கின்றேன்
தூங்க வந்த விழிகளும்
தூங்க மறுத்தன
உன் நினைவுகளால்.....

*எஸ்.தர்சி, யாழ்ப்பாணம்.*




## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.....................................................

முகவரி :- ..................................................

..................................................

......................... திகதி ......................... கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வாழ்வின் மகிமை

"வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதை அறியாது, வாழ வழி தெரியாமல் வாழும் எம் சமூகம் இந்த வாழ்வின் பெறுமதியை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு எமது வாழ்க்கைப் பயணத்தின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் நாம் பயனுள்ள விதத்தில் செலவிட வேண்டும்.

ஒவ்வொருவர் வாழ்விலும் பல தரப்பட்ட பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள் போன்றவற்றுடன் பின்னிப் பிணைந்து மீளமுடியாத நிலை உள்ளது.

இதனால் வாழ விரும்பாமல் எம்மில் பலர் தம்மைத் தாமே மாய்த்து கொள்கின்றனர். இவர்களின் இந்தச் செயல் இனியும் எம் மத்தியில் நாம் பார்க்க வேண்டுமாயின் அதற்கு எமது வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

எமது வாழ்வை வளமுள்ளதாய் மாற்றக்கூடிய நற்செயல்களில் ஈடுபடுவதன் மூலமே இது சாத்தியமாகும். இதன் மூலம் நாம் வாழ்க்கையின் அர்த்தத்தையும் வாழ்க்கையின் அருமையையும் அதனூடான மகிழ்ச்சியையும் எடுத்துக் காட்டி அதன் வழியாக பிறர் வாழ வழி சமைக்க முயன்றிடுவோம்.



*ம.அ.மரியஜெனிற்றா,*
*சாவகச்சேரி.*

## நவயுக நங்கை...




கற்றைக் கூந்தல் பின்னல் இட
நெற்றியில் திலகம் மின்னலிட
கொடியிடை மறைய சேலை கட்டி
நாணத்துடன் நடை பயிலும்
பெண்தான் எங்கே?
நவயுகத்தில் நங்கை
காற்பங்கு உடையுடுத்தி
கலைந்து விழும் கூந்தலோடு
கண்மை கரைந்தொழுக
உதட்டுச் சாயம் சுரம் ஏற்ற
சுந்தரத் தமிழ் மறைந்து போய்
நுனி நாக்கு ஆங்கிலம் பாட
புயலெனப் போகும்
பெண்தான் இங்கே....

*மாணிக்கராசா,*
*மதிவதனி.*

## காயப்பட்ட இதயம்

நேசித்த இதயத்தை
காயப்படுத்த
தெரிந்தவன்
ஒரு காதலனாய்
இருக்க முடியாது
காயம்பட்ட இதயத்தை
நேசிக்கத் தெரிந்தவனே
காதலன்
நீ என் இதயத்தை
முதல் தடவையாய்
காயப்படுத்தியிருக்கிறாய்
நேசி உயிரே நேசி...



*விஜி. புலோலி.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26.01.1990
இறப்பு 04.11.2012
திதி: 24.10.2013

அமரர்
**தில்லைராஜேந்திரன் கோகிலன் (கோபி)**

ஊரும் பாரும் வியத்திருக்க-காலம்
எல்லாம் இருப்பாய் என்றிருக்க
எம்மை விட்டுப்பிரிந்து விட்டாயே-கோபி
உன்னைப் போல் ஒரு பிள்ளை
இனி வருமா? எமக்கு
காத்திருக்கின்றோம் உன் வரவுக்கு
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவால் வாடும்
சித்தப்பா (பபி), அன்ரி(சீதா),
தங்கை (ஜாயினி), அம்மம்மா, அக்கா,
அத்தான், மருமகள்.

இல. 12/1, சிவநகர்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(37565)(6.3.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24.09.1933
இறப்பு 24.10.2012

அமரர் **மனுவேற்பிள்ளை பீற்றர் பெனடிற்**

அழகான குடும்பத்திற்கு அஸ்திபாரமானவரே
மண்ணுலகினை விட்டு மறைந்தாலும்
மனைவி, மக்கள் நாம் உம்மை என்றும் மறவோம்
உம் பிரிவால் துயருறும்

அரியாலை. **குடும்பத்தினர்.**

(33146)(6.3.4)

## பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01.04.1942
உதிர்வு 29.10.1999
திதி:பஞ்சமி [24.10.2013]

அமரர்
**தம்பிமுத்து சோமசுந்தரம்**

காலங்கள் கடந்திடினும் என் கனவுகள் கலையவில்லை
கண்களில் கண்ணீரும் இல்லை
நம் உறவின் நினைவுகளும் உறங்கவில்லை.
காவு கொண்ட காலனுக்கும் கடுகளவும் இரக்கமில்லை
கவலைகளும் கணக்கில்லை
ஈரேழு ஆண்டுகளாய் நீர் போன இடமும் புரியவில்லை.

*உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றேன்.*

*தங்கள் பிரிவால் வருந்தும்*
*மனைவி*

*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.*

(33147)(5.6.3)


# புதுக்குடியிருப்பு கல்விக் கோட்ட
# சிறுவர், முதியோர் தினப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு. ஒக்.24

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தால் புதுக்குடியிருப்புக் கோட்ட மட்டப் பாடசாலை மாணவர் களுக்கிடையே நடத்தப்பட்ட சிறுவர், முதியோர், மாற்று வலுவுடையோர் தினப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**பேச்சுப் போட்டி சிறுவர்தினம்**

**ஆரம்பப் பிரிவு**

ஜே.ராகவி - (மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி.). து.புருசோத்த மன்-(மு/ கோம்பாவில் விக்னேஸ்வரா. வி.), பா.றொபின்சா- (மு/ நெத்தலியாறு.த.வி.).

**கனிஷ்ட பிரிவு**

இ.பிரசாந்தி - (மு/விசுவமடு. ம.வி.). சோ.டேலக்சனா - (மு/விசுவமடு ம.வி.). து.தூயவன் - (மு/கைவேலி கணேசா.வி.).

**இடைநிலைப் பிரிவு**

கே.கிசோதினி-(மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.). கே.டர்மிளா -(மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.). ப.தனுசா- (மு/விசுவ மடு.ம.வி).

**மேற்பிரிவு**

சு.தேவநிஷாந்தினி-(மு/விசுவமடு ம.வி.), அ.கௌசலாதேவி - (மு/உடையார் கட்டு ம.வி.). இ.அனுஜா-(மு/விசுவமடு ம.வி.)

**பேச்சுப் போட்டி முதியோர் தினம்**

**ஆரம்பப்பிரிவு**

ர.கஜானா-(மு/உடையார் கட்டு அ.த.க.பா.), அ.டோமினிசா-(மு/ கோம்பாவில் விக்னேஸ்வரா. வி.), சி.ரிலக்சி -(மு/கோம்பாவில் விக் னேஸ்வரா.வி.).

**கனிஷ்ட பிரிவு**

சி.லனோமி-(மு/புதுக்குடியிருப்பும.க). யோ.கனிஸ்ரன்- (மு/ இரணைப்பாலை றோ.க. ம.வி.), ப.பகீர்த்தன்- (மு/புதுக்குடியிருப்பு ம.க.).

**இடைநிலைப் பிரிவு**

த.கிரிஸ்ரீனா-(மு/பாரதி.வி.), பா.கதுர்சிகா-(மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.), உ.கயல்விழி-(மு/தேவி புரம். அ.த.க.பா.).

**மேற்பிரிவு**

வி.துருபதன்-(மு/உடையார்கட்டு ம.வி., ப.கோஜனனி -(மு/ புதுக்குடியிருப்பு ம.க.), க.கீர்த்தனா - (மு/புதுக்குடியிருப்பு .ம. க.)

**பேச்சுப்போட்டி மாற்றுவலுவுடையோர்**

ப.பிரவீனா - (மு/ ஸ்ரீசுப்பிரமணி ம.வி.), வி.நதிமகள்-(மு/ வள்ளி புனம்.க.உ.வி.), த.அபிநயா - (மு/சுப்பிரமணிய.வி.)

**கனிஷ்ட பிரிவு**

தி.திருநிலவன்-(மு/பாரதி.வி.), வி.கனிஸ்ரா-(மு/வள்ளிபுனம் க.உ.வி.). சு.சுதர்சனா -(மு/ சுதந்திரபுரம் அ.த.க.பா.).

**இடைநிலைப்பிரிவு**

தி.திருமாறன்-(மு/பாரதி.வி.), பு.டென்சிகா - மு/ (வள்ளி புனம்.க. உ.வி.), வி.வினிதா - (மு/பாரதி. வி.).

**மேற்பிரிவு**

இ.அகல்யா - (மு/பாரதி.வி.). ப.யாழினி - (மு/உடையார்கட்டு. ம.வி.).

**சிறுவர் தினம் கட்டுரைப்போட்டி**

**ஆரம்பப்பிரிவு**

து.புருசோத்தமன்-(மு/கோம்பாவில் விக்னேஸ்வரா.வி.). இ.நிருத் திகா-(மு/கோம் பாவில்விக்னேஸ்வரா.வி.), இ.விதுர்சிகா-(மு/விசுவநாதர் ஆரம்ப.பா.).

**கனிஷ்டபிரிவு**

கி.விதுர்சியா-(மு/விசுவமடு.ம.வி.). ஜெ.சயந்தா -(மு/கைவேலி கணேசா. வி.).

பீ.றிஸ்பியா-(மு/மந்துவில் அரசரட்ணம். வி).

**இடைநிலைப்பிரிவு**

ஸ.சஜிதா-(மு/உடையார்கட்டு. ம.வி.), சோ.துவாரகா-(மு/விசுவமடு.ம.வி.), க.மோகனா-(மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.).

**மேற்பிரிவு**

இ.கார்த்திகா-(மு/விசுவமடு.ம.வி.). ப.வதனி-(மு/உடையார் கட்டு. ம.வி.). க.சயந்தினி-(மு/விசுவமடு.ம.வி.).

**முதியோர்தினம் கட்டுரைப் போட்டி**

**ஆரம்பப்பிரிவு**

ம.ரதீசன்-(மு/ஸ்ரீசுப்பிரமணிய. வி.), ச.சுகிர்தா-(மு/ஸ்ரீசுப்பிரமணிய. வி.). சு.வேணுஜா-(மு/புதுக்குடியிருப்பு. றோ.க.வி.).

**கனிஷ்டபிரிவு**

சி.அனுசன்-(மு/கோம்பாவில் விக்னேஸ் வரா. வி.). ம.கீர்த்தி - (மு/புதுக்குடியிருப்பு. ம.வி.). பா.கீர்த்தனா- (மு/சுதந்திரபுரம். அ.த.க.பா.).

**இடைநிலைப்பிரிவு**

வி.துவாரகா-(மு/சுதந்திரபுரம்.அ. த.க.பா.). க.தனுசியா-(மு/தேவிபுரம்.அ.த.க.பா.). க.லேசியன் -(மு/கோம்பாவில் விக்னேஸ் வரா. வி.).

**மேற்பிரிவு**

ஸ்ரீ.கஸ்வினி-(மு/புதுக்குடியிருப்பு.ம.க.). க.வினோதினி -(மு/தேவி புரம்.அ.த.க.பா.). மே.மரியமிதுரா-(மு/இரணைப் பாலை.றோ.க. ம.வி.).

**மாற்றுவலுடையோர் கட்டுரைப் போட்டி**

**ஆரம்பப் பிரிவு**

இ.கேதாரணி-(மு/உடையார்கட்டு. அ.த.க.பா.), கு.ஜெனனி-(மு/நெத்தலியாறு.த.வி.). ர.பவித்திரன் மு/ஸ்ரீசுப்பிரமணிய.வி.).

**கனிஷ்டபிரிவு**

மு.அறிவழகி -(மு/பாரதி.வி.), சி.றொசானி-(மு/ பாரதி. வி.).ஜெ.சத்தியகலா-(மு/வள்ளிபுனம்.க. உ.வி.).

**இடைநிலைப்பிரிவு**

மி.இமையவள்-(மு/பாரதி.வி.). சு.யதுர்சிகா-(மு/மந்துவில் அரசரட்ணம்.வி.). அ.டினுசியா-(மு/புதுக்குடியிருப்பு.றோ.க.வி.).

**மேற்பிரிவு**

ந.சிந்துபைரவி -(மு/உடையார் கட்டு.ம.வி.). செ.ஜென்சியா-(மு/இரணைப்பாலை. றோ.க. ம.வி.). அ.அஜித் - (மு/ஆனந்தபுரம். அ.த. க.பா.).
(ந-555)

(தொடரும்)

## நாவல் வெளியீடு

வடமராட்சி, ஒக். 24

பிரபல எழுத்தாளர் தெணியான் எழுதிய 'குடிமைகள்' நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி சீனித்தம்பி கலை அரங்கில் யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நாவலின் வெளியீட்டுரையை சட்டத்தரணி தே.ரங்கனும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி ஆகியோரும் நிகழ்த்துவர். விழா இறுதியில் ஏற்புரையை நாவலாசிரியர் தெணியான் நிகழ்த்துவார்.

(வ-8)

## கல்வியின் நோக்கம் யாது?

கல்வியின் நோக்கம் ஒரு மாணவனை வாழ்க்கைக்குத் தயார் படுத்தலேயன்றி ஜீவனோபாயத்திற்கல்ல.

மாணவர்கள் சிந்தையின் (விக்ஷேபத்தினை) நிலையற்ற நிலையை அடக்கிக் கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். சிந்தையின் அழுக்கை நீக்கி அதைத் தூய்மைப்படுத்த வேண்டும். அல்லாவிடில் இந்த நாட்டின் எதிர்கால நிர்வாகம், அரசியல் அசுத்தமுடையதாகவும் சீர் கெட்டதாகவும் இருக்கும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

2012ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்த சகோதரர்களான
அமரர்கள்





பிறப்பு 12.11.1935 இறப்பு 04.11.2012
**மூத்ததம்பி திருநாவுக்கரசு**
Machine Operator
And Electrician
Sri Lanka National Salt
Corporation Elephant Pass)

பிறப்பு 25.06.1944 இறப்பு 15.03.2012
**மூத்ததம்பி துளசிதாஸ்**
Administrative Officer
Mathematics Department
University of Jaffna.

திதி : 24.10.2013

எங்களை விட்டுப் பிரிந்து இன்று ஒரு வருட காலமாகி விட்டாலும்
என்றும் உங்களின் நினைவுகளுடனேயே இருக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாவாணி
சனசமூக நிலைய வீதி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

(33192) (7.6.3)

**குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19.09.1926
உதிர்வு 17.10.2011

அமரர்
**நன்னித்தம்பி சியம்புநாதன்**
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

திதி - பஞ்சமி (24.10.2013)

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடமோ இரண்டாகியது அப்பா!
நாம் வாழும் நாள்களில் உங்கள்
நினைவுகள் எம்முடன் வாழும்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

(12.6.3)

## 59 ஆவது பிறந்த தின நன்நாளும் 271 நாள்களின் நினைவுகளும்



மண்ணில் 24.10.1954
விண்ணில் 26.01.2013

திருமதி
**தவேஸ்வரி கந்தசாமி**
(மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி)

அன்பு அம்மாவே!
உங்கள் புன்னகை தெரிகையிலே
என் கண்கள் கண்ணீர் வடிக்கின்றது
உங்கள் பேச்சொலி கேட்கையிலே
என் இதயம் இரண்டாகப் பிளக்கின்றது
உங்கள் நினைவால் -நான்
தினம் தினம் வாடுகின்றேன்.
உங்கள் விழிகளின் தரிசனத்தை -நான்
இறுதி வரை காண வேண்டும்.

இல. 2/1, திருவையாறு,
கிளிநொச்சி.

(37566)(5.6.3)

அன்பு மகன் க.பகீரதன்
குடும்பத்தினர்.

## எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்குகிறது மீண்டும்

### பொது முகாமையாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக்.24

மட்டக்களப்பு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் பொதுமக்களின் நன்மை கருதி நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 24 மணி நேர சேவையை வழங்கவுள்ளது என்று அதன் பொது முகாமையாளர் எம். நவறஞ்சன் தெரிவித்தார்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தும் திருத்த வேலைகள் காரணமாக கடந்த சில நாள்களாக அது மூடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளதால் நாளை தொடக்கம் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மீண்டும் இயங்கவுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தப் பகுதியில் பெரும்போக நெற் செய்கைக்காக நிலத்தைப் பண்படுத்தும் உழவு வேலைகளும் விதைப்பும் ஆரம்பித்துள்ளதால், இந்த எரிபொருள் நிலையத்தின் சேவை ஊடாக விவசாயிகள் பெரும் நன்மை பெற முடியும் என்று அவர் கூறினார். (ச)

# தமிழினத்தின் உணர்வுகளுடன் விளையாடுகிறது பேரினவாதம்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக்.24

தமிழினத்தின் உணர்வுகளுடன் விளையாடுவதே பெரும்பான்மையினரின் பொழுது போக்காகிவிட்டது. துட்டகைமுனு மன்னனுக்கு இருந்த மனிதா பிமானத்தைக் கூட மஹிந்த அரசிடம் காணமுடியாதுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் குற்றம் சாட்டியுள்ளார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழினத்தின் உணர்வுகளுடன் விளையாடுவதே பெரும்பான்மையினரின் பொழுது போக்காகிவிட்டது. கடந்த ஓரிரு நாள்களில் நடந்த நிகழ்வுகளை நோக்கும்போது அவ்வாறு தான் எண்ணத் தோன்றுகிறது.

தமிழினத்தின் அடையாளங்களை வடக்கு,கிழக்கில் சிங்கள மயப்படுத்திய அரசு, இன்று மாவீரர் துயிலும் இல்லங்கள் மீதும் தன் அகோரத்தைக் காட்டியுள்ளது. மாவீரர் துயிலும் இல்லங்களை சுற்றிவளைத்து அதற்குள் யாரும் உட்புகமுடியாத சூழ்நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் தமிழரின் உணர்வுளுடன் விளையாடப் பார்க்கின்றது பேரினவாதம்.

சிங்கள இனவாதிகளால் விடுதலை வீரன் என்று போற்றப்படும் துட்டகைமுனுவே தன்னுடன் போரிட்டு உயிர் நீத்த எல்லாள மன்னனுக்கு நினைவிடம் அமைத்து அந்த வழியால் பயணிப்போர் அனைவரும் அந்த மன்னனுக்கு உரிய கௌரவத்தை வழங்குமாறு ஆணையிட்டான் என்று மகாவம்சம் கூறுகிறது.

அந்தவகையில் துட்டகைமுனு மன்னனுக்கிருந்த மனிதா பிமானத்தைக் கூட மஹிந்த அரசிடம் காணமுடியாதுள்ளது.



மட்டக்களப்பு, தரவை, தாண்டியடி, வாகரை உள்ளிட்ட இடங்களில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் அடையாளம் தெரியாத வண்ணம் உருமாற்றம் செய்யப்பட்டு விட்டன. மாவீரர் துயிலும் இல்லங்கள் போருக்குப் பின்னர் நினைவிடங்களுக்கு ஒப்பானவையாகும். அந்த நினைவிடங்களுக்குள் சென்று தங்கள் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தக் கூட வசதிகள் இல்லாமல் செய்யப்பட்டு விட்டன.

வடக்கு, கிழக்கில் எஞ்சியிருக்கும் துயிலும் இல்லங்களை யாவது பாதுகாத்து, சொந்தங்களை இழந்த உறவுகள் வருடா வருடம் அஞ்சலி செலுத்துவதற்கு அரசு இடமளிக்குமா என்பது கேள்விக்குறி தான்.

விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து உயிர் நீத்தவர்களின் உடலம் புதைக்கப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பதும், அதன் அடையாளங்களை இல்லாதொழிப்பதும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைத் தொலைத்து விடும்.

மாவீரர் துயிலும் இல்லங்களை இல்லாது ஒழிப்பதன் மூலம் கல்லறைகளை அழித்து விடலாம். ஆனால், கல்லறைக்குள் துயிலும் மாவீரர்களின் நினைவையும் விடுதலை உணர்வையும் மக்கள் மனங்களிலிருந்து அகற்ற முடியாது. -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பௌத்தம் கஸினோவை அங்கீகரிக்கின்றதா?

### பாஸ்கரா கேள்வி

கொழும்பு, ஒக்.24

கலாசார விழுமியங்களைப் பேணும் நாட்டில் கஸினோ அமைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. பௌத்த மதம் கஸினோவை அங்கீகரிக்கிறதா? என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொம்பனித்தெருவில் கஸினோ சூதாட்ட நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து முஜிபூர் ரகுமான் தலைமையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



இலங்கை கலாசார விழுமியங்களை பேணும் ஒரு நாடு. பௌத்த, இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ மதத்தவர்கள் தமது கலாசாரத்துக்கு அமைய ஒரு கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருபவர்கள்.

இப்படிப்பட்ட கலாசார விழுமியங்களைப் பேணும் ஒரு நாட்டில் கஸினோ நிலையம் அமைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இலங்கையில் மதவாதம் தற்போது தலைவிரித்தாடுகின்றது.

பௌத்தம்தான் முக்கியமானது எனக் கூறி மற்றைய வணக்கஸ் தலங்களான பள்ளிவாசல், கோயில், தேவாலயங்களை உடைக்கிறார்கள். இப்படி பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்துகின்ற செயற்பாடுகள் நடைபெறுகின்ற இந்த ஆட்சியில், ஹஸினோ அமைவது விசித்திரமானது. பௌத்த மதத்தில் சூதாட்டத்தை அங்கீகரிப்பதாக எங்கேயும் தெரிவிக்கப்பட்டுள்ளதா? இது தான் பௌத்த சித்தாந்தமா? இதற்கு அரசு உரிய பதில் அளிக்க வேண்டும்.-என்றார். (ச)



கவிஞர் எஸ்.ஜலால்டீன் எழுதிய "பூப்படைந்த பூக்கள்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் ஏ.சீ.யஹியாகானுக்கு வழங்கினார்.

## இரத்ததான முகாம்

மட்டக்களப்பு, ஒக்.24

ஹற்றன் நஷனல் வங்கியின் மருதமுனை கிளையின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை வங்கியில் நடைபெறவுள்ளது.


இந்த இரத்ததான முகாம் கல்முனை ஆதார வைத்தியசாலையின் அனுசரணையுடன் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த முகாமில் வாடிக்கையாளர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு முகாமையாளர் எம்.எச். எம். பைறுஸ் கேட்டுள்ளார். (ச)

## யானை தாக்கி பெண் படுகாயம்

அம்பாறை, ஒக்.24

அம்பாறை, வீரச்சோலை பிரதேசத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரை யானை தாக்கியதில் அவர் படுகாயமடைந்துள்ளார் என்று சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.



வீரச்சோலை கிராமத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தாயான தம்பையா லட்சுமி (வயது -48) என்பவரே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு வீட்டிலிருந்து மல்வத்தை பிரதேசத்தில் உள்ள விவசாயப் பண்ணைக்கு வேலைக்கு சென்று கொண்டிருந்தபோதே, அவர் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். (ச)

## மத உரிமையான ஹலாலில் எவரும் தலையிட முடியாது

### நவோதய அமைப்புகளின் தலைவர் காட்டம்

கொழும்பு, ஒக்.24

"ஹலால் என்பது இஸ்லாமிய வரலாற்றில் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் ஒரு நடைமுறை. அது ஒரு மத உரிமை. அதனை அனைத்து மதத்தினரும் மதிக்க வேண்டி யது கடமை. மாறாக ஹலாலில் தலையிட எவருக்கும் அதிகாரமில்லை. இந்த விடயத்தில் அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்".

இவ்வாறு நவோதய மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே. கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலிருந்து கண்டி தலதாமாளிகை வரை பொதுபலசேனா செவ்வாய்க்கிழமை நடத்திய வாகனப் பேரணி



தொடர்பில் அவர் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஹலால் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளது. ஹலால் உரிமை, மதத்துடன் சம்பந்தப்பட்டது. ஹலாலை முஸ்லிம்கள், மாற்று மதத்தவர்கள் மீது திணிக்க வில்லை. எனவே, ஹலாலுக்கு எதிரான போராட்டம் தேவை யற்றதொன்று. இந்த விடயத்தில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சைகள் தொடர்பில் நாம் கடும் அதிருப்தி அடைகிறோம். எனவே, இந்த விடயத்தில் அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு மதத்தினுடைய உரிமை கள் தொடர்பில் பிற மதத்தவர் கள் தமது விருப்பு வெறுப்புக்க ளுக்கு அமைய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, ஹலால் விடயத்தில் தேவையற்ற ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை மேற்கொண்டு தேவையற்ற பிரச்சினை கள்ள ஏற்படுத்தி, நாட்டில் குழப்பத்தை உருவாக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது.-என்றார்.

# களையோடை அம்மன் ஆலய கட்டுமானப் பணிக்கு உதவுக

## ஆலய பிரதமகுரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 24
200 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய கட்டுமானப் பணிக்கு மேலும் 50 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப் பட் டுள்ளதாக ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கந்தையா நாகேந்திரம் தெரிவித்தார்.

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய மீள் புனரமைப்புப் பணி எனும் தலைப்பில் சிவஸ்ரீ கந்தையா நாகேந்திரம் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆலயங்களில் நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்று.

இந்த ஆலயத்தில் இரு நூற்றாண்டு காலத்தின் பின்னர் மக்களின் நிதி உதவியில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளைக் கற்களை கொண்டு தற்போது புனரமைப்புப் பணிகள் பிரசித்தி பெற்ற சிற்பிகள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் முழுமையான உட்கட்டுமானப் பணிகள் நிறைவுற மேலதிகமாக மேலும் 50 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள உறவுகள், அன்புள்ளங்கள், நன் கொடையாளர்கள் இவ்வாலயத்துக்கு உதவுவதன் மூலம் குறுகிய காலத்தில் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய முடியும்.-என்றார்.

இதேவேளை, களை யோடை கண்ணகை அம்மன் ஆலய புனரமைப்புப் பணிகளை வெளிநாட்டில் உள்ளோர் மற்றும் உள்நாட்டவர்கள் வருகை தந்து பார்வையிடுமாறு ஆலய பிரதமகுரு கேட்டுள்ளார். (வ-50)

> “ தற்போது புனரமைப்புப் பணிகள் பிரசித்தி பெற்ற சிற்பிகள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பளை கல்விக் கோட்டத்தில் போட்டிகள்

தென்மராட்சி, ஒக். 24
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு போட்டிகளை நடத்தவுள்ளனர்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளனர்.

போட்டிகளின் விவரம் வருமாறு:

தரம்-1 சொல் கோர்த்தல், தரம்-2 நிறந்தீட்டல், தரம்-3 விரும்பிய கதை, தரம்-4,5 திருக்குறள் மனனம் அதிகாரம் 1-5, தரம்-6,7 ஆங்கில சொல்வதெழுதல், தரம்-8,9 கட்டுரை, தரம்-10,11 பொது அறிவு வினாடி வினா, தரம் 12, 13-சிறுகதை.

சிறுகதைப் போட்டிக்கான சிறுகதைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இதேவேளை, முன்பள்ளி மாணவர்களுக்கு கதை சொல்லும் போட்டியும் இடம்பெறுமென பிரதேச சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார். (வ-9)

★ ★ ★

தென்மாரட்சி, ஒக்.24
மீசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளாக இன்று காலை 9 மணிக்கு முன்பள்ளிச் சிறார்களுக்கான கதை நேரமும், சிறுவர்களுக்கான படக்காட்சியும் நாளைக் காலை 9 மணிக்கு மீசாலை கணபதி முன்பள்ளியில் நடமாடும் நூலக சேவையும் இடம்பெறுமென நூலகர் திருமதி த.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (வ-9)

★ ★ ★

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தால் புத்தக மற்றும் முப்பரிமாண கண்காட்சி நூலக மண்டபத்தில் இன்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (வ)

# வியாபாரத்தில் நட்டம் தலைமறைவாகிய வர்த்தகர்

தென்மராட்சி, ஒக். 24
வியாபாரத்தில் ஏற்பட்ட பெரு நட்டத்தால் கடன் சுமை தாங்க முடியாததால் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மேலும் ஒரு வர்த்தகர் தலைமறைவானார்.

மற்றொரு கடைக் காரரிடம் அவருக்குத் தாம் கொடுக்க வேண்டிய கடன் தொகைக்காக கடைக்குள் இருக்கும் பொருள்களை எடுக்குமாறு கூறிவிட்டு திறப்பையும் அந்தக் கடைக்காரரிடம் கொடுத்துவிட்டு தலை மறைவானார்.

இதேவேளை, கடை மூடப்பட்டுள்ளதாக அறிந்த கடையின் உரிமையாளர் தனக்கு வரவேண்டிய வாடகைப் பணத்தை செலுத்தும் வரை கடை திறக்கப்படக் கூடாது எனக் கூறி கடைக்கு மாற்றுப் பூட்டுகளைப் பொருத்தி விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வரணி நூலகத்துக்கு விருது

வரணி, ஒக். 24
கடந்த வருடம் வாசிப்பு மாதத்தை ஒட்டி பிரதேச சபைகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நூலகங்களால் நடத்தப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் வரணி நூலகத்துக்கு சிறப்பு விருது கிடைத்துள்ளது.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவை சபையால் இது தொடர்பான விவரங்கள் சம்பந்தப்பட்ட நூலகங்களின் நூலகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கா தலைமையில் நிகழ்வு இடம்பெறும். இதே வேளை, குறித்த பிரதேச சபையின் கீழ் இயங்கும் மிருசுவில், சரசாலை, நாவற்குழி, கைதடி போன்ற நூலகங்களும் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

# வலி. மேற்கில் அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24
மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பான அபிவிருத்தி கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி. மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெறும்.

சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அனைத்து சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (வ-50)

# சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் சங்கத்தில் கூட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், ஒக். 24
சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் சங்கத்துக்கான பொதுக் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கூட்டத்தை கூட்டுமாறு மாவட்ட கூட்டுறவு ஆணையாளரை கோரியுள்ளார்.

அதையடுத்தே அடுத்த வார இறுதிப் பகுதியில் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு ஜே 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த உறுப்பினர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவுள்ளது. (வ-41)

# மரத்துடன் மோதியது டிப்பர்

தென்மராட்சி, ஒக். 24
கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியோர மரத்துடன் மோதி சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் கோப்பாய் - மானிப்பாய் வீதியில் இடம்பெற்றது. இதன்போது யாருக்கும் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. (வ-9)


# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா (இராசமணி) நடராசா



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா (இராசமணி) நடராசா 21.10.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr.ஆ.நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான Dr.பரமானந்தம், அழகானந்தம், குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராஜா (லண்டன்), செல்வராசா (நியூசிலாந்து), வசந்தமலர் (லண்டன்), செல்வரஞ்சனி, சுகுணரஞ்சனி (லண்டன்), சாந்தரஞ்சனி (லண்டன்), ஸ்ரீரஞ்சனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், ஞானேஸ்வரி (லண்டன்), கலாநிதி (நியூசிலாந்து), சிவநடராசா (லண்டன்), சிதம்பரநாதன் (இ.மி.ச), சிவகுமார் (லண்டன்), தவராசா (லண்டன்), சபேசன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், கெங்கா, கஜன், துர்க்கா, நிர்ஜா, சிவந்தி, நவீதன், சஜீவன், அபிகரன், நிஷாந்தி, சுகந்தி, பிரதீபன், றஜீவன், றொனி, லோகேந்திரா, அஜந்தி, மயூரன், மேனகா, மீரா, கிருத்திகா, அபீஷ்ணா, டானியல், ரீனா, பராஷா ஆகியோரின் பேர்த்தியும், செபஸ்தியன் அமிலி, ஆரியன், அக்ஷனா, அபீனா, றோஹான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரி, கரவெட்டி.
T.P: 021 226 3466

(சி/13173) (7.6.3)

தகவல்:
க. சிதம்பரநாதன் (மருமகன்)



# மரண அறிவித்தல்

## சிவலிங்கம் நாகரத்தினம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் டச்சுறோட் இருபாலையை வசிப்பிட மாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய சிவலிங்கம் நாகரத்தினம் நேற்று முன்தினம் (22.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.இரத்தினசிங்கம்
(கிளி-மருமகன்)
075 657 3583

துஞ்சுக்கண்டி லேன்,
கோப்பாய்தெற்கு, இருபாலை. (33230)(6.3.4)



# மரண அறிவித்தல்

## பெரியதம்பி வீரசிங்கம்

( முன்னாள் Foreman காங்கேசன் சிமெந்து கூட்டுதாபனம்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி வீரசிங்கம் நேற்று (23.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், இரவீந்திரன், குகேந்திரன், சாறுமதி, ஜெயந்திரன், காலஞ்சென்றவர்களான சாரதாதேவி, பாலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கக்கடை வீதி, கேணிக்கரை,
அளவெட்டி வடக்கு. (33226)(6.3.4)

தகவல்:
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை தயாபரன்

(முன்னாள் உரிமையாளர்-குரு டீசல் என்ஜினியர்ஸ்,
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)



கொக்குவில் கிழக்கு, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தயாபரன் 20.10.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-மகாலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருவிளங்கம் அவர்களின் பெறாமகனும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் அழகரட்ணம் (நீர்வேலி) ஆகியோரின் மருமகனும், செல்வராணியின் (பவா) அன்புக் கணவரும், Dr.யசோதா, பார்தீபன் (U.K), அபிராமி (U.K), குருபரன் (U.K) ஆகியோரின் தந்தையும், Dr.தேவகுமார், கவிதா (U.K), மோகனராஜா (U.K), தனுஜா (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிரந்தீப், பதஞ்சலி, கதிரவன், கார்த்திகா, ஜனனி, தனஞ்சயன், அபிநயன், ஆரணியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2013)வியாழக் கிழமை ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (33228)(5.6.3)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
021 300 8477, 081 238 5816,071 426 7215

# மாதமொன்றுக்கு 3,000 ரூபா நீர் வரியாகச் செலுத்த முடியும்

### திருவையாறு விவசாயிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24
இரணைமடுக் குளத்தின் மூலமாக மேட்டு நிலத்துக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு மாதமொன்றுக்கு ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாவை மட்டுமே செலுத்துவோம். மாறாக எம்மிடம் கோரப்படும் 6 ஆயிரம் ரூபாவை வழங்க இயலாது. இவ்வாறு திருவையாறு 2 ஆம் பகுதி மேட்டுரில் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
மேற்படி விடயமாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
இரணைமடுக் குளத்து நீரை மட்டுமே இங்குள்ள பலரும் நம்பியுள்ளனர்.
திருவையாறு முதலாவது பகுதியில் 110 விவசாயிகளும், இரண்டாவது பகுதியில் 259 விவசாயிகளும், மூன்றாவது பகுதியில் 300 விவசாயிகளும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் மிளகாய், கத்தரி, வெண்டி போன்றவற்றைப் பயிரிட்டு வருகின்றனர்.

*மிளகாய், கத்தரி, வெண்டி உட்படப் பல பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவற்றுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு மாதமொன்றிற்கு 6 ஆயிரம் ரூபா எம்மிடம் கோரப்படுகின்றது.*

இவற்றுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு மாதமொன்றுக்கு 6 ஆயிரம் ரூபா எம்மிடம் கோரப்படுகின்றது.
ஆனால், விவசாயிகளான நாம் 3 ஆயிரம் ரூபாவை மட்டுமே செலுத்துவதற்குத் இயலுமானவர்களாக உள்ளோம்.
மேலதிகமாக ஏழை விவசாயிகளிடம் நிதி கோரப்படுமாயின் பொதுப் பிரச்சினையை வட மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சரிடம் கொண்டு சென்று நடவடிக்கை எடுப்போம்" எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (க-50)

# சிறுவனைத் துஷ்பிரயோகம் செய்த பிக்கு மீது நடவடிக்கை எதுவுமில்லை

### *பொது அமைப்புக்கள் கவலை*

வவுனியா.ஒக்.24
வவுனியா சிறுவர் இல்லம் ஒன்றில் நடைபெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பௌத்த பிக்குவைக் கைது செய்யுமாறு வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வவுனியா அட்டமஸ்கட பகுதியில் இயங்கிவந்த சிறுவர் இல்லம் ஒன்றில் பௌத்த பிக்கு ஒருவர் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டு எழுந் தது. அண்மையில் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுள்ளான். இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சிறுவர் இல்லத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்டுள்ளனர். குறித்த சிறுவர் இல்லம் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதி அனுசரணையுடன் இயங்கி வருவதாகவும், குறித்த பிக்குவுக்கும் இந்த நிறுவனமே வாகன வசதி செய்து கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளைப் பாதுகாக்கவும், துஷ்பிரயோக செயலில் ஈடுபட்ட பிக்குவைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊடக வியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-402)

# சவூதியில் இடம்பெற்ற விபத்தில் மன்னார் இளைஞர் உயிரிழப்பு

மன்னார், ஒக்.24
மன்னார் பெற்றாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சவூதி அரேபியா டமாம் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உயிரிழந்தவர் மன்னார் பெற்றாவைச் சேர்ந்த குலசிங்கம் சுரேஸ்குமார் (வயது-28) எனவும் தெரியவந்துள்ளது.
கடந்த 2006 ஆம் ஆண்டு சுரேஸ்குமார் தொழில் தேடி சவூதி அரேபியா சென்றுள்ளார். அங்கு கடை ஒன்றிலும் சாரதியாகவும் பணியாற்றி வந்துள்ளார். இவர் வெளிநாடு சென்று சுமார் 7 வருடங்கள் கழிந்துள்ளன.
இந்த நிலையில் இவர் மீண்டும் அடுத்த மாதம் 28 ஆம் திகதி நாடு திரும்பவிருந்தார்.
இந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் சவூதி அரேபியா டமாம் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் சுரேஸ்குமார் உயிரிழந்துள்ளார்.
இவரது சடலத்தை இங்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.
இவர் இறுதியாக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இலங்கை வந்திருந்தார் குறிப்பிடத்தக்கது. (க-12)

## மரண அறிவித்தல்

**விஜயராஜன் ராகுலன்** (ஒன்ராரியோ, கனடா)

மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவருமான விஜயராஜன் (ரகு)-றஞ்சிதகௌரி தம்பதியரின் அன்புப் புதல்வன் விஜயராஜன் ராகுலன் நேற்றுமுன்தினம் (22.10.20103) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற விஜயசுந்தரம், இராஜநாகேஸ்வரி, காலஞ்சென்ற கதிரேசு-கற்பகம் ஆகியோரின் அன்புப் பேரனும், விஜேயின் ஆருயிர்த் தம்பியும், சோதிலிங்கம், காலஞ்சென்ற விஜயகுமாரன், விஜயபாலன், பத்மநாதன், குகேந்திரன், வேதமூர்த்தி,சேகரன், மனோகரன் ஆகியோ ரின் அன்பு பெறாமகனும், திரிபுரசுந்தரியின் ஆசை மருமக னும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறன்ரோவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
திருமதி தி. திரிபுரசுந்தரி (விஜி)
(மாமி-வவுனியா)
(சி/13178) (10,14)

## கண்ணீர் அஞ்சலி



கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இ. விஜயலக்ஷி அவர்களின் அன்புத் தந்தை
**குமாரசாமி இராசதுரை**
அவர்கள் நேற்றுமுன்தினம் (22.10.2013) அமரத்துவம் அடைந்துள்ளார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம்,
கிளி/அக்கராயன் ம.வி.
(33234) (10,14)

## யாழ்ற்ரனின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும் பாடுபடும் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி அவர்களின் அன்பு மாமனாரும், யாழ்ற்ரன் அன்னையின் பழைய மாணவருமான
**அம்பலவாணர் பேரம்பலம்**
அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பிரிவால் துயருறும் (33240)(6.3.4)
ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

# முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள வேண்டும்

***ஹுனைஸ் பாரூக் எம்.பியின் கோரிக்கை ஏற்கப்பட்டது***



முல்லைத்தீவு. ஒக்.24
அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கென விசேட நிதியை ஒதுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. வரவு செலவுத் திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் இடம் பெற்றது.
இதன்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்:
"வன்னியிலிருந்து சுமார் 23 வருடங்களாக இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் இதுவரை காலமும் உரிய முறையில் மீள்குடியமர்த்தப்பட வில்லை. தற்போது வடமாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்துள்ளதால் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது. எனவே இதற்காக விசேட நிதியை ஒதுக்க வேண்டும். அதன் மூலம் வீடமைப்பு, உட்கட்டமைப்பு, தூய குடிதண்ணீர் வசதிகள் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்" என்று கோரிக்கை விடுத்தார்.
தனது இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டாரென நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார். (க-10)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும் **விவேகானந்தன் சஞ்ஜீபன்** அவர்களின் அன்புத் தாய்
**விவேகானந்தன் ரதிவதனா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.
பிரதேச செயலரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்
(33256) (10,14)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஆ.ஜெயமோகன்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தை
**ஆனந்தராசா**
அவர்கள் 23.10.2013 இல் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், உடுவில்.
பிரதேசசெயலரும், உத்தியோகத்தர்களும்.
(33240)(6.3.4)

## மரண அறிவித்தல்

# தங்கராசா சரத்பாபு (சுமன்)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், பழம் றோட் A17/3 வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சரத்பாபு (சுமன்) கடந்த (22.10.2013) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.
அன்னார் தங்கராசா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், றமேஸ் (பிரான்ஸ்), தசீபன் (இந்தியா), சுபா, சுமதாஸ் (லண்டன்), செந்தூரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குமுதினியின் அன்புக் கணவரும், ஜஸ்ரீனின் அன்புத் தந்தையும், கௌந்தினி (பிரான்ஸ்), மீனாம்பிகை (இந்தியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்
ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம்.
(33243) (12.6.3)

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் இந்திரகுமார்**



யாழ். மாதகல் வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Marly-Le-Roi ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இந்திரகுமார் கடந்த (17.10.2013) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், பாலசிங்கம் - சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நவலக்ஷமியின் அன்புக் கணவரும், கௌதம், பிராகாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதலிங்கம், மகேந்திரம், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், குலஞானேஸ்வரன், சந்திரகுமார் மற்றும் புவனேஸ் வரி ஆகியோரின அன்புச் சகோதரரும், செல்வராணி, சசிகலா, சண்முகராசா, நவசக்தி, பவானந்தி, றேகானந் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலநாதன், சுதாகர் ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்றவர்களான குமரேஸ்வரன், நதியா மற்றும் கஜேந்திரகுமார், செந்தில்குமரன், நகுலகுமார், தபேஸ்கரன், காலஞ்சென்ற பகிஸ்கரன் மற்றும் தனுஸ்கரன், ரதீஸ்கா, குகதர்சிகா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சுபாஜினி, தர்மசீலன், ஞானசீலன், பிறேம சீலன் ஆகியோரின் அன்பு மாமனும், உஷாயினி, பிரதாப், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2013) வியாழக்கிழமை பிரான்ஸ் நேரப்படி முற்பகல் 10.30 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
சுப்பிரமணியம் அற்புதலிங்கம் (சகோதர்)
மாதகல் வடக்கு, மாதகல்.
(33242) (45.6.3)



வரிப்பத்தான்சேனை, செரண்டிப் சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையைப் பயன்பாட்டுக்கு வாங்கும் நிகழ்வு வரிப்பத்தான்சேனையில் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் அம்பாறை மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ். ஏ.கலீஸ் கலந்துகொண்டு சேதனப்பசளைத் தொகுதியை நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கிறார்.

# மாநாட்டையொட்டி பேரணிகளுக்குத் தடை

## பதாகைகளையும் காட்சிப்படுத்த முடியாது என்கிறது அரசு

கொழும்பு, ஒக்.24

இலங்கையில் அடுத்தமாதம் பொதுநலவாய மாநாடு நடக்கும்போது, கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் நடைபெறும் சகல பேரணிகளுக்கும் தடைவிதிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

பேரணிகள் நடத்துவது, பதாகைகளைக் காட்சிப்படுத்துவது, கறுப்புக்கொடிகளை பறக்கவிடுவது போன்ற செயற்பாடுகளுக்கு அடுத்த மாதம் முதல் மூன்று வாரங்களுக்கு தடைவிதிக்கப்படவுள்ளது.

50 இற்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் பொதுநலவாய மாநாட்டின் பாதுகாப்புக் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் ஹரிகுப்த றோகணதீர தெரிவித்தார்.



மனித உரிமைகள் நிலையை வெளிப்படுத்தும் போராட்டங்கள் நடத்தப்படலாம் என்பதாலேயே பேரணிகள் மற்றும் பதாகைகள், கறுப்புக் கொடிகளுக்கு தடைவிதிக்கப்படவுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுவதற்கும், அதில் உலகத் தலைவர்கள் பங்கேற்பதற்கும் மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில், இலங்கையில் மோசமான மனித உரிமைகள் நிலையை வெளிப்படுத்தும் போராட்டங்கள் நடத்தப்படலாம் என்பதாலேயே பேரணிகள் மற்றும் பதாகைகள், கறுப்புக் கொடிகளுக்கு தடைவிதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ரூ.15,000 சம்பள உயர்வு வேண்டும்

## தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றம்

அம்பாறை.ஒக்.24

அனைத்து அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 15,000 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும். சிறுபான்மை மக்கள் அவர்களது உரிமைகளைப் பெற்று வாழ அரசு வழி வகுக்க வேண்டும்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கக் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில், அரசைக் கோரும் தீர் மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில், கிளிநொச்சிகரைச்சி பிரதேச சபைக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேலும் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அவையாவன:-

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் பல தரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில் கடமை புரியும் சகல அரச சேவையாளர்களின் நலன் கருதி 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் ரூபா 15,000 சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் அமைய, தற்காலிக, நாள் சம்பள ஊழியர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கைக்கு அமைவாக 180 நாள்கள் தொடர்ச்சியாகச் சேவையாற்றியிருப்பின் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.



வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் 2011.12.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் பதவிகளின் திட்டத்துக்கு அமைவாக காலம் தாழ்த்தாது வகுப்பு II,I க்கு பதவி உயர்வு வழங்கப்படல் வேண்டும்.

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரியும் அட்டவணைப்படுத்தப்படாத சிற்றூழியர்களுக்குச் சீருடை கொடுப்பனவாக வருடாந்தம் 4,000 ரூபா வழங்கப்படல் வேண்டும்.

அரச சேவையாளர்களுக்குரிய விழா முற்பணம் 5,000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரிக்கப்படல் வேண்டும். நீண்டகாலமாக வழங்கப்படும் வாழ்க்கைப்படி "அலவன்ஸ்" தொகை 6,000 ரூபா அடிப்படை மாதாந்த சம்பளத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.

சிறுபான்மை மக்கள் அவர்களின் உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி மூலமாக தீர்வு வழங்க வேண்டும்.

சிறுபான்மை மக்களது அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு, அரசியல் உரிமைகள், மத சுதந்திரம் போன்றவற்றின் மீது அரசு கூடுதல் கவனமெடுத்து உதவவேண்டும்.

வடமாகாண ஊடகவியலாளருக்கான பாதுகாப்பு, கண்ணியத்துவம், நலன் பேணல் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்பவையாகும்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் பெ.சிறிநிவாசன், கரைச்சி, காரைதீவு பிரதேச சபைகளின் தவிசாளர்களான வை.குகராஜா, செல்லையா இராசையா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-30)


**உடனடி வேலை வாய்ப்பு**
**Innovage International (Pvt) Ltd.**

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Innovage நிறுவனத்தின் புதிய 5 கிளைகள் ஆரம்பம். இதற்கு O/L or A/L படித்து முடித்த ஆண்/பெண் இருபாலாருக்கும் பயிற் சியுடன் கூடிய வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

* Customer Service
* Marketing executive
* Asst. Managers
* Managers

குறைந்தபட்ச கல்வித் தகைமை O/L தகைமைக் கேற்ப இலவசப் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை வழங்கப் படும் (10,000 - 15,000)
பயிற்சியின் பின் 30,000 - 50,000
நிரந்தர வேலையுடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.
தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு: கிளிநொச்சி- 077 892 0777
யாழ்ப்பாணம்- 077 632 0962
வவுனியா- 077 190 8997
மன்னார்- 077 700 9820

(33253) (18,14)



**மோட்டார் சைக்கிள் விற்பனை**

NP-G-xxxx, Super Cup Lancer Model (JAPAN) C-90 Honda விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 516 1647

(33241)(6.3.4)



**பணிப்பெண் தேவை**

புலோலி தெற்கு, புலோலியில் வீட்டுப்பணி செய்வதற்கு எவ்வித பொறுப்புமற்ற ஒரு பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை

தொடர்பு: 077 5167472

(33252) (18.16)



Shanthiham, Association for Health and Counselling is a Non Governmental organization, based in Jaffna, committed to support the wellbeing and positive mental health persons, families and communities through providing psychological and community based psychosocial services including trainings, publications and capacity building.

**Shanthiham is interested to receive applications for two important positions.**

**position 1.Executive Director**

A person with sound knowledge and skills in Psychosocial work andManagement, who will officially represent Shanthiham and take care of all the activities of the institution, and work under the supervision of the Management council.

The post will be a full time job, based in the head office, but demands frequent field visits and attending meetings, workshops and conferences in all parts of the country. A valid driving license for light vehicle is essential.

The candidate should possess a Bachelor or Post graduate degree preferably in subjects relevant to Psychology and/or Sociology. S/He should possess minimum of 10 years experience in implementing Psychosocial Projects in the field. A good command in language (both English and Tamil) is mandatory in addition to thorough knowledge on working in computers.

The candidate should have the natural qualities of an administrator and a team member, and will be able to handle any crisis situations in Human Resource Management. S/He should have the interest to develop their knowledge, attitudes and carrier.

Remuneration (including the employee benefits) could be negotiated based on experience and knowledge.

***Duration – 1 year contract subject to renewal.***

**position 2. Finance Manager**

A person with Professional Qualification (or equal to the same) in Accountancy with minimum of 10 years experience in Managing Finance and assets of a large Government or Non government organization, who will be in charge of all the financial matters of Shanthiham, and work under the guidance of the Management council.

The post involves managing all aspects of financial matters of the institution including preparing budgets and submitting financial reports. Shanthiham expects that all its finance should be managed with the assistance of standard software package and thus this post will demand a fluency in working on computers. A good command in language (both English and Tamil) is mandatory.

The candidate should have the natural qualities and interest to work as the team member of a Psychosocial Organization and its values. S/He will be able to handle any crisis situations in the financial matters of the organization and should be answerable to the management committee on any financial matters related to the organization.

Remuneration (including the employee benefits) could be negotiated within the local NGO standards.

***Applications for the above posts should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 01.11.2013.***

**The President,**
**Shanthiham,**
**No.8 8/1, Katpahavinayagar Lane,**
**Off KachcheriNallur Road, Jaffna.** (C/13177)(5.6)

**Telephone No.: 021-2223338**
**E.mailaddress:psych@sltnet.lk**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கில்

ளுக்குச் சேவை செய்ய வேண்டும். அர்த்தமற்ற - தேவையற்ற பேச்சுகளை சம்பந்தன் நிறுத்திக்கொள்ள வேண்டும்." என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புச் செயலர் அலுவலகத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, வடக்கின் காணிப் பிரச்சினை, அங்கு நிலைகொண்டுள்ள இராணுவம், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பாது காப்புச் செயலர் பதிலளித்தார்.

சுமீபத்தில் வடமராட்சியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே வடக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு முதலமைச்சருக்கு உண்டு. பொலிஸாருடன் இணைந்து இதனைச் செயற்படுத்த முடியும் என்று பாதுகாப்புச் செயலர் பதிலளித்தார்.

கூட்டமைப்பிடம் வடக்கில் போதுமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாகாணசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பிரதேசசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பழைய விட யங்களையே கூறிக்கொண்டிருக்காது வீண் குழப்பங்களை ஏற்படுத்தாது தற்பொழுது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் ஒன்றேகால் மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பாதுகாப்புச் செயலர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

**காணி**

வடக்கில் உள்ள காணிகளை இராணுவம் அபகரித்து வைத்திருப்பதாகக் கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வடக்கின் சில பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணிகள் இருந்து வந்துள்ளன. அப்பொழுது பேசாதிருந்த வர்கள் தற்பொழுது இராணுவம் தானாக முன்வந்து காணிகளைக் கையளிக்க ஆரம்பிக்கும்போது பிரச்சினை கிளப்புகிறார்கள். பலாலிப் பகுதியில் உள்ள காணிகளில் பெரும்பாலானவை அரச காணிகள். விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படும் காணிகளும் உள்ளன. இராணுவத்தின் தேவைக்காக குறைந்த அளவு காணிகளை வைத்துக்கொண்டு மிகுதியைப் படிப்படியாக விடுவிப்பதே அரசின் நோக்கம். இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படும் தனியார் காணிகளுக்குப் போதுமான நஷ்டஈடு வழங்கப்படும். தற்பொழுது மயிலிட்டியில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கிலிருந்து இராணுவம் வெளி யேறவேண்டும் என்று கூட்டமைப்பு கோருகிறது. இராணுவத்துக்கு எது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியோ அங்குதான் இராணுவம் நிலைகொண்டிருக்கவேண்டும். கடந்த மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்பதற்காக வாக்களிக்கவில்லை. வடக்கில் நாளாந்த கடமைகளில் இருந்து இராணுவம்விலக்கிவைக்கப்பட்டுள்ளது. வீதித்தடைகள் நீக்கப்பட்டுள்ளன. தற்பொழுது மக்கள் களவு, கொள்ளைகள் பற்றி முறையிடுகிறார்கள். தற்போதைய போக்குத் தொடருமானால் பாதாள உலகக் கும்பல்கள், கிரிமினல்களின் ஆதிக்கம் வடக்கில் ஏற்படலாம்.

**இந்திய மீனவர் ஊடுருவல்**

இந்திய மீனவர்கள் வடக்கில் மீன் வளத்தைச் சூறையாடுகிறார்கள். அவர்கள் பயன்படுத்தும் பிரமாண்டமான கடல் அடி இழுவை ரோலர்கள் மீன் குஞ்சுகள் உட்பட மீன் பெருக்கத்துக்கான வளங்களை அழித்துவிடக் கூடியவை. இந்த முறைமையைப் பயன்படுத்தியதால் இந்தியக் கடல் பகுதியில் மீன் வளம்அழிந்துவிட்டது தற்பொழுது அவர்கள் இலங்கையில் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து இந்தத் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமை மூலம் கடல் வளத்தை அழிக்கிறார்கள். இந்திய மீன்பிடி நிறுவனங்களின் இறால், சிங்கி இறால், நண்டு ஆகியவற்றுக்கு சிங்கப்பூரில் நல்ல கிராக்கி இருக்கிறது. நல்ல விலை போகிறது. இவையெல்லாம் இலங்கை யின் கடல்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களால் பிடிக்கப்பட்டவைதான். இதில் பாதிக்கப்படுபவர்கள் வடபகுதி மீனவர்கள்தான்.

சம்பந்தன் தமிழ்நாடு சென்று தேவையற்ற விட யங்களையெல்லாம் கூறுகிறார். வடபகுதி மக்களுக்கு முக்கி யமான மீனவர் பிரச்சினை இருப்பது குறித்துப் பேசத் தவறிவிட்டார். இந்தி யாவிடம் மிகவும் பலம் வாய்ந்த கரையோரப் பாதுகாப்புச் சேவை உண்டு. இந்திய மீனவர்களின் அத்து மீறல்களை இந்தியாதான் நிறுத்த வேண்டும். யுத்த காலத்தில் தொழில் இழந்து பாதிக்கப்பட்டிருந்த வடபகுதி மீனவர்கள் தற்பொழுதுதான் அந்தப் பாதிப்பிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறார்கள். அப்படியான நேரத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறுவதும் மீன் வளங்களை அழிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இலங்கை மீனவர்கள் எங்கும் சுதந்திரமாகச் சென்று மீன்பிடிக்க முடியும். அவர்களுக்கு 'பாஸ்' நடைமுறை எதுவும் கிடையாது.

**பொதுபலசேனா**

பொதுபலசேனாவின் நடவடிக்கைகளில் ஒரு தரப்பை மட்டும் குறைகூற முடியாது. கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. அது நீண்ட காலப் பிரச்சினை. இப்படியான பிரச்சினைகள் வெளிநாடுகளிலும் உள்ளன. முன்னேற்றமடைந்த சமூகங்களிலும் உள்ளன. மதங்கள் ஒழுக்கம் பற்றிப் போதிக்கின்றன. ஆனால் ஒழுக்கம் சீர்கெடுவதற்கு இங்கு மதங்கள்தான் காரணமாகின்றன. மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் இப்பிரச்சினைகளில் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும்.

மேற்கண்டவாறு பாதுகாப்புச் செயலர் கூறினார்.

**இன ஒற்றுமைக்கு பத்திரிகைகள்**

நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த பத்திரிகைகள் பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். 1974ஆம் ஆண்டு தாம் வடக்கில் கடமையாற்றிய பசுமையான நினைவுகளை பாதுகாப்புச் செயலர் இந்தக் கலந்துரையாடலின் போது பகிர்ந்து கொண்டார்.

ஈழம் பற்றிப் பேசுவதும் பழையதை மீண்டும் மீண்டும் பேசுவதும் பயனளிக்காது. தெற்குடன் சண்டை போடுவதை விட மக்களுக்கு சேவை யாற்றுவதே முக்கியம் என்றும் தெரிவித்தார்.

### சிங்களக்

குடியேறியுள்ளன. இவர்களுக்கான காணிகள் அண்மையில் அளவீடு செய்யப்பட்டுப் பங்கிடப்பட்டுள்ளன.

ஆயினும் சிங்களக் குடும்பங்கள் குடியமர்ந்துள்ள பகுதிக்கு அருகில் உள்ள தமிழ் மக்களை அங்கிருந்து வெளி யேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை சற்றுத் தொலைவில் உள்ள புதுக்குடியேற்றத் திட்டத்தில் தங்கியுள்ள தமிழ் மக்களுடன் இணைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள போதும் அங்குள்ள தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் அளவீடு செய்யப்படவில்லை. இதன் காரணமாக தமிழ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்துக் கேட்டபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது சட்ட ரீதியான விடயம். ஒரு பகுதியினருக்குக் காணியை அளந்து கொடுத்துவிட்டு மற்றையபகுதியினருக்குக்காணியை அளந்து கொடுக்காமல் இருப்பதே சட்டத்துக்குப் புறம்பான செயல். ஆகவே இது தொடர்பில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று நம்புகின்றேன்.

இந்தப் பகுதியில் எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது தொடர்பாகவும் சட்ட ரீதியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினை இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்துள்ளது. வடக்கு மாகாண சபையின் முதல் கூட்டத்தையே இன்னமும் நாம் நடத்தவில்லை. கால அவகாசம் எனக்குத் தரப்பட்டால் இது தொடர்பாக என்னால் பரிசீலித்துப் பார்க்க முடியும் - என்றார். (த-5)

### உள்ளூர்

திய வங்கியின் வடக்கு மாகாண முகாமையாளர் சண் குறிஞ்சிதரனின் ஏற்பாட்டில் அல்லைப்பிட்டியிலுள்ள கடல் அட்டைப் பண்ணைக்கும், வலி. வடக்கில் அமைந்துள்ள திராட்சைத் தோட்டம் ஒன்றுக்கும் அவர் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது குறித்த உள்ளூர் முயற்சியாளர்கள், தமக்கான வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை என்று மத்திய வங்கி ஆளுநரிடம் முறையிட்டனர்.

குறிப்பாகத் தமக்கான பிரத்தியேக கடன்திட்டங்கள் எதுவும் இல்லை என்று அவர்கள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், பொருளாதாரத்தில் மிகவும் முக்கிய பங்களிப்புச் செய்யக் கூடிய இவ்வாறான தொழில் முயற்சிகளுக்கு இலகு கடன்களை அறிமுகப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். (த-5)

### தமிழ்

'வொரு வீடுகளுக்கும் சென்று 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வேரவில் மாவட்ட மருத்துவமனைக்கு வருமாறு அறிவித்துள்ளனர்.

அவர்கள் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் போது 'கிளினிக்' அட்டைகளுடன் வருமாறும் அவர்களுக்கு பணிக்கப்பட்டது. 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் நிறையை அளக்க வேண்டியிருப் பதாகவும் தாய்மாருக்கு சொல்லப்பட்டது. மருத்துமனைக்கு அவர்கள் வந்து சேர்ந் ததும் நீண்ட காலத்துக்கு கருத்தரிக்காது இருப்பதற்கான கட்டுப்பாட்டு முறைமையை ஏற்றுக்கொள்ளுமாறு பலவந்தப்படுத்த ஆரம்பித்த வைத்தியரும் மாதுக்களும் அவர்களது கைகளில் குடும்பக்கட்டுப்பாட்டுக்கான ஊசியை ஏற்றியுள்ளனர்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பலவந்தமான சிகிச்சையை ஏற்றுக்கொள்ள விருப்பம் இல்லை எனத் தெரிவித்த பெண்களுக்கு, எதிர்காலத்தில் குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாதுபோகும் எனவும் மிரட்டப்பட்டுள்ளதாக அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தாய்மார் ஒத்துழைக்கவில்லையாயின் அவர்களது கணவன்மாரை அழைத்து வந்து குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சை செய்யப்போவதாகவும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கை மருத்துவர் மற்றும் தாதியர் மீது கடுமையாகக் குற்றம் சாட்டுகிறது.

இதனையடுத்து பெரும்பாலான பெண்கள் சிகிச்சையை ஏற்றுக்கொண்டனர் எனவும் இவ்வாறான விவகாரங்களை நடைமுறைப்படுத்தும் அரச கொள்கை குறித்து தமது குழு சந்தேகப்படுவதாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இந்தப் பகுதியில் சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகக்கூட இது இருக்கலாம் எனவும் அந்த அறிக்கை எதிர்வு கூறுகிறது.

இந்தக் கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள்.இந்த நிலையில் இவ்வாறான குடும்பக்கட்டுப்பாட்டுமுறைகளை கத்தோலிக்கர்களாகிய தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் கருத்தை உடனடியாக பெறமுடியவில்லை.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கான எந்த விதமான உத்தரவும் இல்லாத நிலையில் இப்படி ஒரு தகவல் வந்திருப்பதாகவும், இது குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரான ஆர்.ரவீந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ)

### பொது நலவாய

சர் க.வி.விக்னேஸ்வரன் விசேட உரை நிகழ்த்தவுள்ளார் என்றும் இதற்கான ஏற்பாடுகளை அரச உயர் மட்டங் கள் செய்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தகவலில் எதுவித உண்மையுமில்லை. என்னிடம் யாரும் இது தொடர்பில் பேசவில்லை. எனக்கும் குறித்த மாநாட்டுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது.

சில சிங்கள ஊடகங்கள் செய்திகளை உருவாக்கி அதனைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் உண்மையாக்கப் பார்க்கின்றன - என்றார். (த-5)

### பதவியிலிருந்து

தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை. சேனாதிராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் பதவி விலகுவதாக அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. தவிசாளருக்கும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-5)

### தண்ணீர்முறிப்புக்

ஈடுபட்டு வருகின்றன. இவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு தொழில் நடவடிக்கைக்குச் சென்றுள்ளனர். குளத்தில் சென்று படகுகளைத் தொழிலில் ஈடுபடுத்திவிட்டு, குளத்தின் மறு கரையில் அமர்ந்திருந்துள்ளனர். தீடீரென குளத்தில் பெரும் நெருப்பு கொழுந்து விட்டெரிவதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் குறித்த இடத்துக்குச் சென்றபோது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த மூன்று படகுகளும் ஒன்றாகச் சேர்த்து கட்டி எரிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை குறித்த குளத்தில், வெலிஓயா பிரதேசத்திலிருந்து பெரும்பான்மையின மீனவர்கள் தொழில் நடவடிக்கைக்காக வருவதாகவும், அவர்கள் சங்கத்தில் பதிவு செய்யாமல் சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், இதனால் உள்ளூர் மீனவர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் அடிக்கடி ஏற்படுவதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மீனவர்களால் நேற்றுக் காலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5)

### துயிலும்

வித்துள்ளார்.

அழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் மீள அமைக்கப்பட வேண்டும் அல்லது துப்பரவு செய்யப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில், கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே யாழ். மாவட்ட இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களுக்கு நினைவுத் தூபிகள் மற்றும் கல்லறைகள் அமைப்பதற்கு உலகின் எந்தவொரு ஜனநாயக அரசும் அனுமதியளிக்காது.

இந்த விடயம், கல்வியியலாளரும், முன்னாள் நீதியரசருமான வடக்கு மாகாண சபை முதல்வர் க.வி.விக்னேஸ்வரனுக்குத் தெரியும்.

அல்.குவைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கத் துருப்பினர் கொலை செய்து, பசுபிக் கடற்பகுதியில் புதைத்தனர். எந்த இடத்தில் அவரைப் புதைத்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது என்றார் ஹத்துருசிங்க.

இது குறித்து எவரும் அமெரிக்காவிடம் கேள்விகளை எழுப்பவில்லை என்பதையும் ஹத்துருசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

### வடக்கின்

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வின் கருத்துக்கு அமைய தற்போதைய கல்வி நிலையை ஆராய்ந்து மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களைநடை முறைப்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்திலுள்ள கல்வியியலாளர்களை உள்ளடக்கி 6 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கற்றலும் கற்பித்தலும், மாணவர் - ஆசிரியர் ஒழுக்கம் (ஆற்றுப்படுத்துகை), ஆசிரியர்கள், நிர்வாகிகள் சம்பந்தமானவை' (நீதி தொடர்பானது) - (உத்தியோகத்தர் தேவைகள், மாணவர் தேவைகள்), கல்வி நிர்வாக அமைப்புக்களும் அதற்கான மாற்றீடுகளும், திட்டமிடல் மற்றும் தரவுகள் மையமான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என ஆறு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த 6 குழுக்களும் வடக்கு மாகாணத்தின் கல்வி சார் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளையும் இனங்கான உள்ளன. அதன் ஒரு கட்டமாகவே பொதுமக்கள் ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது அமைப்புகள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரிடமிருந்து கல்வி சார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிவுகளையும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

கருத்துக்கள், முன்மொழிவுகள் ஆகியவற்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாக கலாநிதி நா. எதிர்வீரசிங்கம், இணையக் கற்கை நெறி நிறுவனம், 66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அல்லது ethirveerasingam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (த-4)

### ஆட்கொணர்வு

கும்இடையில்சிங்களமொழியை மொழிபெயர்த்து உதவியதாகத் தெரிவிக்கப்படும் அருட்தந்தை பிரான்சிஸ், இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டார் என்று கூறப்பட்டது. அதன் பின்னர் அவரைப் பற்றிய தகவல்கள்எதுவுமில்லை.இந்நிலையில் அவர் தொடர்பில் ஆட்கொணர்வு மனு ஒன்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டன.

இந்த வழக்குடன், இராணுவத்திடம் சரணடைந்து, தகவல்கள் எதுவுமற்ற நிலையில் இருப்பவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேலும் 6 வழக்குகளும் நேற்றுப் புதன்கிழமை வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டாது.

இதன்போது அரச தரப்பினர் விளக்கமளிப்பதற்கான கால அவகாசம் கோரியதையடுத்து, இந்த வழக்குகளை அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.


இதேவேளை, அருட்தந்தை பிரான்சிஸ் தொடர்பான ஆட்கொணர்வு மனு தொடர்பான விசாரணைகளை அவதானிப்பதற்கும், ஏனைய ஆட்கொணர்வு மனுக்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்குமாக, சுமார் 20 பேர் வரையிலான அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் இந்த வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றத்தில் பார்வையாளர் பகுதியில் முன்னிலையாகியிருந்தனர்.

மன்னார் மற்றும் யாழ். மறை மாவட்டங்களைச் சேர்ந்த அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளுமே இவ்வாறு கூடியிருந்தனர்.

இந்த வழக்குகளில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் மற்றும் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம் மற்றும் நிசாந்தன் ஆகியோர் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகினர். (ஐ)

# இராமநாதன் மகளிர், யாழ். இந்து இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன






யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும்,ஆண்கள் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி அணியும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கானஅரையிறுதியாட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதிக் கொண்டது. இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 26:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான அரையிறுதி யாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 72:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## பொமர்ஸ், நவஜீவன்ஸ் அசத்தலான ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக.24

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத் திலிருத்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் நட்சத்திர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

## யங்கம்பன்ஸ், றோயல் அணிகள் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.24

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் நட்சத்திர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.24

முன்னாள் மாணவ முதல்வர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர்சபை நடத்தும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது ஆண், பெண் இருபாலாருக்கமான கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி யாட்டங்கள் இன்று வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளன. ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

மாலை 3 மணி (பெண்கள் பிரிவு)

யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

மாலை 4மணி (ஆண்கள் பிரிவு)

யாழ்.மத்திய கல்லூரி அணி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

(த-23)

## உடுவில் கோட்ட அணிகளின் ஆட்டங்கள்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

16 வயதுப் பிரிவு

குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (த-86)

## கரவெட்டி , நல்லூர் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறின



மாங்குளம், ஒக்.24

யாழ்.மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்படும் அரச அதிபர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் , நல்லூர் பிரதேச செயலக அணியும் அரை இறுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குஞ்சர்கடை ஹொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதல் காலிறுயாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியதிலிருந்து ஆதிக்கம் செலுத்தியது கரவெட்டி பிரதேச செயலக அணி. கரவெட்டி பிரதேச செயலக அணி வீரர் ஜெஜிம்பன் 7 ஆவது. 13 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அசத்தினார்.

இதனால் இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது கரவெட்டி பிரதேச செயலக அணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

அதன் பின்னர் 12 ஆவது நிமிடத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணி வீரர் சதீஸ்கரன் "ஒரு கோலைப் போட்டார்.

அதன் பின்னர் சங்கானை பிரதேச செயலக அணியின் முன்னேற்றங்களை கரவெட்டி பிரதேச செயலகத்தின் பின்கள வீரர்கள் சிறப்பாக தடுத்தமையால் கோல் எதனையும் பெற முடியாமல் போக ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் சங்கானை பிரதேச செயலக அணியை வீழ்த்தி கரவெட்டி பிரதேச செயலக அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

அடுத்த காலிறுதி ஆட்டத்தில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. இதில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. இருந்த போதும் இரு அணியினரும் கோல்போடும் வாய்ப்புக்களை நழுவ விட்டனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளும் கோல் எதனையும் போடாது சமநிலையில் காணப்பட்டன.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது நல்லூர் பிரதேச செயலக அணி வீரர்கள் புதிய வியூகங்களை அமைத்து மோதினர். இருந்த போதும் அணியின் பிற்பாதி ஆட்டம் நெடுந்தீவு அணிக்குச் சாதகமாக இருந்த போதும் களவீரர்களால் கோல் பெறும் முயற்சிகள் தடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதனால் ஆட்ட நேரம் முடியும் வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இதனால் இறுதியில் சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (த-422)



உடுவில் மகளிர் கல்லூரியின் 189 வருடகால வரலாற்றில் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் முதல் தடவையாக பதக்கம் ஒன்றைக் கல்லூரியின் மாணவி கமலினி மில்ஸ் பெற்றுக்கொண்டார். இவர் 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவரையும் மற்றும் தேசிய மட்டத்தில் இடம் பெற்ற 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு தேசிய மட்டத்தில் 7 ஆம் இடத்தைப் பெற்ற அணியினரையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் மற்றும் வலிகாமம் கல்வி வலய பதில் உடற் கல்விப் பணிப்பாளர் திருமதி கே.கோசலை மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருடன் வீராங்கனைகள். (த-86)



## இஷாந்தை ஓரங்கட்டுவாரா சகீர்கான்?

இந்திய அணிக்கு மீண்டும் சகீர்கானைத் தெரிவு செய்வதற்கான முயற்சிகள் நடப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான்(வயது 35).

போதிய உடற்தகுதி இல்லாததன் மோசமான உடற்தகுதி காரணமாகக் கடந்த ஆண்டு கொல்கத்தாவில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்குப் பின் இந்திய அணியில் இருந்து சகீர்கான் நீக்கப்பட்டார். இதனையடுத்து பிரான்ஸ் பயிற்சியாளர் டிம் எக்செட்டரிடம் சென்று கடுமையான முயற்சிக்குப் பின் மீண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் 'ஏ' அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் சிறப்பான பந்துவீச்சின்மூலம்இந்தியஅணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார்.

இந்நிலையில் ரஞ்சி கிண்ணப் போட்டியில் மும்பாய் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே இஷாந்த் சர்மா சொதப்பி வருவதால், வருகிற நவம்பர் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் சகீர்கான் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கேற்ப சகீர்கான் விளையாடும் போட்டியை நேரில் காண இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவுக் குழுவினர் முடிவுசெய்துள்ளனர்.

இது குறித்து நிர்வாகி ஒருவர் கூறுகையில், சகீர்கான் திறமையில் எங்களுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அவரது உடற்தகுதி எப்படி உள்ளது என்று தான் பார்க்க வேண்டும்.

இதற்காக இந்திய அணி தெரிவுக்குழுவில் இருந்து ஒருவர், அவரது செயற்பாட்டை நேரில் பார்க்கவுள்ளார்.


இப்போதைய நிலையில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நமது வேகப்பந்து வீச்சாளர்களின் செயற்பாட்டினைப் பார்க்கும் போது சகீர்கான் சிறப்பாகச் செயற்படுவார் என தெரிவித்துள்ளார். (து)

## தொடரும் குற்றச்சாட்டுகள்



இந்தியக் கிரிக்கட் அணியின் பந்துவீச்சாளர் இசாந்த் சர்மா மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள் ளன. இறுதியாக ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இசாந்த் சர்மா ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 30 ஓட்டங்களை வழங்கி ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றி பெற்றுக் கொடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இந்தநிலையில் கடந்த 6 ஆண்டு களாக அவர், தமது பயிற்சியாளரான சரவண்குமா ரைச் சென்று சந்திக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனவே தான் தமது குறைகளை அவரால் திருத்திக் கொள்ளமுடியவில்லை என்று முன்னாள் இந்திய பந்து வீச்சாளர் மனோஜ் பிரபாகர் சுட்டிக்காட்டியுள்ளார். (து)

# 4ஆவது இடம் எனக்குத்தான்



*கடந்த இரு போட்டிகளில் நான் சிறப்பாக விளையாட வில்லை என்றாலும் அணி யில் 4ஆவது இடம் எனக்கானது என்பதில் உறுதி யாக உள்ளேன்*

இந்திய அணியில் தான் களமிறங்கும் 4ஆவது இடம் தனக்கு தான் ஏற்றது என்றும், வேறு யாருக்கும் கிடையாது எனவும் சுரேஷ் ரெய்னா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் காயம் காரணமாக யுவராஜ் சிங் பங்கேற்கவில்லை, இதனை தொடர்ந்து சுரேஷ் ரெய்னா களமிறக்கப்பட்டார்.

இதன் பின்னர் யுவராஜ் அணிக்கு திரும்பி மீண்டும், தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார். அதாவது கடந்த உலகக் கிண்ணப் போட்டிகள் வரை ஒருநாள் போட்டிகளில் யுவராஜ் சிங் 4ஆவது வீரராகவும், ரெய்னா 5ஆவது வீரராகவும் களமிறங்கி வந்தனர்.

பிறகு புற்றுநோய் சிகிச்சை காரணமாக சில காலம் அணியில் பங்கேற்காத யுவராஜின் இடத்தை ரெய்னா நிரப்பி வந்தார், அதாவது 4ஆவது வீரராக களமிறங்கி அசத்தி வந்தார்.

இதற்கிடையே 2011ஆம் ஆண்டில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின் போது பந்து வீச்சாளர்களின் குறுகிய பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் திணறியதால் டெஸ்ட் போட்டிகளில் தனக்கான இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளத் தவறினார்.

இந்த நிலையில் தற்போது அணிக்கு திரும்பியுள்ள யுவராஜ் சிங்கின் வரவாலும், கடந்த இரு போட்டிகளில் ரெய்னா சரியாக விளையாடாமல் போனதாலும் 4ஆவது இடத்தில் யாரை இறக்குவது என சர்ச்சை எழுந்துள்ளது.

இந்நிலையில் ரெய்னா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், 4ஆவது இடத்தில் நான் சிறப்பாக விளையாடி வருவதாகவே கருதுகிறேன்.

கடந்த இரு போட்டிகளில் நான் சிறப்பாக விளையாட வில்லை என்றாலும் அணியில் 4ஆவது இடம் எனக்கானது என்பதில் உறுதியாக உள்ளேன் எனக் கூறியுள்ளார். இது குறித்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அணித்தலைவர் டோனி, யுவராஜ் சிங் தான் 4ஆவது இடத்துக்கான சிறந்த தெரிவாக இருக்கும்.

ஆனால் ஒருவேளை அவர் 2015 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கமுடியாமல் போனால், அவரது இடத்தை நிரப்ப ரெய்னா தான் சரியாக இருப்பார் எனத் தெரிவித்துள்ளார். (து)



## செரீனா வில்லியம்ஸ் முதல் சுற்றில் வெற்றி

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் உலக ரென்னிஸ் சம்மேளன கிண்ணத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியுள்ளார்.

உலக ரென்னிஸ் சம்மேளன கிண்ணத் தொடர் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெறுகின்றது. இதன் மகளிருக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டி ஒன்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மற்றும் ஜேர்மனியின் எஞ்சலீக் கேர்பர் ஆகியோர் மோதினர்.

போட்டியின் ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய செரீனா இரண்டு செற்களையும் தன்வசப்படுத்தினார். முதல் செற்றை 6:3 என்ற கணக்கிலும் இரண்டாம் செற்றை 6:1 என்ற கணக்கிலும் கைப்பற்றிய செரீனா அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (து)



## சச்சினுக்கு 500 ரிக்கெற்

சச்சினின் 200ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியை நேரில் பார்த்து ரசிக்க உலகளவில் கிரிக்கெட் ரசிகர்கள் அலை மோதுவதால் ரிக்கெற்றுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மும்பாய் கிரிக்கெட் சங்கத் தலைவர் சரத் பவார் கூறுகையில், சச்சினின் கடைசிப் போட்டியைப் பார்க்க, உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் ரிக்கெற் கிடைக்குமா என்று ஆவலோடு விசாரித்து வருகின்றனர்.

ஆனால், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உட்பட பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி கணிசமான ரிக்கெற்றுகளை ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இதனால் ரசிகர்களுக்கு எவ்வளவு ரிக்கெற்றுகள் கிடைக்கும் என்பதைக் கூற இயலாது. சச்சினுக்கு மட்டுமே 2000 ரிக்கெற்றுகளை ஒதுக்கி உள்ளதாக வெளியான தகவல் தவறானது. உண்மையில் அவர் ஒரு ரிக்கெற் கூட வேண்டும் என்று கேட்கவில்லை. எனினும், அவருக்கு 500 ரிக்கெற் வழங்க முடிவு செய்துள்ளோம். சச்சினின் அத்தனை சாதனைகளையும் உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை அச்சிட்டு வழங்க நாக்பூரை சேர்ந்த பதிப்பகம் ஒன்று முன்வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் மும்பாய் கிரிக்கெட் சபை சார்பில் புறநகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள கிளப் ஹவுசுக்கு சச்சின் பெயரை சூட்டவும் மும்பாய் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது. (து)

# கடும் பாதுகாப்புடன் சச்சினின் 199 ஆவது டெஸ்ட் போட்டி



கொல்கத்தாவில் நடைபெற உள்ள சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுமூச்சில் நடைபெற்று வருகிறது.

சச்சின் டெண்டுல்கர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்தது நாம் அறிந்ததே. இவர் விளையாடும் 199 மற்றும் 200ஆவது டெஸ்ட் போட்டிகள் கொல்கத்தா மற்றும் மும்பாயில் நடக்கவிருக்கிறது.

கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்க உள்ள போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிப்பதற்காக சி.ஏ.பி மற்றும் பி.டபிள்யு.டி பிரிவு உயர் அதிகாரிகள் கொண்ட குழு மைதானத்தை பார்வையிட்டது.

மேலும் ஈடன் கார்டன் அருகில் உள்ள மலைத்தொடரில் ஷாத் திருவிழா நடைபெறவிருப்பதாலும் கூட்டத்தைச் சமாளிப்பது பொலிஸாருக்குப் பெரும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. போட்டி தொடங்கும் அதே நவம்பர் 6ஆம் திகதி தான் ஷாத் பூஜா தொடங்க உள்ளது.

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் இந்தப் போட்டியைக் காண வருகின்றனர். கொல்கத்தா முதல்வர் மம்தா பனர்ஜியும் போட்டியைக் காண வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே போன்று போட்டியின் கடைசி நாள் அன்று கொல்கத்தா சினிமா விழாவும் நடைபெற உள்ளதால், போக்கு வரத்துப் பிரச்சனைகளுக்கான ஒரு விரிவான திட்டத்தை வகுத்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

போக்குவரத்தைக் கண்காணிக்க முக்கியமாக சி.சி.ரி.வி கமராக்கள் பயன்படுத்தப்படுகிறன. அத்துடன் தானியங்கி விமானங்கள் மூலமும் போக்குவரத்து கண்காணிக்கப்பட உள்ளது. மைதானம் மற்றும் வீரர்கள் தங்கவுள்ள நட்சத்திர விடுதியில் துப்பாக்கி ஏந்திய அதிரடிப்படை மற்றும் கொமாண்டோ படையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சச்சின் விளையாடும் போது எந்தவித கவனச்சிதறலும் ஏற்படாமலிருக்க, வீரர்கள் விளையாடும் போது பார்வையாளர்கள் மைதானத்துக்குள் நுழைய முடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நடக்கவுள்ள இப் போட்டியை காண உலகம் முழுவதிலும் உள்ள சச்சின் ரசிகர்கள் ஆர்வமுடன் உள்ளனர். (த)

**சச்சின் விளையாடும் போது எந்தவித கவனச்சிதறலும் ஏற்படாமலிருக்க, வீரர்கள் விளையாடும் போது பார்வையாளர்கள் மைதானத்துக்குள் நுழைய முடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது**

# மழையால் கைவிடப்பட்டது இந்தியா- ஆஸி. ஆட்டம்



இந்திய- ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ராஞ்சியில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் சர்வதேசப் போட்டி மழை காரணமாக முடிவு எட்டப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் டோனி, ஆஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதனை அடுத்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி ஆரம்ப இலக்குகளை வேகமாக இழந்து தடுமாறியது. ஒரு கட்டத்தில் 14.3 பந்துப் பரிமாற்றங்களில் 71 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

அடுத்து இணை சேர்ந்த ஆஸ்திரேலிய அணித் தலைவர் பெய்ல்லியும், மார்க்ஸ் வெல்லும் அணியின் நிலையுணர்ந்து பொறுமையாகவும் அதே நேரம் அதிடியாகவும் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இவர்கள் இருவரும் இணைந்து 153 ஓட்டங்களை இணைப்பாட்டமாக தமக்குள் பகிர்ந்து கொண்டனர். இதில் 94 பந்துகளைச் சந்தித்த பெய்ல்லி 3 ஆறு ஓட்டங்கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 98 ஓட்டங்களைப் பெற்று வெறும் இரண்டு ஓட்டங்களால் சதமடிக்கும் வாய்ப்பை பறி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேற சிறிது நேரத்தில் 77 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த மார்க்ஸ்வெல்லும் களத்தைவிட்டு வெளியேறினார்.


இறுதியில் 8 இலக்குகளை இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது ஆஸ்திரேலிய அணி.

இதனைத் தொடர்ந்து 296 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 4.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. இதில் தவான் 14 ஓட்டங்களுடனும், சர்மா 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

மழை விடாமல் தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் தொடர முடியாத நிலையில் முடிவுகள் எட்டப்படாத நிலையில் கைவிடப்பட்டது.



ஏழு போட்டிகள் கொண்ட இத்தொடர் 2:1 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய முன் னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (400)




## விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கல் (கருங்கல் சல்லியில் அறுக்கப்பட்ட)விற்பனைக் குண்டு. விலை, 37ரூபா
விநியோகிப்பதற்கு 40ரூபா
தொடர்பு: 078 615 5929, 021 320 5939

## முத்தான வாய்ப்புக்கள்

- கனடாவில் படிக்க 3 இலட்சம் வரை உழைக்க 3 வருட விசா பெற 7 பேருக்கு வாய்ப்பு.
- இத்தாலியில் படிக்க உழைக்க ஒரு வருட விசா பெற சட்ட ஆலோசனை.
- ஐரோப்பிய நாடான போலந்தில் படிக்க உழைக்க வெறும் 7 இலட்சம் போதும்.
- IELTS இல்லாமலே நியூசிலாந்தில் படிக்க வாய்ப்பு - 2 வருடத்தில் PR பெற வாய்ப்பு.
- சைப்பிரசில் படிக்க மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்க அதிரடி வாய்ப்பு. - IELTS தேவையில்லை.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(33238)
(7.6.3)

## Sanken (Northern Branch)

having following Vacancies at Killinochchi and Mullaitivu sites.

- **Site Managers:**
  Degree/Diploma in Civil Engineering and must have 5 years experience in building construction.
- **Site Administrative Officers:**
  Diploma in Administration and must have 2 years experience in building construction.

(சி13172-5,6)

Apply to
jayanthi@sankenconstruction.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.